''உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு''

(ஆமோஸ் 4 : 12)

தேவஎக்காளம்



Vol No. 31 ஜனுவரி To மார்ச் 1999 No. 1 To 3

இந்த இதழின் முகப்பு அட்டையில் நீங்கள் காண்கின்ற வாழையும் அதின் இரு கன்றுகளான படம் சில ஆண்டு காலத்திற்கு முன்பாக ஒரு தினசரி செய்தி தாளில் வெளியான படமாகும். அதை நான் வெட்டி எடுத்து பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளும்படியாகவும் அதில் ஒரு தேவச் செய்தியை உங்களுக்கு தரப்போவதாகவும் தேவ ஆவியானவர் என்னிடம் கூறினார். இந்த வாழை மரத்தைக் கொண்டு என்ன செய்தியை ஆவியானவர் நமக்கு தரப்போகின்றார் என்று நான் எனக்குள்ளாக அன்று ஆச்சரியமடைந்ததுண்டு. ஆனால், நான் அதிசயிக்கத்தக்கவிதமாக சமீபத்தில் அதற்கான தேவசெய்தியை அவர் எனக்கு அளித்தார். கர்த்தர் தந்த செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றேன்.

சமீபத்தில் ஒரு அருமையான கிறிஸ்தவ சகோதரனிடம் நான் பேசிக் கொண்டிருந்தேன். தனது குடும்ப வாழ்வின் கண்ணீர் பிரச்சினைகளை அவர்கள் உள்ளம் திறந்து என்னிடம் கொட்டினார்கள். அவர்கள் என்னிடம் சம்பாஷித்துக்கொண்ட சம்பாஷனையின் மொத்தத்தை சுருக்கமாக உங்களுக்கு எழுதுகிறேன். ''எனது குடும்ப வாழ்வில் எனக்கு மனைவியும், பிள்ளைகளும் உண்டு. எனினும் எனது குடும்ப வாழ்வில் எனது மனைவி எனக்கு துரோகம் பண்ணிய காரணத்தால் எனக்கு சந்தோசமும், மகிழ்ச்சியும், சமாதானமும் கிடையாது. எனக்கு எனது மனைவி துரோகம் பண்ணி ஒரு குமாரனைக் கூட தவறுதலாக பெற்றுள்ளாள். அதற்காக நான் அவளை தள்ளிவிட விரும்பவில்லை. அவளை நான் முழு மனதார நேசிக்கின்றேன். அவளுடைய பாவ அக்கிரமத்துக்கு அவள் ஆண்டவரிடம் கணக்கு கொடுக்கட்டும். துன்மார்க்கமாக அவள் பெற்ற அந்த ஆண் குழந்தையையும் நான் எனது மற்ற பிள்ளைகளைவிட அதிகமாக நேசிக்கின்றேன். எனது மற்ற பிள்ளைகளைவிட என்னை அதிகமாக நேசிப்பவன் அவன்தான். இரவில் என் அருகில் படுத்திருப்பவனும் அவன்தான். காலையில் படுக்கை யிலிருந்து எழும்பும்போது நான் பெற்ற பிள்ளைகள் கூட ''அப்பா'' என்ற குரலோடு எழும்ப மாட்டார்கள். ஆனால், அந்த மகன் ''அப்பா'' என்ற குரலோடுதான் படுக்கையிலிருந்து எழும்புவான். அதற்காக நான் மிகுந்த சந்தோசம் அடைகின்றேன். ஆனால், எனக்கு அந்த மகனைக்கொண்டு ஒரு மகா பெரிய சஞ்சலம் என்னவென்றால் அவன் வளர, வளர தனது தகப்பனை அந்த துன்மார்க்கனுடைய சாயலில் வளருகின்றான் என்பதுதான். மற்றப்படி எனக்கு ஒரு வருத்தமும் கிடையாது'' என்று கூறினார்கள்.

உடனே நான் இடைமறித்து ''அந்த மகன் அந்த மனிதனுக்குத் தான் பிறந்தான் என்று நீங்கள் எப்படி உறுதியாக கூறமுடியும்?'' என்று கேட்டேன். அதற்கு அவர்கள் ''எனது மனைவி கூட ஆரம்பத்தில்

இதின் காரணமாக என்னை ஏமாற்ற முயற்சித்தாள். ஆனால், நான் அந்த மகனை மருத்துவ பரிசோதனைக்கு அழைத்துச் செல்லப்போவதாக கூறியபோது தனது அக்கிரமத்தை என்னிடம் அறிக்கையிட்டு தனது பாவத்தை முழுமையாக ஒப்புக்கொண்டாள். அத்துடன் அந்த மகன் இப்பொழுது தனது தகப்பனது சாயலை தாங்கி வளர்ந்து வருவதால் அவள் எந்த ஒரு மறுப்பும் சொல்ல இடமில்லை'' என்று சொன்னார்கள். ஐயோ, கிறிஸ்தவ குடும்பங்களில் காணப்படும் மதிகேடான கொடிய காரியங்களை பார்த்தீர்களா ! அநேக கிறிஸ்தவ குடும்பங்களில் தேவன் அருவருக்கும் இந்தவிதமான வேசித்தன காரியங்கள் இன்று மலிந்து கிடக்கின்றன.

அந்த சகோதரன் தனது பேச்சில் சொன்ன ஒரு வார்த்தையை நீங்கள் கவனித்திருப்பீர்கள். ''எனது மகன் வளர, வளர அந்த துன்மார்க்கனுடைய சாயலில் வளருகின்றான்'' என்பதுதான். இந்த வார்த்தை அவர்கள் வாயில் இருக்கும்போதே தேவ ஆவியானவர் சில ஆண்டுகளுக்கு முன்பாக எனக்குத் தருவதாக சொன்ன வாழை மரமும் அதின் கன்றுகளான படத்துக்கு செய்தியை எனது உள்ளத்தில் கொடுக்கத் தொடங்கினார். முகப்பு படத்தில் நீங்கள் காணும் அந்த இரு வாழைக்கன்றுகளும் தங்களது பெற்றோரான வாழையைப் போலவே காணப்படுகின்றன. எந்த ஒரு மாற்றமும் இல்லை. காலப்போக்கில் அவைகள் வளர்ந்து முற்றுமாக தங்களது பெற்றோரான வாழைகளாகி விடுகின்றன.

தேவனுகிய கர்த்தர் ஒரு கிறிஸ்தவனிடம் எதிர்நோக்குவதும் இதையேதான். நாம் நமது கிறிஸ்தவ வாழ்வில் வளர, வளர இயேசுவின் சாயலை பிரதிபலித்துக்கொண்டே வளரவேண்டும். ஒரு பூலோக தகப்பன் தனது குமாரன் தனது சாயலில் வளர எத்தனை ஆவலாக இருக்கின்றான்! தனது சாயலை தனது மகனில் எத்தனை துடிதுடிப்பாக எதிர்நோக்கு கின்றான். பூலோகத்தில் உள்ள ஒவ்வொரு தகப்பனுக்கும் அநேகமாக இந்த ஆசை இருப்பதை நாம் காணமுடியும்.

ஒரு மாலை நேரம். திடீரென ஒரு கிறிஸ்தவ வீட்டிற்குச் சென்றேன். அங்கே நான் கண்ட காட்சி என்னவெனில் அந்த வீட்டின் கிறிஸ்தவ சகோதரனும், சகோதரியும் தங்கள் பிள்ளையை தங்களுக்கு முன்பாக கிடத்தி வைத்து ஒரு பெரிய வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தனர். அந்த குழந்தையானது நிச்சயமாக தனக்கு பிறந்தவன் அல்ல என்பது சகோதரனுடைய வாக்குவாதம். எவ்வளவு நேரம் இருவரும் சண்டை யிட்டார்களோ கர்த்தர் ஒருவரே அறிவார். நான் போனதும் அந்த சண்டை அமர்ந்தது. சகோதரனே, சரியான நேரத்தில் வந்தீர்கள். உங்கள் வாக்கு தெய்வ வாக்காக இருக்கட்டும். இந்த குழந்தை யார்

www.youvanam.com

சாயலில் இருக்கின்றான் ?'' என்று அந்த சகோதரி என்னைப்பார்த்துக் கேட்டார்கள். நாவின் பிரதியுத்தரம் கர்த்தரால் வரும் என்ற தேவ வார்த்தையின்படி நான் அவர்கள் இருவரின் நிலையை புரிந்துகொண்டு ''குழந்தை தனது தந்தையின் சாயலாகவே இருக்கின்றான்'' என்றேன். அந்த நேரத்தில் நான் அதை தவிர வேறு எதைக்கூறியிருந்தாலும் அவர்கள் இருவரும் தங்கள் வாழ்நாள் காலமெல்லாம் தங்களுக்குள் சண்டையிட்டுக்கொண்டேதான் இருப்பார்கள். நான் ஒருக்கால் தவறுக சொல்லியிருந்தாலும் கர்த்தர் அதை எனக்கு ''எகிப்தின் மருத்துவச்சி களுக்கு மன்னித்ததுபோலவும்'' (யாத் 1 : 19) ''ராகாப் வேசிக்கு மன்னித்ததுபோலவும்'' (யோசு 2 : 5) மன்னிப்பாராக. ஆ, ஒரு பூலோக தகப்பன் தனது சந்தானம் தனது சாயலாக காணப்படவேண்டும் என்று எத்தனையாக ஆவல் கொண்டுள்ளான்.

ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் அதின் தலைவன் தனது பிள்ளைகளில் ஒருவன் மாற்றானுக்கு பிறந்தவன் என்ற நிச்சயத்தில் அவன் பேரில் எத்தனை எரிச்சலாக இருந்தார் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள் ! தகப்பன் கண்களுக்கு முன்பாக அந்த மகன் நிற்கவே கூடாது. தனது கண்களில் அவன் தென்பட்டால் அவனை அடித்து நொறுக்கிவிடுவார். தகப்பனுக்கு தெரியாமல் வீட்டிற்கு வந்து தனது தாயிடம் ஆகாரம் வாங்கி சாப்பிட்டுவிட்டு ஓடிவிடுவான். தகப்பனுடைய கண்களிலே அவன் தென்படவே மாட்டான். எத்தனை கொடூரமான காரியம் பாருங்கள் ! மனைவி செய்த பாவத்துக்கு இந்த மகன் தண்டனை அனுபவிக்கின்றான்.

தேவனுடைய பரிசுத்த வேதாகமத்திலே ''உன்னை ஜெநிப்பித்த கன்மலையை நீ நினையாமற் போனாய், உன்னைப்பெற்ற தேவனை மறந்தாய்'' (உபா 32:18) என்ற ஒரு அருமையான தேவ வசனம் உண்டு. இந்த வசனத்திலிருந்து நம்மை ஜெநிப்பித்ததும், நம்மைப் பெற்றதும் நம் தேவன் என்பதை நாம் திட்டமாக கண்டுகொள்ள முடியும். அப்படியானால், நாம் வளர, வளர நம்முடைய தேவனின் சாயல் நம்மில் காணப்படவேண்டும் அல்லவா? நான் பெற்ற எனது குமாரன் எனது சாயலை தாங்கி வளர்ந்து வருகின்றானா என்று தேவனுடைய கண்கள் நம்மையே நோக்கியவண்ணமாக இருக்கின்றன. தேவன் பெற்ற பிள்ளைகளாகிய நாம் நமது சாயலில் தேவனது கொடிய எதிராளியாகிய பிசாசின் முகரூபத்தை பிரதிபலித்து வளர்ந்து வருவோ மானால் தேவனுக்கு அது எத்தனை துக்கமாக இருக்கும் !

பாவஞ்செய்கிற நம்முடைய கிறிஸ்தவ மக்களே கவனித்துப் பாருங்கள். மற்றவனுடைய அன்பான மனைவியை தனக்கென அபகரித்து அவளோடு அந்தரங்கத்தில் வேசித்தன வாழ்க்கை நடத்தி வரும் மக்களே கவனியுங்கள். தேவனுடைய வீட்டை கள்ளர் குகையாக்கி

அதை தங்கள் சுயநலன்களுக்காக பயன்படுத்தி வாழும் மக்களை பாருங்கள். தேவனுடைய பரிசுத்தமான ஊழியத்தை உலகப்பிரகார மான தங்களது ஒரு அலுவலாக எண்ணி பணம் காசுக்காக ஊழியம் செய்யும் தேவ ஊழியர்களுடைய முகங்களை உற்று நோக்குங்கள். திருச்சபையில் உயர்ந்த ஸ்தானங்களில் இருந்துகொண்டு தேவனுடைய ஊழியம், சமூக சேவை என்ற பெயரை கூறி வெளிநாடுகளிலிருந்து திரண்ட பணங்களை வாரிக்கொண்டு வந்து தங்களுக்காக பல அடுக்கு மாளிகைகளை கட்டி நிலபுலங்களை தங்களுக்கென வசப்படுத்தும் மக்களு டைய முகச்சாயலை கூர்ந்து பாருங்கள். அங்கே அவர்களுடைய பிதாவாம் சாத்தானின் சாயல் முத்திரை குத்தப்பட்டிருப்பதுடன் அவர்கள் முகங்கள் இருள்மண்டி கிடப்பதையும் நீங்கள் எளிதாக காணலாம். பாவஞ்செய்கிற எவனும் பிசாசினால் உண்டாயிருந்து அவனும் பிசாசாகவே இருப்பதாகத்தானே தேவ வார்த்தை கூறுகின்றது. பாவம் செய்து பாவத்துக்கு அடிமையானோர் அனைவரின் நிலையும் இதுவேதான்.

தேவனை நோக்கிப்பார்த்து பிரகாசம் அடைய வேண்டிய அவர்களின் முகங்கள் (சங் 34 : 5) உலகத்தையும், உலகம் அளிக்கும் பாவ அசுத்த இன்பங்களை அல்லவா ஆவலோடு உற்று நோக்குகின்றன !

இயேசுவின் பிரசன்னம் நம்மில் காணப்பட நாம் என்ன செய்ய வேண்டும்?

எந்த ஒரு மனுஷனையும் பிரகாசிக்க செய்பவர் தேவன் ஒருவரே. ''எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி'' (யோ 1 : 9) என்றார் யோவான். நம்மை சாத்தானுடைய இருளின் அந்தகாரத்தினின்று தமது ஆச்சரியமான ஒளியினிடத்துக்கு கொண்டு வந்தவர் தேவன் என்று அப்போஸ்தலனாகிய பேதுரு தமது நிருபத்தில் எழுதுவதை நாம் பார்க்கலாம் (1 பேதுரு 2 : 9) ''என்னை பின்பற்று கிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்'' (யோ 8 : 12) என்றார் நமது அருமை இரட்சகர். ஆண்டவர் இயேசுவை உத்தமத்தோடும், உண்மையோடும் பின்பற்றுகிற அவரது பரிசுத்த அடியார்கள் அவரது முகப் பிரகாசத்தை தங்களிலும் நிச்சயமாகப் பெற்றிருப்பார்கள்.

பேதுரு அப்போஸ்தலனை எடுத்துக்கொள்ளுங்கள். ஆண்டவர் இயேசுவோடு 3½ ஆண்டு காலமாக சஞ்சரித்தவர் அவர். தேவமைந் தனோடு வாழ்ந்த அவர் தேவ மைந்தனின் சாயலை தன்னில் பெற்றிருந் ததை மக்கள் எளிதாக காணமுடிந்தது. பிரதான ஆசாரியனுடைய அரண் மனையில் வேலை செய்த வேலைக்காரப் பெண்கள் கூட ஆண்டவர் இயேசுவோடு பேதுரு வாழ்ந்து வந்ததை எளிதாக அடையாளம் கண்டு விட்டனர். ஆண்டவர் பேசிய அந்த பரிசுத்தமான பரலோக பேச்சும்

கூட அப்போஸ்தலனுடைய நாவிலிருந்து வெளிவந்ததின் மூலம் அவரை அடையாளம் காண்பது மக்களுக்கு இன்னும் இலேசாக இருந்தது என்பதை தேவனுடைய வசனத்தில் நாம் வாசிக்கின்ரோம் (மத் 26 : 73)

இயேசு இரட்சகரை மக்கள் நம்மில் காணவேண்டுமானல் நாம் எப்பொழுதும் ஆண்டவர் இயேசுவோடு சஞ்சரித்துக்கொண்டே இருக்கவேண்டும். கர்த்தரோடு 40 நாட்கள் சீனாய் மலையில் இரவும் பகலும் தங்கியிருந்துவிட்டு கீழே இறங்கிவந்த மோசேயின் முகத்தில் தேவனுடைய பிரசன்னத்தின் ஒளியை இஸ்ரவேல் மக்கள் கண்டு தங்கள் முகத்தை மூடிக்கொண்டதை வேதாகமத்தில் நாம் வாசிக்கின்ரோம். பக்த சிரோன்மணி சாதுசுந்தர்சிங்கின் முகத்தில் தேவ பிரசன்னத்தின் ஒளி வீசக் காரணம் அவர் எப்பொழுதும் தேவனுடைய பாதங்களண்டை யில் அமர்ந்திருந்ததுதான். இரவும் பகலும் ஜெபமே தேவ மனிதனது மூச்சாக இருந்தது.

இயேசு இரட்சகரை பிறர் நம்மில் காண இது ஒன்றுதான் இரகசியம். வேரொன்றுமில்லை. கழுத்தில் பெரிய மரச்சிலுவை தொங்க வைத்துக் கொண்டு கரத்தில் செங்கோல் பிடிப்பதால் அந்த தேவ ஒளி நம்மில் காணப்படாது. பளிச்சிடும் வெண் வேஷ்டி உடுத்தி வெள்ளை ஜிப்பா அணிந்து கரத்தில் வேதாகமத்தை எடுத்துக்கொள்ளுவதால் அந்த மகிமையின் தேவப்பிரசன்னம் நம்மில் தோன்றிவிடாது. வெண்மையான கால்சட்டை, சேட் போட்டு சட்டையில் ''இயேசுவே இரட்சகர்'' என்ற பாட்ஜை நாம் குத்திக்கொள்ளும் காரணத்தால் புறமதஸ்தர் நம்மில் நமது இரட்சகர் இயேசுவை காண இயலாது.

ஒரு குடியானவன் தான் வளர்த்து வந்த புருக்களுக்கு நேரத்துக்கு நேரம் தானியம் கொடுப்பதை கண்ட திருட்டு காகம் ஒன்று தானும் அந்த புருக்களில் ஒன்ருக மாற வெகுவாக ஆசைப்பட்டு ஒரு திட்டம் தீட்டத் தொடங்கியது. இறுதியாக அதற்கு ஒரு யுக்தி பிறந்தது. அது நேராக குப்பை மேட்டுக்குச் சென்று குப்பையில் நன்கு உருண்டு புரண்டு தனது உடம்பு முழுவதும் புருவின் நிறமான சாம்பல் நிறத்தில் குடியானவனுடைய புருக்களுடன் சேர்ந்து அவைகளுடன் மகிழ்ச்சியாக உணவை தின்றது. குடியானவன் புருக்களைப் பார்த்தபோது குறிப்பிட்ட ஒரு புரு மாத்திரம் புருவைப்போல நடவாமல் காகத்தைப்போல கால் தென்னி, தென்னி ஒழுங்கீனமாக நடப்பதைக்கண்டு அந்த திருட்டு காகத்தை கல் எறிந்து துரத்தினான் என்று ஒரு கதை உண்டு. கதைக்கு ஏற்ருப்போல மேற்கண்ட காகத்தைப்போன்று நாம் நமது புறம்பான அலங்கரிப்பால் அல்லது மதுரமான நமது வார்த்தைகளால் இயேசுவின் அடியார்கள் என்று நம்மை காண்பித்தாலும் நமது வாழ்க்கை நடை நமது சுய உருவத்தை மக்களுக்கு வெட்ட வெளிச்சமாக காட்டிக்

கொடுத்துவிடும். அருமை இரட்சகரும் ''அவர்களுடைய கனிகளாலே அவர்களை அறிவீர்கள்'' (மத் 7 : 20) என்று எழுதி வைத்தார்.

என்னைக்காண்போர் உமைக்காணை உம் சாயல் எனில் வேண்டும்

தேவன் தம்முடைய நாம மகிமைக்காக மாத்திரம் நம்மை இந்த உலகத்தில் உருவாக்கினார் (ஏசாயா 43 : 7, 61 : 3, 60 : 2, 49 : 3) தம்முடைய மேலான நாமம் நம்மில் மகிமைப்படுவதை தேவன் ஆசை ஆவலோடு எதிர்நோக்குகின்றார். ''மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்களுக்கு முன்பாக பிரகாசிக்கக்கடவது'' (மத் 5 : 16) என்று கூறினார். இந்த உலகத்திலே நான் ஒருவரே மெய்யான கர்த்தர் என்பதற்கும், இந்த உலகத்திலே தோன்றிய எல்லா அவதாரங்களிலும் நான் ஒருவரே இன்றும் ஜீவிக்கிற மெய் அவதாரம் என்பதற்கும் நீங்கள்தான் எனக்கு சாட்சிகள் (அப் 2 : 32) என்று தேவன் நம்மை இந்த உலகத்தில் வைத்துள்ளார்.

ஆனால், மிகவும் விசனத்துக்குரிய காரியம் என்னவெனில் சாத்தான் நம்மை வைத்தே தேவனை தூஷிக்கின்றான். ஆண்டவரை தூஷிப்பது சாத்தானுக்கு மிகவும் சந்தோசமான காரியம். ''தேவனை தூஷித்து ஜீவனைவிடும்'' (யோபு 2 : 9) என்ற வார்த்தைகளை யோபுவின் மனைவியின் வாயில் போட்டவன் சாத்தானே ! தேவன் தூஷிக்கப்படும் இடத்தில் சாத்தான் இருப்பான். எந்த, எந்த சூழ்நிலைகளில் கர்த்தருடைய பிள்ளைகள் ஜீவனுள்ள தங்கள் ஆண்டவரை தூஷிப்பார்கள் என்பது சாத்தானுக்கு உள்ளங்கை நெல்லிக்கனியான பாடமாகும். யோபு பக்தனுடைய மாம்சத்தையும் எலும்பையும் தொட்டு சரீரத்தில் வியாதியை கொண்டு வந்தால் அவன் ஆண்டவரை தூஷிப்பான் என்பதை அவன் அறிந்து வைத்திருந்தான். (யோபு 2 : 5) ஆனால் அவனுடைய தந்திரம் பக்தன் யோபுவிடம் பலிக்கவில்லை.

கிறிஸ்தவ மார்க்கம் தோன்றிய முதல் நூற்றாண்டிலேயே கிறிஸ்தவர்கள் மூலமாக தேவனுடைய நாமம் தூஷிக்கப்பட்டதாக நாம் ரோமர் நிருபத்தில் பார்க்கின்றோம் (ரோமர் 2 : 24). இன்று அதின் வளர்ச்சியானது எங்கும் வியாபித்து பரவி இருக்கின்றது.

தேவன் பெற்ற மக்களாகிய நாம் பிசாசினுடைய முகச்சாயலை தாங்கி வளர்ந்து கொண்டிருக்கின்றோம். நாளுக்கு நாள் தேவ சாயலாக மாறி தேவனோடு இருக்கவேண்டிய நாம் பெயெல்செபூலின் முக ரூபத்தில் மாறி வருகின்றோம். இது சாத்தானுக்கு எத்தனை மகிழ்ச்சி என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? நம்மை ஆண்டவருக்கு காண்பித்தே அவரை வெட்கமடையச் செய்வான். நம்முடைய பரிசுத்தமற்ற வாழ்க்கையை கர்த்தருக்கு காட்டி, காட்டி அவரை தலைகுனியப்பண்ணுவான்.

வாசிக்கும் என் அன்பான தேவப்பிள்ளையே, இன்றே நாம் விழிப் படைவோம். நம்மைக்காண்பவர்கள் நம் இயேசுவை நம்மில் காண வேண்டுமே என்ற ஒரு பெரிய வாஞ்சையையும் கதறுதலையும், தேவன் நம்முடைய உள்ளத்தில் ஊற்ற பரத்தை நோக்கி மன்றாடுவோம்.

பல ஆண்டு காலத்திற்கு முன்பாக நான் பண்டிதை ராமாபாய் அம்மையார் தோற்றுவித்த முக்தி ஆச்சிரமத்தை காணச் சென்றிருந்த போது அங்கு தேவபணி செய்து கொண்டிருந்த டாக்டர் வீலா குப்தா என்ற ஒரு பரிசுத்தவாட்டியை சந்தித்தேன். வைராக்கியமான இந்து மார்க்கத்திலிருந்து ஆண்டவர் இயேசுவை தனது ஆன்ம மணவாளனாக ஏற்றுக் கொண்ட தேவப்பிள்ளை அவர்கள். அவர்களுடைய அருமையான சாட்சியை ''என் உள்ளம் கொள்ளை கொண்ட இன்ப ஜோதி'' என்ற தலைப்பிட்டு நான் கைப்பிரதி வெளியிட்டுள்ளேன். கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக. கர்த்தருக்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்ட அந்த பரிசுத்தவாட்டி திருமணம் செய்து கொள்ளவில்லை. அவர்களுடைய முகத்தை பார்ப்பவர்கள் எவரும் தேவனுடைய பரிசுத்த பிரசன்னத்தை கட்டாயம் காண இயலும்.

நான் முக்தி ஆச்சிரமத்தை முழுமையாக பார்த்துவிட்டு பம்பாய்க்கு புறப்படும் சமயம் அந்த அம்மையாரிடம் விடைபெற்றேன். அவர்கள் என்னைப்பார்த்து ''எனக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்'' என்றார்கள். நான் அதற்கு சம்மதித்தபோது அடுத்த வேண்டுகோளாக ''என்னைக் காண்பவர்கள் என் இயேசுவை என்னில் கண்டுகொள்ள ஜெபியுங்கள்'' என்று சொன்னார்கள்.

ஆ, எத்தனையான பரலோக ஆசை பாருங்கள். ஆஸ்தி, ஐசுவரியம், நாடுகள், நகரங்கள், சத்துருக்களின் பிராணனை கேட்காமல் கர்த்தாவின் இருதயத்துக்கு உகந்த காரியத்தை கேட்ட சாலமோனைப்போல தேவனுடைய உள்ளம் பூரிக்கும்படியாக தனது இருதய ஆவலை எனக்கு தெரிவித்தார்கள். ஓ, அந்த பரிசுத்தவாட்டியின் விருப்பமும், வாஞ்சையும், ஏக்கமுமே நமது ஒரே தாகமாயிருக்க தேவன் நமக்கு கிருபை செய்வாராக.

நாம் பரலோகம் செல்லும்போது நாம் எல்லாரும் நமது அருமை இரட்சகர் இயேசுவண்டை நின்று கொண்டிருப்போம். அப்பொழுது பிதாவாம் தேவன் தனது நேச குமாரனை நோக்கி ''என் மகனே, இந்தப் பிள்ளைகள் யார்?'' என்று கேட்பார். அப்பொழுது இயேசு இரட்சகர் ''பூலோகத்தில் நான் பெற்ற எனது பிள்ளைகள்தான்'' என்று பதில் சொன்ன உடனே யாக்கோபு தனது குமாரன் யோசேப்பின் பிள்ளைகளை அள்ளி அணைத்து முத்தமிட்டது போல (ஆதி 48 : 10) பிதாவாகிய தேவன் நம்மையும் அணைத்து முத்தமிடுவார். அல்லேலூயா. அந்த பரிசுத்த பாக்கியத்தை தேவன் உங்களுக்கும், பாவியாகிய எனக்கும் தந்தருள்வாராக.

"உனக்கு கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது. உன்னை சந்திக்கும் காலத்தை நீ அறியாமற்போனபடியால், உன் சத்துருக்கள் உன்னை சூழ மதில் போட்டு உன்னை வளைந்துகொண்டு, எப்பக்கத்திலும் உன்னை நெருக்கிவிடுவார்கள்" (லூக் 19 : 42, 43)

கர்த்தருக்குள் எனக்கு மிகவும் அருமையானவர்களே,

பாவிகளும், அக்கிரமக்காரரும், தேவனற்றவர்களும், நீசர்களும், இஸ்ரவேலின் காணியாட்சிக்கு புறம்பானவர்களுமாயிருந்த நம்மை கல்வாரி மாமலையிலும், சிலுவை மாத்திலும் தமது பரிசுத்த இரத்தம் முழுவதையும் முற்றுமாக வடித்துக்கொடுத்து நம்மை தமது சொந்த சம்பத்தாக்கி நீதியின் சால்வையை நமக்கு தரிப்பித்து இரட்சிப்பின் வஸ்திரங்களை நமக்கு உடுத்துவித்த நமது அருமை இயேசு தகப்பனின் பரிசுத்த நாமத்தில் உங்களை வாழ்த்துகின்றேன்.

கடந்த இதழில் வெளிவந்த பரிசுத்த மகாத்துமா சாது கொச்சுகுஞ்சு பிரசங்கியாரின் வாழ்க்கை சரித்திரம் உங்களில் பலருக்கும் ஆசீர்வாதமாக இருந்தமைக்காக கர்த்தருக்கு துதி செலுத்துகின்றேன். அப்படி வந்த கடிதங்களில் ஒன்றில் ஒரு பரிசுத்தமுள்ள தேவப்பிள்ளை இவ்விதமாக குறிப்பிட்டிருந்தார்கள் ''ஆகார விஷயமாக கொச்சுகுஞ்சு பிரசங்கியார் கூறியுள்ள வார்த்தைகள் என் இருதயத்தை வெகுவாக கவர்ந்தது. அதை வாசித்த உடனே நான் எனது பிள்ளைகளை அழைத்து உணவு உட்கொள்ளும் காரியத்தில் நாம் எவ்வளவு கட்டுப்பாடோடு நடந்து கொள்ள வேண்டும் என்று என் பிள்ளைகளுக்கு தேவ ஆலோசனை கூறினேன்'' என்று எழுதியிருந்தார்கள். கர்த்தர் இயேசுவுக்கே மகிமை உண்டாவதாக. நமது உணவுக்கும், நமது ஆவிக்குரிய பரிசுத்த வாழ்க்கைக்கும் வெகு நெருங்கிய சம்பந்தம் உண்டு. நமது வயிறு நாள் முழுவதும் வெற்றிடம் இல்லாமல் நிரப்பப்பட்டிருக்குமானால் நமது ஆவிக்குரிய வாழ்வில் நாம் ஒருக்காலும் முன்னேறவோ அல்லது கர்த்தருக்காக பயனுள்ள எதையும் சாதிக்கவோ ஒருக்காலும் இயலாது. ''ஒரு கிறிஸ்தவன் இந்த உலகத்தில் தன்னை ஒரு தேவதூதனாக கற்பனை செய்துகொண்டு ஒரு தேவதூதன் எவ்வண்ணமாக புசிப்பானோ, குடிப்பானோ அவ்விதமாக புசிப்பதும், குடிப்பதும் அவசியமாகும்'' என்ற சாது கொச்சுகுஞ்சு பிரசங்கியாரின் வார்த்தைகள் நமது மரணபரியந்தம் நமது காதுகளில் தொனித்துக்கொண்டே இருக்க கர்த்தர் நமக்கு துணை புரிவாராக.

''வயிற்றை நினைத்தவன் வாழமாட்டான்'' என்று நமது தமிழ் மூதாதையர்கள் கூறிய முதுமொழி அத்தனை பொருளில்லாத ஒரு சாதாரணமான வார்த்தையல்ல. வயிற்றை நினைத்தவன் இந்த உலகத்திலும் வாழ இயலாது. வரப்போகிற பரலோகத்திலும் அவன் வாழப்போவதில்லை. நீ போஜனப்பிரியனையிருந்தால் உன் தொண்டையை கத்தியால் குத்திகிழித்து மாண்டு போவது உனக்கு நலமாயிருக்கும் என்ற ஞானியின் வார்த்தையையும் நாம் இங்கே நினைவுகூற வேண்டியது அவசியமாகும்.

சாது கொச்சுகுஞ்சு பிரசங்கியார் அவர்களைக்குறித்து ஒரு பரிசுத்த விருத்தாப்பிய தாயார் ''நானும் எனது உடன் பிறந்த தம்பியும் அந்த பரிசுத்தவானுடைய கூட்டத்தில்தான் ஆண்டவர் இயேசுவை எங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டோம். அப்பொழுது நாங்கள் வாலிப பிள்ளைகள். எங்கள் சொந்த ஊரான மெய்ஞ்ஞானபுரத்தில் உள்ள மிஷன் உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் அந்த ஆவிக்குரிய கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தார்கள். கொச்சுகுஞ்சு பிரசங்கியார் இறந்த வருடத்தை நீங்கள் தவருக தேவ எக்காளத்தில் குறிப்பிட்டிருக்கின்றீர்கள்'' என்று எழுதியிருக்கின்ருர்கள். (தாயார் எழுதினதுபோல சாது கொச்சுகுஞ்சு இறந்த வருடத்தை 1920 என்று தேவ எக்காளத்தில் நான் தவருக எழுதிவிட்டேன். அந்தச் செய்தியை ஆங்கிலத்தில் எழுதியவர்களும் அந்த தவறை செய்திருப்பதை நான் கவனிக்காமல் செய்தியை தமிழில் மொழிமாற்றம் செய்துவிட்டேன். பரிசுத்தவான் இறந்த ஆண்டை 1945 என்று திருத்திக்கொள்ளுங்கள்)

வழக்கமாக நான் ஆண்டுதோறும் தேவபெலத்தால் மேற்கொள்ளும் எனது உபவாச ஜெபநாட்களில் கர்த்தருக்குள் நான் தியானித்த ஒரு சில ஆவிக்குரிய காரியங்களை உங்களுடன் இந்த இதழில் பகிர்ந்துகொள்ளுவது உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும் என்று நம்புகின்றேன். கர்த்தர் தாமே அவைகளை உங்களுக்கும் பாவியாகிய எனக்கும் ஆசீர்வாதமாக்கித் தருவாராக.

வாழ்க்கைப் பலகையில் பகடைக் காய்களை வெகு சமர்த்தாக நகர்த்தும் தந்திர சாத்தான்

ஒரு சமயம் நான் சென்னையிலுள்ள பாம்பு பண்ணையை காணச் சென்றிருந்தேன். பெரிய மலைப்பாம்பு ஒன்று போடப்பட்டிருந்த ஒரு அறையை நான் பார்த்துக்கொண்டிருந்தேன். அந்தப் பாம்பு அறையின் ஒரு ஓரத்தில் எந்த ஒரு சலனமும் இன்றி அசையாமல் கிடந்தது. அந்த அறையின் மத்தியில் ஒரு வலுமையான காய்ந்த மரக் கொம்பு நிறுத்தப் பட்டிருந்தது. மரக்கொம்பின் பக்கவாட்டுக்கிளைகளும் பாம்பு ஏறிச் செல்லுவதற்கு ஏற்ருப்போல பலமுள்ளதாக இருந்தது. அந்த மரத்தின்

உச்சியில் ஒரு கோழி உட்கார்ந்து தனது தலையை பரிதாபமாக அங்கும், இங்கும் நீட்டி அசைத்துக் கொண்டிருந்தது. அந்த பாம்புக்கு இரையாக அந்தக் கோழியை அங்கே விட்டிருந்தனர். மரக்கட்டை போல ஆடாமல் அசையாமல் படுத்துக்கிடக்கும் இந்தப் பெரிய பாம்பு மரத்தின் உச்சியில் அமர்ந்திருக்கும் பறக்கக்கூடிய கோழியை எப்படி பிடித்து தனக்கு இரையாக்கிக்கொள்ளும் என்று எனக்கு ஆச்சரியமாக இருந்தது அப்பொழுது அங்கு வந்த பாம்பு பண்ணை பணியாளர் ஒருவரிடம் நான் இது குறித்து விசாரித்தேன். அதற்கு அந்த மனிதர் ''இந்தக் கோழி மரத்தின் எந்தக் கொம்பிலிருந்தாலும், அறையின் எந்த ஒரு பகுதியில் அது இருப்பினும் வரும் இரவுக்குள் பாம்பின் வயிற்றினுள் கோழி இருக்கும்'' என்று கூறினர். அந்த வார்த்தை எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. எனினும் அதுதான் உண்மை, அந்த பெரிய மலைப்பாம்பு ஓசையின்றி கொஞ்சம், கொஞ்சமாக நகர்ந்து, நகர்ந்து இறுதியில் கோழியை பிடித்தே கொள்ளும். இரா முழுவதும் அது நகர்ந்து கொண்டேதான் இருக்கும். கோழிக்கு ஒரு வேளை தூக்கம் தேவைப்படும். ஆனால், பாம்புக்கு அது தேவையே இல்லை. அது ஓய்வு இல்லாமல் கோழியை நோக்கி நகர்ந்தவண்ணமாகவே இருக்கும். ஆச்சரியமாக இருக்கின்றதல்லவா ?

வேதாகமத்தில் சாத்தானை நாம் பாம்பின் உருவத்தில்தான் பார்க்கின்றோம். ஏதேன் சிங்காரப் பூங்காவில் அந்த சாத்தான் பாம்பாக வந்து ஏவாளை வஞ்சித்து தேவனுடைய மகத்தான பரலோக திட்டத்தை உடைத்து நொறுக்கி தேவனுக்கும், மனிதனுக்கும் ஒரு நீங்காத பிளவை உருவாக்கிவிட்டு வெற்றிக் களிப்போடு அவன் கடந்து செல்லுவதை நாம் காண்கின்றோம். அந்த வலுசர்ப்பம் இன்றும் அதே தந்திரத்தோடு தான் மனுக்குலத்தில் தனது தந்திரக் கிரியையை நடத்தி வருகின்றான். ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது கிரியை உள்ளது. கொஞ்சம், கொஞ்சமாக சற்றும் ஓய்வு எடுத்துக்கொள்ளாமல் சாத்தான் தனது அழிவின் காரியத்தை செய்தவண்ணமாகவே இருக்கின்றான். ஒரு தேவனுடைய பிள்ளையை ஆண்டவரது அன்பிலிருந்தும். அவரது பிரசன்னத்தின் ஒளியிலிருந்தும் படிப்படியாக விலகச்செய்தவண்ணமாக பிசாசானவன் காரியங்களை நடத்துகின்றான். விழிப்புள்ள பரிசுத்த ஜீவியம், ஜெபம், வேதவசன தியானம், உபவாசம் போன்ற கிறிஸ்தவ ஆவிக்குரிய வாழ்வின் அடிப்படை நிலையிலிருந்து கொஞ்சம், கொஞ்சமாக வழிவிலகச்செய்து தேவனுக்கும், அவனுக்குமுள்ள ஐக்கியத்தை முற்றுமாக உடைத்து நொறுக்கி அந்த ஆவிக்குரிய தாழ்ச்சியான நிலையிலேயே அவனை பூரண திருப்தி கொள்ளச் செய்து விடுகின்றான். இந்தவிதமான நிர்ப்பந்தமான நிலையில் அந்த தேவனுடைய பிள்ளை வாழ்கின்றபோது திடீரென்று ஒரு நாள் வலுசர்ப்பமாம் சாத்தான் அவனைப்பார்த்து ,'சிம்சோனே, பெலிஸ்தர்கள் இதோ உன்மேல் வந்துவிட்டார்கள்''

என்று மகிழ்ச்சி குரல் எழுப்புகின்ருன். ஆம், மரணம் என்ற பெலிஸ்தர் களை இப்பொழுது அவன் சற்றும் எதிர்பாராதவிதமாக சந்திக்கவேண் டியதாகின்றது. கர்த்தர் தன்னைவிட்டு முற்றும் விலகிவிட்டதை அறியாத அந்த மனிதன் ''ஓ நான் என் ஆண்டவரை சந்திக்கப் பரலோகம் போகிறேன்'' என்று சொல்லும்போது சாத்தானின் தூதர்கள் அவனை நரக பாதாளத்துக்கு அழைத்துச்செல்லுவார்கள்.

ஆவிக்குரிய மக்களின் மனக்கண்களை சாத்தான் குருடாக்கி வைத்திருக்கின்ருன்

இன்று கிறிஸ்தவ ஆவிக்குரிய சமுதாயத்தில் நீங்கள் ஒரு கூட்டம் மக்களை காணலாம். அவர்கள் எங்கு தேவனுடைய ஊழியர்கள் தேவ செய்தி கொடுக்கின்ருர்களோ அங்கெங்கெல்லாம் பயணம்போய் தேவ செய்திகளை கேட்டுக்கொண்டே இருப்பார்கள். அவர்கள் தங்கள் காலத்தில் எத்தனை எத்தனை ஆயிரம் தேவசெய்திகளையோ கேட்டவர்கள் அவர்கள் அறிந்துகொள்ளாத சத்தியமே இருக்காது. இருப்பினும் ''கேட்கிறதினால் செவி நிரப்பப்படுகிறதுமில்லை'' (பிர 1 : 8) என்ற வசனத்தின்படி சத்தியத்தை கேட்டுக்கொண்டே இருப்பார்கள். கேட்ட வேத சத்தியத்தின்படி இம்மக்கள் ஜீவிக்க ஒருக்காலும் பிரயாசம் எடுக்கவேமாட்டார்கள். பொழுது எப்பொழுது விடிந்து வருமோ என்று எதிர்பார்த்து விடியற்காலம் ஆனதும் ரேடியோவை திருப்பிக்கொண்டிருப் பார்கள். எதற்காக ? ரேடியோவில் வரும் தேவ செய்திகளை கேட்ப தற்காக. ''காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகி காத்திருப் பேன்'' (சங் 5 : 3) என்ருர் சங்கீதக்காரன். கர்த்தர் பேசும் வார்த்தை களை தனது ஆத்துமத்தில் கேட்டு முழங்காலில் நின்றவாறே ''ஆண்டவரே, இந்த நாளில் நான் என்ன செய்ய சித்தமாயிருக்கின்றீர்?'' என்று கேட்பதற்கு மாருக அதிகாலை முழங்கால் ஜெபத்திற்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு வானெலியில் வரும் கிறிஸ்தவ செய்திகளை செவிமடுத்துக்கேட்பார்கள்

சாத்தானுடைய தந்திரமான கண்ணிகளில் இதுவும் ஒன்று என்று அநேகருக்குத் தெரியாது ஆண்டவர் இயேசுவுக்கும் நமக்கும் உள்ள நேரடியான ஆத்தும உறவை குலைப்பதற்கு வலுசர்ப்பம் எடுக்கும் தந்திர செயல்களில் இதுவும் ஒன்று. ஆர்தர் பிங்க் என்ற பரிசுத்தவான் தனது புத்தகங்கள் ஒன்றில் இவ்விதமான மக்களைக் குறித்து இவ்விதமாக எழுதி யுள்ளார் (''எப்போதும் கற்ருலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிருர்கள்'' (2 தீமோ 3 : 7) நாம் வாழ்கின்ற கொடிய காலத்தில் ஆவிக்குரிய மக்களின் ஒரு துயரமான நிலை இது. ஜனங்கள் பிரசங்கிமார்களின் பிரசங்கங்களை அங்குமிங்கும் அலைந்தோடி கேட்பதும், வேதாகம சத்தியங்கள் எழுதப்பட்ட புத்தகங்களை வாங்கி

படித்தவண்ணமாகவே இருப்பதும், அவர்கள் எத்தனை பிரசங்கங்களை கேட்டு எத்தனை ஆயிரம் புத்தகங்களைப் படித்த போதிலும் இன்னும் அவர்கள் தங்கள் ஆண்டவருக்குள் ஒரு உறுதியான ஐக்கியமின்றி சத்தியத்தின் பாதையில் அவர்கள் ஊசலாடிக் கொண்டிருப்பது இன்றைய ஆவிக்குரிய சமுதாயத்தை பற்றிப்பிடித்துள்ள ஒரு சோகை நோயாகும். திரள்கூட்டம் மக்கள் இந்த கொடிய நோயின் பிடியில் இப்பொழுது உள்ளனர். எவ்வளவுக்கு அதிகமாக பிரசங்கங்களை கேட்பார்களோ அதற்கு அதிகமாக இன்னும், இன்னும் பிரசங்கங்களை கேட்க அவர்கள் துடிதுடித்துக் கொண்டிருப்பார்கள். எத்தனைதான் பிரசங்கங்களை அவர்கள் கேட்டாலும் அவர்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் ஒரு அற்ப மாற்றம் கூட இருக்காது. அவர்கள் தலைகள் பிரசங்கங்களை கேட்ட அறிவின் பெருமையால் நிரம்பியிருக்குமே தவிர அவர்கள் தங்களை தேவனுக்கு முன்பாக குப்பையும் தூசியுமாக தாழ்த்தி தேவ சமூகத்தில் இருந்து எந்த ஒரு ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்ள மாட்டார்கள். இவர்கள் தேவபக்திக்கு அந்நியர்கள்'')

ஆண்டவருடைய பரிசுத்த வேதாகமத்தில் சங்கீதக்காரன் சொன்னது போல ''உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன். நாள் முழுவதும் அது என் தியானம்'' (சங் 119:97) என்ற தேவ வசனத்துக்கு இணங்க வேத வசனங்களை வாசித்து தியானிப்பதற்கு பதிலாக மற்ற ஆவிக்குரிய புத்தகங்களை வாசித்து வேத வாசிப்புக்கு இடமே கொடுக்க மாட்டார்கள். இதெல்லாம் சாத்தானுடைய ஒரு மறைவான கண்ணியாகும்.

சாத்தானுடைய கண்ணியை கடைசி நேரம் அறிந்து கண்ணீர் விடுவர்

தனது வாசனை வீசும் மடியில் தலைசாய்க்கவைத்து சிம்சோனின் தலைமுடியை எல்லாம் கத்தரிக்கச்செய்து அவனை நிர்ப்பந்தனைகளும், கண்கள் இழந்த கபோதியாகவும் நிற்கச்செய்த தெலீலாளைப் போல சாத்தானும் தேவ ஜனத்தை அவர்கள் அறியாத விதமாகவே தனது மடியில் கிடத்தி அவர்கள் ஆவிக்குரிய கண்களைப் பிடுங்கி எடுத்து நடுத்தெருவில் நிற்கவைத்துவிடுவான்.

அப்படிப்பட்ட ஒரு கொடிய நிலையை வலுசர்ப்பம் தங்களுக்கு உருவாக்கிக்கொடுத்துள்ளதை அந்த மக்கள் கடைசியில் கண்டுபிடித்து அங்கலாய்ப்பர். அங்கலாய்த்து என்ன பயன்? காலம் கடந்துவிட்டதே. காற்றுள்ளபோதே அவர்கள் தூற்றிக்கொள்ள தவறிவிட்டனர். பிரசங்க வேந்தனும், பரிசுத்தவானுமான ஸ்பர்ஜன் மனந்திரும்ப தங்களுக்குக் கிடைத்த பொன்னான வாய்ப்புகளை தவறவிட்டுவிட்டு சாத்தானை அடையாளம் கண்டு கொள்ளாதவர்களைக்குறித்து இவ்வாறு எழுதுவார்.

படித்தவண்ணமாகவே இருப்பதும், அவர்கள் எத்தனை பிரசங்கங்களை கேட்டு எத்தனை ஆயிரம் புத்தகங்களைப் படித்த போதிலும் இன்னும் அவர்கள் தங்கள் ஆண்டவருக்குள் ஒரு உறுதியான ஐக்கியமின்றி சத்தி யத்தின் பாதையில் அவர்கள் ஊசலாடிக் கொண்டிருப்பது இன்றைய ஆவிக்குரிய சமுதாயத்தை பற்றிப்பிடித்துள்ள ஒரு சோகை நோயாகும். திரள்கூட்டம் மக்கள் இந்த கொடிய நோயின் பிடியில் இப்பொழுது உள்ளனர். எவ்வளவுக்கு அதிகமாக பிரசங்கங்களை கேட்பார்களோ அதற்கு அதிகமாக இன்னும், இன்னும் பிரசங்கங்களை கேட்க அவர்கள் துடிதுடித்துக் கொண்டிருப்பார்கள். எத்தனைதான் பிரசங்கங்களை அவர்கள் கேட்டாலும் அவர்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் ஒரு அற்ப மாற்றம் கூட இருக்காது. அவர்கள் தலைகள் பிரசங்கங்களை கேட்ட அறிவின் பெருமையால் நிரம்பியிருக்குமே தவிர அவர்கள் தங்களை தேவனுக்கு முன்பாக குப்பையும் தூசியுமாக தாழ்த்தி தேவ சமூகத்தில் இருந்து எந்த ஒரு ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்ள மாட்டார்கள். இவர்கள் தேவபக்திக்கு அந்நியர்கள்'')

ஆண்டவருடைய பரிசுத்த வேதாகமத்தில் சங்கீதக்காரன் சொன்னது போல ''உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன். நாள் முழுவதும் அது என் தியானம்'' (சங் 119:97) என்ற தேவ வசனத்துக்கு இணங்க வேத வசனங்களை வாசித்து தியானிப்பதற்கு பதிலாக மற்ற ஆவிக்குரிய புத்தகங்களை வாசித்து வேத வாசிப்புக்கு இடமே கொடுக்க மாட்டார்கள். இதெல்லாம் சாத்தானுடைய ஒரு மறைவான கண்ணி யாகும்.

சாத்தானுடைய கண்ணியை கடைசி நேரம் அறிந்து கண்ணீர் விடுவர்

தனது வாசனை வீசும் மடியில் தலைசாய்க்கவைத்து சிம்சோனின் தலைமுடியை எல்லாம் கத்தரிக்கச்செய்து அவனை நிர்ப்பந்தனைகளும், கண்கள் இழந்த கபோதியாகவும் நிற்கச்செய்த தெலீலாளைப் போல சாத்தானும் தேவ ஜனத்தை அவர்கள் அறியாத விதமாகவே தனது மடியில் கிடத்தி அவர்கள் ஆவிக்குரிய கண்களைப் பிடுங்கி எடுத்து நடுத்தெருவில் நிற்கவைத்துவிடுவான்.

அப்படிப்பட்ட ஒரு கொடிய நிலையை வலுசர்ப்பம் தங்களுக்கு உருவாக்கிக்கொடுத்துள்ளதை அந்த மக்கள் கடைசியில் கண்டுபிடித்து அங்கலாய்ப்பர். அங்கலாய்த்து என்ன பயன்? காலம் கடந்துவிட்டதே. காற்றுள்ளபோதே அவர்கள் தூற்றிக்கொள்ள தவறிவிட்டனர். பிரசங்க வேந்தனும், பரிசுத்தவானுமான ஸ்பர்ஜன் மனந்திரும்ப தங்களுக்குக் கிடைத்த பொன்னான வாய்ப்புகளை தவறவிட்டுவிட்டு சாத்தான அடையாளம் கண்டு கொள்ளாதவர்களைக்குறித்து இவ்வாறு எழுதுவார்.

''ரயில் நிலையத்திலிருந்து ரயில் புறப்படும் நேரம் வரை சிலர் படுக்கையிலிருந்து எழும்புவது கிடையாது, பின்னர் ஓட்டம், ஓட்டமாக ரயில் நிலையம் வரும்போது ரயில் புறப்பட்டுச்செல்லுவதை அவர்கள் துக்கத்தோடு பார்த்துத் தங்களுக்குள்ளாக ''எனது கடிகாரம் இரவோடிரவாக எப்படியோ ''கீ'' கொடுக்காமல் நின்று போயிருக்கின்றது. அதை நான் கவனிக்காமல் இருந்திருக்கின்றேன்'' என்று தங்களை தாங்களே சாந்தப்படுத்திக்கொண்டு துக்க முகத்துடன் வீடு திரும்புகிறவர்களாயிருப்பார்கள். சந்தை கூடி முடிந்த அடுத்த நாள்தான் இந்த மக்கள் தங்கள் பண்டங்களை சந்தையில் விற்க பட்டணத்துக்கு வந்து சேருவார்கள். சந்தைக் கதவுகள் அடைக்கப்பட்ட பின்புதான் இவர்கள் தங்கள் பொருட்களை விற்பனைக்காக விரித்து வைப்பார்கள். சூரியன்



பகலில் பிரகாசித்து முடித்து மேல்வானில் மறையும் நேரம்தான் இம்மக்கள் தங்கள் வைக்கோலை காயவைப்பார்கள். அறுப்புக்கு ஏற்ற அருமையான பருவகாலம் கடந்து சென்ற பின்னர் இம்மக்கள் தங்கள் தானியத்தை அறுவடை செய்வார்கள். துப்பாக்கியிலிருந்து வேட்டு கிளம்பிய பின்னர் இந்த ஜனங்கள் ''துப்பாக்கியை வலுவாக பிடித்துக் கொள்'' என்று உரத்த குரல் எழுப்புவார்கள். குதிரையானது குதிரை லாயத்திலிருந்து களவாடப்பட்ட பின்பு இம்மாந்தர் குதிரை லாயத்தை வலுமையான பூட்டுபோட்டு பூட்டுவார்கள். எனது பக்கத்து வீட்டுக்காரர் தனது குழந்தை தங்கள் வீட்டுக்கு முன்பாக இருந்த தங்களது திறந்த கிணற்றில் விழுந்து இறந்ததன் பின்னரே அந்தக்கிணற்றை கம்பி வலைபோட்டு ஜாக்கிரதையாக மூடினர். அவர் தனது வீடு முழுமையும் தீப்பற்றி எரிந்து முடிகிறவரைக்கும் தனது பண்ணை நிலத்தில் மிகுந்த

ஆர்வத்தோடு வேலைசெய்துவிட்டு கடைசியில் வாளி, வாளியாக தண்ணீர் கொண்டு வந்து தீயை அணைக்க முயன்றார். ஆனால் அவருக்கு கிடைத்ததெல்லாம் கரிக்கட்டைகளைத் தவிர வேறொன்றுமில்லை. தனது சிந்தனைகளும் நினைவாற்றலும் தன்னைவிட்டு முற்றுமாக போனபின்னர் ஏழை மனிதன் மனந்திரும்ப பிரயாசம் எடுத்தார்.

இந்த மாந்தர்கள் தங்கள் காரியங்களை மிகவும் மெதுவாக நகர்ந்து செல்லும் எருமை மாட்டு வண்டிகளைப்போல செய்கின்றனர். இன்றைய தினத்தைவிட நாளைய தினம் வெகு அருமையாக இருக்கும் என்று இவர்கள் எண்ணிக் கொள்ளுகின்றனர். ''முடிந்தவரை நாளைக்கு தள்ளிவைக்கக்கூடிய காரியத்தை ஒருக்காலும் இன்றைக்கு செய்து விடாதே'' என்ற ஒரு பழமொழியை இவர்கள் தங்களுக்காகவே உருவாக்கி வைத்திருக்கின்றனர். குதிரையை முன்னணியில் கட்டுவது போல காலத்தை ஒரு கம்பத்தில் ஒன்று சேர்த்து கட்டிவைக்க இயலாது. காலம் காற்றைப்போல விரைவாக கடந்து சென்றுவிடும். தனது தானியத்தை ஏந்திரக்கல்லில் திரிக்க விரும்புகிறவன் ஏந்திரக்கற்கள் சுழலுவதற்கு ஏதுவாக பாய்மரங்களை காற்றின் முகத்தில் பறக்கவிட வேண்டும். தூங்குகிற நாய்களின் வாய்களில் முயல்கள் வந்து ஒருக் காலும் விழாது. முயலைப்பிடிக்க விரும்பும் நாய் சாகத்தக்கதாக களைத்து தனது நாவை தொங்கவைத்துக்கொண்டு முயலின் பின்னுக ஓடியாக வேண்டும். தனது முட்டைகளின் மேல் உட்கார்ந்து ஒழுங்காக அடைகாக்க மனமில்லாத கூஸ் வாத்து தனது முட்டைகள் கெட்டுப்போன பின்னர் கடவுளின்மேல் பழி பாவத்தை போடும் ஒரு பழங்கதை உண்டு. ஒரு சோம்பல் கப்பலுக்கு கடலில் வீசும் காற்றுகள் அனைத்தும் கப்பல் ஓட்டத்துக்கு பயன் இல்லாத கெட்ட காற்றுகளாகத்தான் இருக்கும். நல்ல காலங்களை விரும்பி பரலோகத்தையும் அதின் பாக்கியங்களையும் எதிர்நோக்குகிறவன் தனக்கு கிடைத்த கிருபையின் காலத்திலேயே ஜாக்கிரதையாக மனந்திரும்பிக்கொள்ளவேண்டும்'' (ஸ்பர்ஜன்)

உன்னைச்சூழ மதில்போட்டு உன்னை வளைந்துகொண்டு
எப்பக்கத்திலும் உன்னை நெருக்கிவைத்துவிடும் வஞ்சக சாத்தான்

நீங்கள் சொரி மணலை (Sinking Sand) குறித்து கேள்விப்பட்டிருப் பீர்கள் என்று நம்புகின்றேன். திருச்சி மாவட்டத்தில் காவிரி நதிப் படுகையில் கூட ஓரிரு இடங்களில் இந்த சொரி மணல் பகுதி இருப்பதாக சொல்லப்படுகின்றது. இந்த செய்தியை நான் எழுதிக்கொண்டிருக்கும் வேளையில் திருச்சிக்கு அருகில் முக்கொம்பு என்ற இடத்தில் அங்குள்ள சொரி மணலில் சிக்கி இரு இளைஞர்கள் மாண்டுபோன செய்தியை செய்தித்தாள் கொண்டு வந்துள்ளது. மேல்நாடுகளில் சமுத்திரக்கரை, நதிக்கரைகளில் இப்படிப்பட்ட சொரிமணல் பரப்புகள் சற்று விசாலமான

யும் கொஞ்சம் கொஞ்சமாக சொரிமணலாம் உலக மாயையில் புதைத்து இறுதியாக உயர்த்தப்பட்ட கரங்களும், கண்கள் இரண்டும் பரிதாபமாக பார்த்துக்கொண்டிருக்க வைத்துவிட்டு மனுஷ கொலைபாதகனும் சாத்தான் ஓட்டம் பிடித்துவிடுவான்.

அந்தப்பாம்பு செய்ததைத்தான் சாத்தானும் வலுசர்ப்பமும் செய்வான்

வெயில் கொழுத்தும் ஒரு மத்தியான நேரம். சிறுவனாக இருந்த நான் எனது உண்டி வில்லுடன் எங்கள் ஊர் குளத்தின் கரையில் நின்ற ஒரு பெரிய உடை மரத்துக்கு கீழாக வந்து நின்றேன். அந்த உடை மரமானது ஒரு நூற்றாண்டை தாண்டிய வயதை உடையதாகும். பறவைகள் எதுவும் அந்த உடை மரத்தில் இருக்கின்றதா என்று பார்த்த நான் முற்றுமாக ஏமாந்தேன். அந்த உடை மரமானது தனது முட் கிளைகளை விசாலமாக பரப்பி நிழலிட்டு நின்று கொண்டிருந்தது. ஒவ்வொரு கிளையாக நான் அந்த உடையை கவனமாக நான் பார்த்து வருகையில் ஒரு குறிப்பிட்ட கிளையில் நான் கண்ட ஒரு காட்சியை என்றும் மறக்கமாட்டேன். ஒரு பெரிய கொம்பேறிமூக்கன் பாம்புக்கு முன்பாக ஒரு ஓணானும். ஒரு அணிலும் தாங்கள் சற்று நேரத்தில் இரை யாகப்போகும் தங்கள் பிராண பகைஞனை கண்டு நடுநடுங்கிப்படுத்திருப் பதை கவனித்தேன்.

சிறுவனை எனக்கு அந்தக்காட்சி ஆச்சரியமாக இருந்தது. எப்படி அந்தப் பாம்பு ஓணானையும், அணிலையும் ஒன்று சேரக்கொண்டு வந்து தனக்கு இரையாக்கிக்கொள்ளுவதில் வெற்றி பெற்றது என்று எனக் குள்ளாக யோசித்துப் பார்த்தேன். உடை மரத்தின் வெவ்வேறு கொப்புகளில் படுத்திருந்த ஓணானையும், அணிலையும் அப்படியே கொஞ்சம், கொஞ்சமாக நகர்த்தி ஒரு கிளைக்கே அவைகள் இரண்டையும் கொண்டு வந்து அவைகள் தப்பி பிழைக்க எவ்வித மார்க்கமும் இல்லாமல் ஒரு உயரமான நுனிக்கொம்பிற்கு தந்திரப்பாம்பு நகர்த்திக்கொண்டு வைத்திருந்தது.

ஓணானும், அணிலும் ஒன்றுக்குப்பின் ஒன்றாக பாம்பின் கருமையான பெரிய கண்களை பார்த்து நடுநடுங்கிப்படுத்திருந்தன. பாம்பு தனது முதல் இரையாக ஓணான அணிலின் கண்களுக்கு முன்பாக விழுங்கிவிட்டு பின்னர் அணிலையும் விழுங்க ஆயத்தமாகிக்கொண்டிருந்தது. அணிலின் மேலும், ஓணன் மேலும் இரக்கம்கொண்டு எனது உண்டிவில்லால் பாம்பை அடித்து உடைமரத்திலிருந்து துரத்திய பின்னர் ஓணானையும் அணிலையும் கல்லால் அடித்து விரட்டி அவைகளின் உயிரை அன்று பாதுகாத்தேன்.

அந்த உடைமரத்து கொம்பேறிமுக்கன் பாம்பைப்போலவே தந்திர சாத்தானும் மனுமக்களை உலக மாய்கைகளின் கவர்ச்சிகளை கொஞ்சம், கொஞ்சமாக காண்பித்து, காண்பித்து அவர்கள் காலங்களை எல்லாம் வீணும், விருதாவுமாக்கி அவர்கள் மனந்திரும்பாமலேயே தங்கள் பாவங்களில் மடிந்து ஆக்கினை தீர்ப்பு அடையத்தக்கதாக அவர்களை மரணம் என்ற உயரமான நுனிக்கொம்பிற்கு நகர்த்திக்கொண்டு வந்து அவர்கள் இறுதியில் தங்களது மீட்புக்காக எதுவும் செய்ய இயலாத நிலைக்கு கொண்டு வந்து நிறுத்திவிடுகின்றான்.

பரலோக வாழ்வை பூவுலகில் பெற்றுக்கொள்ளுவது ஒன்றுமட்டுமே சாத்தானுக்கு நாம் கொடுக்கும் மரண அடியாகும் !

மனுஷ கொலைபாதகன் சாத்தான் நமது விலையேறப்பெற்ற ஆத்து மாவை உலக மாயைகளால் சூழ மதில்போட்டு வளைந்துகொண்டு எப்பக்கத்திலும் நெருக்கி நாம் நமது ஆவிக்குரிய வாழ்வைக்குறித்து மெத்தனமாக இருக்கும்போதுதானே திடீரென ''சிம்சோனே, இதோ மரணமாகிய பெலிஸ்தர் உன்மேல் வந்துவிட்டார்கள்'' என்ற கெம்பீர மான குரலை எழுப்பிவிடுவான். சாத்தானின் இந்த கொடிய வல்லடிக்கு நாம் தப்பவேண்டுமானால் பூலோகத்திலேயே நமது பரலோக வாழ்வை நமக்குள் நிச்சயப்படுத்திக்கொள்ளுவதுதான். பரலோகத்துக்குள் நீ பிரவேசிக்கவேண்டுமானால் நிச்சயமாக நீ யோவான் 3 : 3 ன்படி மறுபடியும் பிறந்திருக்கவேண்டும். நீ மறுபடியும் பிறந்த அந்த பேரின்ப நாளை ஒவ்வொரு நாளும் பூரிப்பாக நினைவுகூர்ந்து :-

என் பாவம் தீர்ந்த நாளையே
அன்போடு எண்ணி ஜீவிப்பேன்.
அந்நாளில் பெற்ற ஈவையே சந்தோசமாய்
கொண்டாடுவேன்.
இன்ப நாள், இன்ப நாள்
என் பாவம் தீர்ந்து போன நாள்.

என்று பாடிக்களித்துக்கொண்டிருப்பாய். தினமும் அதிகமான நேரத்தை தேவனுடைய சமூகத்தில் ஜெபத்தில் செலவிடுவது ஒன்றே உனக்கு ஆனந்தக்களிப்பாக இருக்கும். தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்துகொண்ட மரியாளைப்போல ஆண்டவருடைய பாதங்களண்டை யில் ஜெபத்தில் எப்பொழுதும் அமர்ந்திருப்பதையே நீ வாஞ்சித்து கதறு வாய். உலகத்தின் மாயையான காரியங்களின் மேலுள்ள பிடிப்புகள் எல்லாம்முற்றுமாக உன்னைவிட்டு நீங்கிவிடும். தேவன் உனக்கு ஆயத்தம் செய்துவைத்துள்ள அந்த பரலோக பாக்கிய வாழ்வுக்குள் பிரவேசித்து உன் நேசர் இயேசுவை முகமுகமாக சந்திக்கும் ஆனந்த நாளுக்காக ஏங்கிக் காத்துக்கொண்டிருப்பாய். இந்த உலகம் உனக்கு வெறுமையாக

தெரியும். உலகத்து மனுஷன் வீடு, வாசல், ஆஸ்தி ஐசுவரியம், பட்டம் பதவி என்று பேசி பெருமிதம் கொள்ளும் மாயையின் காரியங்கள் உனக்கு முதல்தரமான பைத்தியமாகத்தோன்றும். இந்த உலகத்திலே நீ ஒரு பரதேசி மாத்திரமே என்பதை யாக்கோபைப்போலவும் (ஆதி 47 : 9) மோசேயைப் போலவும் (யாத் 2:22) நிச்சயமாக அடையாளங்கண்டு கொண்டு ஒரு பரதேசியைப்போல இந்த உலகத்திலே நீ ஜீவிப்பாய்.

தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணியவை களை கண் காணவும் இல்லை, காது கேட்கவும் இல்லை, மனுஷருடைய இருதயத்தில் தோன்றவும் இல்லை (1 கொரி 2:9) என்ற தேவ வசனத்தின் படி அந்த பரமகானானின் ஆனந்த பாக்கியங்களை அடிக்கடி நீ எண்ணி உள்ளம் பூரித்துக்கொண்டிருப்பாய். ஆண்டுகள் கடந்து செல்ல, செல்ல மோட்ச வாழ்வின் நம்பிக்கை இன்னும், இன்னும் பலமாக உன்னில் வேர்கொள்ளத் தொடங்கிவிடும்.

''கானானின் கரை அதோ காண்கின்றதே
நேசர் காதலன் தொனி காதில் கேட்கின்றதே''

என்று பாடிய பக்தனுடன் சேர்ந்து நீயும் பாடிக்களித்து உனது ஆத்தும மணவாளனின் சமூகம் சென்றடைய துடிதுடித்துக் கொண்டிருப்பாய்.

இந்த தலையங்கத்தை நான் எழுதிக் கொண்டிருக்கும் வேளையில் டோனவூர் காருண்ய அம்மையாரின் (ஏமி கார்மிக்கேல்) சிநேகிதியான ஒரு விருத்தாப்பிய பரிசுத்தவாட்டி கீழ்க்கண்டவாறு எனக்கு கடிதம் எழுதியிருக்கின்றார்கள்:-

''எனது விருத்தாப்பியத்தின் தனிமையில் அதிகமாக பாடித்துதிக்க கர்த்தர் எனக்கு கிருபை தந்துள்ளார்.

இங்கு நொந்து கொள்கிறோம்
கூடி பின்பு நீங்குவோம்,
அங்கு என்றும் நீங்கிடோம்
ஆ, அதுவே இன்பம்,
ஆ, அதுவே இன்பம்,
விண்ணில் என்றும் தங்குவோம்,
அங்கெல்லாரும் கூடுவோம்
மா சந்தோசம் கொள்ளுவோம்
இயேசுவைக் கொண்டாடுவோம்''

என்று ஓயாது பாடிக்கொண்டே இருக்கின்றேன் என்று குறிப்பிட்டுள் ளார்கள். காரணம், அந்த பரிசுத்த தாயாருக்கு பரலோகம் இந்த

ழலகிலேயே ஆரம்பமாகிவிட்டது. நேசரை விரைவில் முகமுகமாக திக்கப்போகும் அந்த பாக்கியசாலி இடைவிடாது பாடிக்கொண்டிருப்பதில் நாம் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை ! அல்லேலூயா.

காலமெல்லாம் பரிசுத்த கர்த்தரைவிட்டு விலகி பாவத்தில் மனம் போல ஜீவித்துவிட்டு மரணத்துக்குப்பின்னர் அவரோடு கூடி குலாவி அவருடன் நித்திய நித்தியமாக வாழ்வது என்பது அபத்தமான பேச்சாகும். பூவுலகத்தில் தேவனுக்கும் உனக்கும் ஒரு தொடர்புமில்லாமல் நீ வாழ்ந்ததின் பின்னர் உனது மரண நேரத்தில் உனது தலையணை அண்டை வேதாகமத்தை உனது பாதுகாப்புக்காக வைப்பதும் உனது அடக்க ஆராதனையின்போது குருவானவர் தனது கல்லறைப் பிரசங்கத்தில் நீ ஆண்டவருடைய மடியில் இருக்கின்றாய் என்று உன்னைக் குறித்து புகழ்ந்து பேசுவது எல்லாம் வீணான பிதற்றுதலின் வார்த்தைகளேயன்றி வேறொன்றுமில்லை. அந்த வார்த்தைகளுக்கும் உனக்கும் கடுகளவுதானும் சம்பந்தமே கிடையாது. அந்த புரளியான வார்த்தைகள் கல்லறைத் தோட்டத்தில் அப்போது வீசிய காற்றோடு காற்றாக பறந்து மறைந்து போய்விட்டது.

வாசிக்கும் ஆத்துமாவே, திட்டமாக நினைவில் வைத்துக்கொள். பரம காணானின் பாக்கிய வாழ்வு பூலோகத்தில் உன் இருதயத்தில் தோன்றி அந்த பரவசமான வாழ்வு உனது மரணத்துக்கு பின்னர் பரலோகத்துக்கும் தொடர்ந்து செல்லுகின்றது. '' நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வை காண்பாய்'' (சங் 128:5) என்ற தேவ வசனமும் ''தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே'' (லூக் 17:21) என்ற ஆண்டவரின் வார்த்தையும் வெறும் அர்த்தமற்ற கட்டுக்கதையான வார்த்தைகள் அல்ல.

இதை கருத்தோடு வாசிக்கும் ஆத்துமாவே, உனது தனி அறைக்குச் சென்று தேவ சமூகத்தில் உன்னை தரைமட்டமாகத் தாழ்த்தி அந்த பரலோக வாழ்வு உனது இருதயத்தில் ஆரம்பமாகி விட்டதா என்று உன்னை நீயே ஆராய்ந்து பார். எந்த ஒரு நிலையிலும் சாத்தானுக்கு இடம் கொடுத்து உனது கடைசி நிமிட நேரம் வரை உனது இரட்சிப்பின் காரியத்தை ஏனோதானோவென்று எண்ணி அதை கைநழுவ விட்டுவிடுவாயானால் உனது மரண நேரத்தில் நிர்ப்பந்தமாக நித்திய இருளுக்குள் நீ கடந்து செல்ல வேண்டியதாக இருக்கும்.

''ஆண்டவரே, பரலோகமும், பரம காணானும், மோட்சமும், பரதீசு மானவரே நீர் என் உள்ளத்துக்குள் வாரும்'' என்று கண்ணீரோடு போராடி ஜெபித்து பூலோகத்திலேயே மோட்சானந்த வாழ்வைப் பெற்றுக்கொள். மோட்சமாகிய இயேசு இரட்சகர் உன்னோடு வாசம் செய்வதை உறுதிப்படுத்திக்கொள். மோட்சம் உன் இருதயத்தில்

தோன்றும் வரை உன் கர்த்தரை அமர்ந்திருக்கவிடாதே. நமது வாழ்வை சாவா என்பது இதில்தான் அடங்கியுள்ளது. இந்த நிச்சயமான சத்தியத்துக்கு விரோதமாக உனக்கு கூறப்படும் எந்த ஒரு புரட்டான தூண்போதனைக்கும் உன் செவியை சாய்த்துவிடாதே. அது சாத்தானும் பிசாசிடமிருந்து வரும் தந்திரமான உபதேசமாகும். அதின் கோரமான முடிவை ''சிம்சோனே, பெலிஸ்தர் இதோ உன்மேல் வந்துவிட்டார்கள்'' என்று சத்துரு உனக்கு முன்பாக கூறி ஆரவாரிக்கும்போது கேட்டு கலங்கி தவிப்பாய்.

தேவன்தாமே ஞானமான பங்கை நீ தெரிந்துகொண்டு உனது முடிவில்லா நித்தியத்தை வெள்ளாயங்கி தரித்து கர்த்தாவின் சமுகத்தில் நிற்கும் திரள்கூட்டத்தில் நீயும் ஒரு பாக்கிய சாலியாக காணப்படுகிறபடி செய்வாராக.

மனத்தாழ்மை

''மோட்சம் செல்லவேண்டுமானால் அதற்கான முதற்படி என்ன?'' என்று பரிசுத்த அகஸ்டீனை கேட்டபோது அவர் ''மனத்தாழ்மை'' என்று பதில் அளித்தார். ''இரண்டாம் படி என்ன?'' என்று அவரை வினவியபோது மீண்டும் அவர் ''மனத்தாழ்மை'' என்றே விடை பகர்ந்தார். ''மூன்றும் படி என்ன?'' என்று அவரை மறுபடியுமாக கேட்டபோது தேவ மனிதன் திரும்பவுமாக ''மனத்தாழ்மை'' என்றே குறிப்பிட்டார்.

கலாத்தியர் 6:14 என்ற பரிசுத்தவாட்டி ''கிறிஸ்துவே நமது முன்மாதிரி'' என்ற தனது புத்தகத்தில் மனத்தாழ்மை என்பது சுயத்தை சுயநினைவு இல்லாமல் (''Unconscious self-forgetfulness'') மறக்கிறதாகும் என்று அற்புதமாக குறிப்பிட்டுள்ளார்கள். சுயநினைவு இல்லாமல் நமது சுயத்தை மறந்துபோகும் மனத்தாழ்மையின் ஆழத்தையும், மாட்சியையும் யோசித்துப் பாருங்கள். சுய நினைவோடு கூடிய நமது மனத்தாழ்மை முதல்தரமான கொடிய பெருமை என்பதை நாம் மறக்கலாகாது. தனது பரம எஜமானர் பரலோகம் துறந்து மாந்தராக அவதரித்த ஒப்பற்ற அன்பை முழுமையாக தியானித்தால் எந்த ஒரு தேவ ஊழியத்துக்கும் ''சுயத்தை சுயநினைவு இல்லாமல் மறந்துபோவது'' மாத்திரமே அத்தியந்த தேவை என்பதை நாம் இலகுவாக கண்டுகொள்ள இயலும். அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும் என்பதே அதின் அடிப்படை அஸ்திபாரமாகும்.

பரதேசியின்

மோட்ச பிரயாணம் - 15

மாயாபுரி (தொடர்ச்சி)

அந்த கூண்டுக்குள் இருந்த கொஞ்ச நேரமும் அவர்கள் எல்லா மனுஷருடைய நிந்தைக்கும், அவமானத்துக்கும், பரியாசத்துக்கும் ஆளானார்கள். அவர்களுக்கு நேரிடுகிற அவமானங்களை எல்லாம் சந்தைக்கு எஜமான் ஆனவர் சற்று தூரத்தில் உட்கார்ந்து பார்த்துக் கொண்டு, சிரித்து சிரித்து அகமகிழ்ந்தார். சத்துருக்கள் அவர்களுக்கு என்னதான் செய்தபோதிலும் அவர்கள் இருவரும் பொறுமையோடு சகித்துக்கொண்டு ''தீமைக்கு தீமையையும் உதாசினத்துக்கு உதாசினத்தையும் சரிக்கட்டாமல்'' அதற்குப் பதிலாக ஆசீர்வதிக்கிறதையும், தீமை செய்தலை நன்மை செய்தலாலும், அநியாயத்தை அன்பு பாராட்டுதலாலும் ஜெயித்துகொண்டு வருகிறதையும் அச்சந்தையில் நின்றவர்களில் சிலர் கண்டு, அனுதாபப்பட்டு, அவர்களை இம்சை பண்ணுகிறவர்கள் மேல் சற்று ஆயாசமடைந்து, அப்படி நிஷ்டூரங்கள் செய்யவேண்டாம் என்று கோபித்துக் கடிந்துகொண்டு தடுத்தார்கள். உடனே அந்த துஷ்டர்கள் அவர்கள்மேல் சீறி விழுந்து, கூண்டுக்குள் இருந்தவர்களைப்போல் நீங்களும் கெட்டவர்கள் என்று தீர்த்து, அவர்களும் நீங்களும் ஒன்றுகையால் அவர்களுக்கு சம்பவிப்பதே உங்களுக்கும் சம்பவிக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். அதற்கு அவர்கள் : அப்படி அல்ல, இந்த மனிதர்கள் மகா அமைதலும் மரியாதையும் உள்ளவர்கள் ஒருவனுக்கும் தீமை செய்ய இவர்கள் எண்ணவில்லை. இவர்களை கூண்டில் அடைத்து இப்படி அநியாயம் செய்வதைப் பார்க்கிலும் இந்த சந்தை வியாபாரிகளில் அநேகரை இப்படி அடைக்கிறது மாத்திரம் அல்ல, கழுமரத்தில் ஏற்றுவதுங்கூட நியாயமாய் இருக்கிறது என்று மறுமொழி சொன்னார்கள். இதன்பின்பு பேச்சு வளர்ந்துவிட்டது ! அவர்கள் ஒருவருக்கொருவர் எதிர் வாதாடிக்கொண்டு சண்டையை அதிகப்படுத்தினார்கள். (இச்சமயத்தில் பிரயாணிகள் வெகு விவேகமாயும் ஞானமாயும் நடந்துகொண்டார்கள்) அவ்விரு பட்சத்தாரும் ஒருவரோடொருவர் மோதி, ஒருவரையொருவர் அடிக்கவும், மிதிக்கவும், குத்தவும், உதைக்கவும் ஆரம்பித்ததால் இரு பட்சத்திலும் பல சேதம் உண்டாயிற்று. அப்புறம் நகரத்தில் உண்டான அடிபிடிகளுக்கும், மண்டை உடைவுகளுக்கும் இவ்விருவரே காரணர் என்று மறுபடியும் விசாரணைக்குக் கொண்டு போகப்பட்டார்கள். அந்த விசாரணைக்காரன்

பின்னும் அவர்களை அநேக அடிகளால் அடித்து, பழுவான இரும்புக் குண்டுகளை அவர்கள் கழுத்திலே தொங்க வைத்து, ஒருவரும் அவர் களுக்கு இரங்கிப் பேசாதபடிக்கும், அல்லது அவர்கள் பட்சமாய் திரும் பாதபடிக்கும் எச்சரிப்பு உண்டாகும்படியாக, விலங்கு மாட்டப்பட்டவர் களாய் மாயாபுரி வீதிக்கு வீதி அங்கும் இங்கும் நடத்திக்கொண்டு போகப்பட்டார்கள். கிறிஸ்தியானும், உண்மையுமோ இச்சமயத்தில் முன்னிலும் அதிக ஞானமுள்ளவர்களாய் நடந்துகொண்டு, தங்களுக்கு விரோதமாய் பேசப்பட்ட நிந்தைகளையும் செய்யப்பட்ட அவமானங் களையும் அவ்வளவு சாந்தத்தோடும், பொறுமையோடும், சகித்துக் கொண்டபடியால் அவ்வூராரில் அநேகரைத் தங்கள் பட்சத்துக்கு இழுத்துக்கொண்டார்கள். இப்படி அவர்கள் பட்சம் திரும்பின மாயாபுரி யாரின் தொகை அவ்விடத்து துன்மார்க்கருடைய தொகையுடன் ஒத்துப் பார்த்தால் கொஞ்சமாய் இருந்தது என்பதை ஒத்துக்கொள்ள வேண்டியது. மாயாபுரியாரில் பலர் அவர்கள் பட்சம் சேர்ந்ததே மறுபட்சத்தாருடைய மூர்க்கத்தை அதிகமாய் எழுப்பிவிட ஏதுவாய் இருந்தது. ஆதலால் அந்த துன்மார்க்கர் பிரயாணிகள் இருவரையும் கொன்றுபோடுவதே நலம் என்று கடைசியாகத் தீர்மானித்தார்கள். அப்புறம் அவர்கள் இந்த மனுஷர் கலகம் உண்டாக்கினதோடு ஊராரில் அநேகரையும் ஏமாற்றித் தங்கள் பட்சம் திருப்பிக்கொண்டார்கள், ஆகையால் இவர்களை அடைக்கிறதும், அடிக்கிறதும் மாத்திரம் பற்றாது. இவர்கள் கொலைசெய்யப்படவும் வேண்டும் என்று சொல்லி பயமுறுத்தி னார்கள்.

அதன்பின்பு அவர்களை மறுபடியும் கூண்டில் அடைத்துவைத்து வேறு கட்டளை பிறக்கும் மட்டும் வெளியே விடக்கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது. அத்தீர்மானத்தின்படியே அவர்கள் இருவரும் அடைக்கப்பட்டார்கள். அவர்கள் கால்கள் தொழுமரத்தில் மாட்டப் பட்டன.

இந்தச் சமயத்தில் பிரயாணிகள் தங்கள் சிநேகிதராகிய சுவிசேஷகன் வார்த்தைகளை நினைவுகூர்ந்து அவர் சொன்னவைகளில் ஒன்றும் தப்பவில்லை, எல்லாம் நிறைவேறி வருகிறது என்று எண்ணிக்கொண் டார்கள். அதுவுமன்றி அவ்விருவரும் நம்மில் எவன் இங்கே சாக வேண்டியதிருக்குமோ அவனே அதிக பாக்கியவான் என்று ஒருவரை ஒருவர் தேற்றிக்கொண்டு, அவரவர் உள்ளுக்குள்ளாக தனக்கே அந்த பாக்கியம் கிடைக்கவேண்டும் என்கிற ஆசையுடையவர்களாய் இருந்தார்கள். கடைசியாக சகலத்தையும் ஆளுகிற சர்வ ஞானியின் திருவுள தீர்மானத்துக்குத் தங்களை ஒப்புவித்து தீர்ப்பு பிறக்கும் மட்டும் மனதிருப்தியோடு காலங்கழித்தார்கள்.



அதிபதிகளுக்குச் சாவகாசமான காலம் வந்தபோது பிரயாணிகளை மரணக்கினைத் தீர்ப்புக் குட்படுத்தும்படியாக கடைசி விசாரணை நாளைக்குறித்து அவ்விருவரையும் நியாதிபதியின் சிம்மாசனத்துக்கு முன்பாக கொண்டுபோய் நிறுத்தினர்கள். அவர்களை விசாரணைசெய்த நியாதிபதிக்கு நன்மை வெறுப்போன் என்று பெயர். இவர்கள்மேல் சாட்டப்பட்ட குற்றங்கள் வார்த்தைகளில் சற்று வேறுபட்டிருந்தாலும் பொருளில் ஒன்றுகவே இருந்தது. அதை மொத்தமாய் சொல்ல வேண்டும் என்றால், இவர்கள் மாயாபுரி வியாபாரங்களின் விரோதி களாயும், சரக்குகளை தாறுமாறு செய்கிறவர்களாயும் இருக்கிறார்கள். இவர்கள் நகரத்துக்குள் சச்சரவுகளையும், அமளிகளையும் உண்டாக்கி ராஜசட்டங்களை அவமதிக்கும்படி குடிகளில் சிலரைத் தங்கள் பட்ச மாக்கிக்கொண்டார்கள் என்பதுதான்.

இவர்கள்மேல் சாட்டப்பட்ட குற்றங்கள் இவைகள் என்று மொத்த மாய் சொல்லப்பட்டவுடனே உண்மை அதற்கு மறு உத்தரவு சொல்லத் துவங்கினன். அவன் சொன்ன உத்தரவு இதுதான்: நான் உன்னத மானவைகளுக்கு எல்லாம் மேலான மகா உன்னதமானவருக்கு விரோத மாய் எதிர்த்து நின்றவனோடு எதிர்த்து நிற்கிறேனே அல்லாமல்

வேரொன்றும் செய்யவில்லை. நடந்ததாகச் சொல்லப்படுகிற தாறுமாறு களைப்பற்றியோ நான் ஒன்றும் செய்ததில்லை. நானே சமாதான புருஷனுய் இருக்கிறேன். எங்கள் பட்சம் திரும்பின ஆட்கள், எங்களு டைய உண்மையையும், குற்றமில்லாமையையும் பார்த்து சேர்ந்தார்களே அன்றி மற்றப்படி அல்ல, மேலும் அவர்கள் நஷ்டத்திலிருந்து நலத்துக்கே திரும்பி இருக்கிறார்கள். உங்கள் ராஜாவை வெகுவாக உயர்த்து கிறீர்களே, ஆனல் அவன் எங்கள் ஆண்டவருடைய பகைஞனகிய பெயல்செபூல் ஆனபடியால், நான் அவனையும் அவனுடைய தூதர்கள் அனைவரையும் ''சி'' என்று அருவருக்கிறேன் என்றன்.

அதைக்கேட்டவுடனே நன்மை வெறுப்போன் உக்கிரகோபமாகி, இந்தக் கைதிகளுக்கு விரோதமாய், மகா ராஜாவின் பட்சம் நின்று குற்றம்சாட்டக்கூடியவர்கள் இந்த ஷணமே நியாய சபை முன் வந்து ஆஜராகவேண்டியது என்று விளம்பரம் பண்ணினன். அச்செய்தி ஊரெங்கும் பறைசாற்றப்பட்டவுடனே : **வன்கண்ணன், அவபக்தி, இச்சகன்** என்றும் மூவர், அடியார் மூவரும் இதோ சாட்சி சொல்லத் தயாராய் இருக்கிறோம் என்று புறப்பட்டு வந்தார்கள். (**வன்கண்ணன்** என்பது பொருமையே துன்பப்படுதலுக்கு ஒரு காரணம். இயேசு பிலாத்துவின் முன் குற்றம்சாட்டப்பட்டு நிற்கையில் அவன் இதன் முகாந்தரம் பொருமையே என்று அறிந்திருந்தான். (மத் 27 : 18) **அவபக்தி** : இது புறம்பான சடங்குகளிலே நம்பிக்கையை வைத்து அதை எதிர் பேசுகிறவர்கள் மேல் தீரா விரோதம் உடையவர்களை காண்பிக்கின்றது. **இச்சகன்** : மெய் தேவபக்தியில்லாத அதிகாரிகளி டத்தில் விசுவாசிகளை தூஷித்துப் பேசி அவர்கள் தயவை சம்பாதித்துக் கொள்ளும்படி முயலுகிறவர்களை இது குறிப்பிடுகின்றது.) அப்புறம் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிற கைதிகளை அவரவர் அறிவார்களா என்றும், கைதிகளுக்கு விரோதமாகவும், ராஜாவுக்கு பட்சமாயும் சொல்லத்தக்க சாட்சிகள் ஏதாவது உண்டா என்றும்விளுவப்பட்டார்கள்.

அப்போது வன்கண்ணன் எழுந்து நின்று பின்வருகிறபடி சாட்சி சொன்னன். அதாவது தரும துரைகளே ! அடியேன் இவனை வெகு நாளாய் அறிவேன். இந்த நியாய சபைக்கு முன்பாக நான் இந்த மனுஷனைக்குறித்து சத்திய பிரமாணத்தோடு சொல்லுகிறதாவது-

நியாதிபதி :. பொறு, பொறு இவனை சத்தியம் வாங்கு- அப்படியே அவன் சத்தியம் செய்தபின்பு சொல்லுகிறன் : என் ஆண்டவனே, இவனுக்கு உண்மை என்ற சிறந்த பெயர் இருந்தாலும் இவனைப் போலொத்த உண்மைத்துரோகி நமது தேசத்தில் எவனும் இல்லை. இவனுக்கு அரசன் என்றும் இல்லை, குடிகள் என்றும் இல்லை, இவனுக்கு மகாராஜாவின் கட்டளை என்றும் இல்லை, மாமூல் வழக்கம் என்றும்

இல்லை, எல்லாவற்றையும் அசட்டைசெய்து அவமதிக்கின்றான். இவன் தனக்குள் இருக்கும் ராஜ துரோக கருத்துக்களை, உண்மைக்கும் பரிசுத்தத்திற்கும் ஏற்ற சட்டங்கள் என்று பெயரிட்டுக் கொண்டு மற்றவர்களுக்குப் போதிக்கும்படியாக வெகுவாய் பிரயாசப்படுகின்றான். அதுவுமல்லாமல் ஒரு நாள் இவன் வந்து நின்றுகொண்டு கிறிஸ்து மார்க்கத்துக்கும், நமது மாயாபுரியின் மாமூல் சட்டங்களுக்கும் ஒன்றுக் கொன்று நேர் விரோதமாய் இருக்கிறது, அந்த விரோதத்தை சமரசப் படுத்தக் கூடவேகூடாது என்று சொல்ல என்னுடைய இரண்டு காதாலும் கேட்டேன். இப்படி இவன் சொல்வதினாலே என் ஆண்டவனே இவன் நமது நகரத்தின் சிறந்த சட்டங்களை குற்றமாக தீர்க்கிறது மாத்திரம் அல்ல, அச்சட்டங்களை தங்க பிரமாணமாக எண்ணி அதின்படி செய்துவருகிற நம்மெல்லாரையும் குற்றவாளிகளாகத் தீர்க்கிறவனாய் இருக்கிறான்.

நியாயா :- இன்னும் நீ சொல்லவேண்டிய சமாசாரங்கள் உண்டா?

வன்கண்ணன் :- என் ஆண்டவனே, நான் இன்னும் சொல்ல வேண்டுமானால் அதிகம் உண்டு. என்றாலும் அது நியாய சபையை அலட்டுகிறதாய் இருக்கும் என்ற காரணத்தால் சொல்லாதிருக்கிறேன். ஆனாலும் வேறு சாட்சிக்காரர் சாட்சி சொன்ன பிற்பாடு, இவனை மரணக்கினை செய்வதற்கு சாட்சிகள் தேவையாய் இருக்குமானால் அடியேன் சொல்ல தயாராய் இருக்கிறேன் என்று சொன்னான். அப்போது அவனை ஒரு பக்கத்தில் கொண்டு போய் நிற்கவைத்தார்கள்.

அப்புறம் அவபக்தியை கூப்பிட்டார்கள். உடனே அவன் நியாய சபை முன் வந்து கைகட்டி நின்றான். நியாயாதிபதி அவனை நோக்கி: கிராதிக்குள் நிற்கும் கைதியைப் பார்த்துக்கொள். அவனுக்கு விரோதமாக அரசர் பட்சத்தில் நீ சொல்லவேண்டிய சாட்சிகளை சொல் என்று சொன்னான். அப்புறம் அவனிடத்தில் சத்தியம் வாங்கினார்கள். சத்தியம் பண்ணி முடிந்தவுடன் அவன் சொல்லுகிறான்.

அவபக்தி :- என் ஆண்டவனே ! இவனோடு எனக்கு அதிகப்பழக்கமும் இல்லை, இனிமேல் இவனுடன் அதிக பழக்கமாக எனக்கு ஆசையும் இல்லை. என்றாலும் சில தினங்களுக்கு முன்னே இவனுடன் நான் பேசிக் கொண்டிருந்த சம்பாஷணையினால் இவன் தொத்து வியாதியைப் போலொத்த நாசகாலன் என்று திட்டமாய் அறிந்து கொண்டேன். எப்படியெனில், நாங்கள் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில் உங்கள் மார்க்கம் ஒரு காசுக்கும் உதவாது, அதன்படி நடக்கிறதனாலே ஒரு மனுஷனும் தேவ தயவை பெற்றுக்கொள்ளமாட்டான் என்று இவன் சொல்லக்கேட்டேன். இப்படி இவன் சொன்ன வார்த்தைகளின் கடைசித் தீர்மானம் எப்படி முடியவேண்டியதென்பது, என் ஆண்டவனே, தாங்களே

நன்ருய் அறிவீர்கள். அது எதுபோல் இருக்கிறது என்ருல், நாம் இன்னும் வீணை ஆராதனை செய்து கொண்டு வருகிருேம் என்றும், கடைசியாக நாம் அனைவரும் நாசமாய் போவோம் என்றும் சொன்னது போல இருக்கிறது. அடியேன் சொல்லக்கூடிய வாக்குமூலம் இவ்வளவு தான் ஸ்வாமி! என்று சொல்லி முடித்தான்.

அப்புறம் இச்சகனை கூப்பிட்டு சத்தியம் வாங்கி, அவன் தன் ராஜன் பட்சமாகவும், குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிற கைதிக்கு விரோதமாகவும் சொல்லத்தக்க சாட்சியைவெளியிடச் சொன்னர்கள். அப்படியே இச்சகன் பின்வருகிற பிரகாரம் சாட்சி சொல்லத் தொடங்குகிருன்.

இச்சகன் :- மகா பிரபுவே ! மற்ற பிரதானிகளே ! கேளுங்கள். இந்த துரோகிப் பயலை வெகுகாலமாக நான் அறிந்தும் இருக்கிறேன். பேசக்கூடாத வார்த்தைகளை எல்லாம் இவன் துணிந்து பேசினதைக் கேட்டும் இருக்கிறேன். மாட்சிமைதங்கிய மகாமன்னராகிய பெயெல்செபூல் என்னும் நமது அதிபதியை இவன் தூஷித்ததுமன்றி அவருடைய பட்டவர்த்தனராகிய பழைய மனித நாயனர், மாம்ச இச்சை நாயனர், சம்பிரமநாதர், இடம்பநாதன், காமாதிபதி, லோகதுரை முதலிய அவருடைய உத்தம சிநேகிதராகிய பிரபுக்களையும், மற்றும் துரை மக்களையும் பற்றிப் பல அவதூறுகளைச் சொல்லியும் இருக்கிருன். அதுவுமன்றி, இந்நகரத்தில் உள்ளவர்கள் எல்லாரும் தன் மனம்போல் ஏகமனமுடையவர்களாயிருந்தால், இப்பிரபுக்கள் ஒருவரையும் இவ்விடத்தில் தங்க இடம் இல்லாமலும், தாபரிக்க ஸ்தலம் இல்லாமலும் ஓட்டி விடுவேன் என்றும் இவன் சொன்னது உண்டு. அதுவும் அன்றி என் ஆண்டவனே ! உமக்காவது அவன் மரியாதை செய்திருப்பானு ? இல்லவே இல்லை. அவனை நியாயம் தீர்க்கும்படி ஏற்படுத்தி இருக்கிற உம்மையே பக்தியற்ற படுசண்டாளன் என்றும், இன்னும் இவைபோன்ற துர்ச்சன வார்த்தைகளாலும் இவன் திட்டுவதற்கு அஞ்சவில்லை. இப்படியாக இவன் மாயாபுரியின் பெரிய மனுஷர்களை எல்லாம் கண்டபடி அவதூறு பண்ணியிருக்கிருன் என்று சொல்லி முடித்தான்.

இவ்வண்ணம் மூவரும் அவரவர் சொல்லவேண்டிய சாட்சிகளை சொல்லி முடித்தபின்பு, நியாயாதிபதி குற்றஞ்சாட்டப்பட்ட கைதியைப் பார்த்து : அடா, வேதப்புரட்டா, அடா பதிதா, அடா துரோகி, இந்த உத்தம புருஷர் உனக்கு விரோதமாய் சொன்ன சாட்சியைக் கேட்டாயா? என்று சொன்னன்.

உண்மை :- அப்போது உண்மை ; நியாயாதிபதியே, என் குற்றமில்லாமையை விளக்கும்படியாக நான் பேச விரும்பும் சில காரியங்களைச் சொல்லும்படி உத்தரவுதானு? என்று கேட்டான்.

நியாயா :. அதற்கு நியாயாதிபதி, போடா, போடா, இனி நீ பிழைத்திருக்கப் பாத்திரன் அல்ல, இந்த இடத்திலேயே தலையை கொய்துபோடவேண்டியது நியாயம். என்ருலும் நாங்கள் உன்மட்டில் பாராட்டுகிற தயாள குணத்தை உலகமே அறியட்டும். நீ சொல்ல வேண்டியனதச் சொல்லு.

உண்மை :- (1) வன்கண்ணன் எனக்கு விரோதமாய் சொன்ன சாட்சியைப்பற்றி நான் சொல்ல வேண்டியது இதுதான் :- தேவ வசனத்துக்கு இசைவாய் இராத எந்த கட்டளையாவது, பிரமாணமாவது, வழக்கமாவது, ஜனக்கூட்டமாவது கிறிஸ்து மார்க்கத்துக்கு நேர் விரோதம் என்று நான் சொன்னதே அல்லாமல் வேருென்றும் சொன்ன தில்லை என்று அறிக்கையிடுகிறேன். இப்படி நான் சொன்னது தப்பிதமேயானுல் அந்த தப்பிதத்தை எனக்கு உணர்த்திக் காட்டுங்கள். அப்போது நான் சொன்னது சரி அல்ல என்று ஒத்துக்கொண்டு அறிக்கையிட ஆயத்தமாய் இருக்கின்றேன்.

(2) அவபக்தி எனக்கு விரோதமாய் சாட்சி சொன்னதைப் பற்றி நான் சொல்ல வேண்டிய காரியம் என்னவென்ருல் : தேவ வணக்கத்தில் தெய்வீக விசுவாசம் வேண்டியது அவசியம். ஆனுல் கர்த்தருடைய சித்தத்தைப்பற்றிய தெய்வீக வெளிப்படுத்தல் ஒன்று இல்லாவிட்டால், தெய்வீக விசுவாசம் உண்டாக வழி இல்லை. ஆதலால் தேவ வணக்கத்தில் தெய்வீக வெளிப்படுதலுக்கு இசையாததான எவைகள் நுழைக்கப்பட்டு இருக்குமோ, அவைகள் மனுஷீக விசுவாசத்தின்படி அன்றி வேறு வகையாய் நுழைக்கப்பட்டு இருக்கமாட்டாது, இப்படிப்பட்ட விசுவாசம் நித்திய ஜீவனுக்கு உதவமாட்டாது என்று சொன்னதற்கு மிஞ்சி வேருென்றும் சொன்னது இல்லை என்று அறிக்கையிடுகிறேன்.

(3) இச்சகன் எனக்கு விரோதமாக சொன்ன சாட்சியில் நான் பேசினதாக அவன் குறித்த தூஷணங்களும். அவதூருன வார்த்தைகளும் என் வாயில் வந்ததே இல்லை. ஆனுல், இந்த நகரத்தின் அதிபதியும், அவருடைய பட்டவர்த்தனராக இச்சகன் பெயர் சொன்ன பிரபுக்களும், மற்ற துரைமக்களும் இந்த நாட்டுக்கும், நகரத்துக்கும் ஏற்றவர்களாய் இராமல், நடுநரகத்தில் இருக்கவே தகுந்தவர்கள் என்று மாத்திரம் சொன்னது உண்டு. தேவன் என்மேல் கிருபையாய் இருப்பாராக என்று சொல்லி முடித்தான்.

அப்புறம் நியாயாதிபதியானவர், இம்மட்டும் தமது சிம்மாசனத்தின் பக்கத்தில் நின்று நடந்த விசாரணையை கவனித்துக்கொண்டு இருந்த பல பொது மனுஷரைப்பார்த்து : ஓ, ஜெரிமாராகிய துரைமாரே ! கேளுங்கள் : இந்த நகரம் முழுவதையும் கலங்கச்செய்து அதினிமித்தம் குற்றம் சாட்டப்பட்டு நிற்கிற கைதியை நீங்கள் உங்களுக்கு முன்னே

பார்க்கிறீர்கள். இவனுக்கு விரோதமாய் ஊரிலுள்ள கனவான்களில் சிலர் சாட்சி சொன்னவைகளை கேட்டும் இருக்கிறீர்கள். அந்த சாட்சிகளை மறுத்து கைதி பேசின வார்த்தைகளையும், அவன் பண்ணின அறிக்கை யையும் கேட்டீர்கள். அவனை தூக்கில் போடுகிறதோ விடுதலை செய்கிறதோ என்பது உங்கள் மனதுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. எப்படி இருந்த போதினும் நீங்கள் உங்கள் தீர்மானத்தை வெளியிடும் முன் உங்களுக்கு நமது ராஜ்யபாரத்து நியாயப்பிரமாணங்களின் சாராம் சத்தை புகட்டிவைப்பது எனக்கு அவசரமாகத் தோன்றுகின்றது.

நமது அதிபதியின் உத்தம ஊழியக்காரரில் ஒருவனுகிய பெரிய பார்வோன் என்பவன் காலத்தில், எதிர்மார்க்கத்தார் பலுகிப் பெருகி பலத்தில் வளர்ந்துவிடாதபடிக்கு, அவர்களுக்குள் பிறக்கும் ஆண் குழந்தைகளை எல்லாம் ஆற்றில் போட்டுவிடவேண்டும் என்று ஒரு கட்டளை பிறந்தது (யாத் 1 : 22) அவருடைய தாசரில் வேரொருவராகிய மகா நேபுகாத்நேச்சாருடைய நாட்களில் அரசன் நிறுத்தின பொற் சிலையை முகங்குப்புறவிழுந்து கும்பிடாதவன் எவனே, அவன் அந்நேரமே எரிகிற அக்கினிச்சூழையில் போடப்படும்படி ஒரு சட்டம் பிறப்பிக்கப் பட்டது (தானி 3 : 6) அதுவும் அல்லாமல் தரியு மகாராஜாவின் காலத்தில் குறிக்கப்பட்ட ஒரு காலத்துக்கு எந்த மனுஷனும் அந்த அரசனை அல்லாமல் வேறு தேவனையாவது, எந்த மனுஷனையாவது நோக்கி ஜெபம் செய்கிறது உண்டானால் அப்படிப்பட்டவனை சிங்கங்களின் குகையிலே போடவேண்டும் என்று தாக்கீதும் பிறந்தது. நமது அரசரின் ஆளுகைச்சட்டங்கள் இப்படியிருக்க, இப்பொழுது இந்தக் கைதி அவைகளின் சாரத்தை நினைவினால் மாத்திரம் மீறி இருந்தாலும் அதை சகிக்ககூடாது. இவனே வார்த்தையினாலும், கிரியையினாலும் மீறி இருக்கிறான் என்று தெரியவருகிறது. இந்த அநியாயத்தை யார்தான் சகிக்கக்கூடும்!

பார்வோனின் கட்டளையைப்பற்றி சொல்லவேண்டுமானால், அது ஒரு குற்றமும்நடவாதிருந்த காலத்தில் சம்பவிக்கிறதற்கு இடமான பொல்லாப்பை விலக்கிப்போடும்படி சந்தேகத்தால் மாத்திரம் ஏற்படுத் தப்பட்டது இப்போதோ ஒரு துரோகம் வெளிப்படையாய் நடந்திருக் கின்றது. இரண்டாம் மூன்றும் சட்டங்களைப்பற்றி சொல்லவேண்டுமானால் இவன் நமது மார்க்கத்தை அடியோடு ஆட்சேபிக்கிறதாக தெரிய வருகிறது. ஆகையால் அவன் அறிக்கையிடுகிற ராஜதுரோகத்திற்காக அவன் மரணமடையப்பாத்திரனாய் இருக்கிறான். இவைகளை நீங்கள் மனதில் ஆராய்ந்து பார்த்து ஓ பிரபுக்களே ! துரைமக்களே ! கனவான் களே ! ஜூரிமாரே ! உங்கள் தீர்ப்பை ஆலோசனையோடு கூறக்கட வீர்கள் என்று சொன்னான்.

நியாதிபதியாகிய நன்மை வெறுப்போன் இவ்வளவும் சொன்ன உடனே, அவரை சுற்றிலும் நின்ற ஜூரிமாராகிய கபோதி, நலமில்லான், குரோதி, காமி, நெறிகேடன், குறும்புத்தனன், மனமேட்டிமை, விரோதி, பொய்யன், நிஷ்டூரன், ஜாதிப்பகை, தீராப்பகை ஆகிய பன்னிருவரும் தங்களுக்குள் அந்தரங்க ஆலோசனை செய்து கொள்ளும்படி நியாய சபையைவிட்டு வெளியே போய் தனித்திருந்து அவரவர் தீர்மானங்களைப் பற்றி ஆலோசித்துக்கொண்டு, கடைசியாக எல்லாரும் கைதியை மரணக்கினை தீர்ப்புச்செய்யும்படி ஏக மனதுடையவர்கள் ஆனார்கள். ஜூரிமாரில் முதல்வராகிய கபோதி: இவன் பாதகன் என்று நான் பகீரங்கமாய் பார்க்கின்றேன் என்றார். அப்புறம் நலமில்லான் என்பவர் இப்படிப்பட்ட பயலை பூமியிலிருந்து அகற்றவேண்டும் என்றார். அப்பால் குரோதி, ஆம், ஆம் அவன் தொலைந்தால் நலம், அவன் முகத்தைப் பார்க்கவே எனக்கு அவ்வளவு வெறுப்புண்டாகிறது என்றார். அதன்பின் காமி, நான் அவனை சகிக்கமாட்டேன் என்றார். பின்பு நெறிகேடன், நானும் சகிக்கமாட்டேன், இவனைவிட்டுவிட்டது நிஜமானால் என் வழிகளை எல்லாம் குற்றப்படுத்த துணிவான் என்றார். அப்பால் குறும்புத்தனன், இனி ஆலோசனை என்ன, பயலை கழுவில் ஏற்றுங்கள் என்றார். அதன்பின் மனமேட்டிமை, இவன் ஒரு காசும் பெறுத பயல் என்றார். என் மனம் இவனுக்கு விரோதமாய் கொதிக்கிறது என்று விரோதி விளம்பினார். இவன் மகா திருட்டுப்பயல் என்று பொய்யன் சொன்னார். இவனை கழுவில் ஏற்றுவது கூட பற்றாது என்று நிஷ்டூரன் சொன்னார். இவனை நமது நடுவில் இராதபடிக்கு நிர்மூலம்பண்ணவேண்டியது என்று ஜாதிப்பகை என்பவர் கூறினார். இந்த உலகம் முழுவதையும் எனக்கு தந்துவிட்டபோதிலும் அவனுடன் சங்காத்தம் செய்யமாட்டேன். ஆகையால் அவனுக்கு மரணக்கினை தீர்ப்பிடுவோமாக என்று தீராப்பகை விளம்பினார்.

ஜூரிமாருடைய தீர்மானத்தின்படியே தீர்ப்பும் பிறந்தது. அந்த தீர்ப்பாவது ''இவனை இப்பொழுதிருக்கிற இடத்திலிருந்து இவன் புறப்பட்டுவந்த இடத்துக்கு கொண்டுபோய் அவ்விடத்திலே தங்களால் செய்யக்கூடிய குரூரமான மரணக்கினையை அவனுக்கு செய்யவேண்டும்'' என்பதே.

அவர்கள் தங்கள் நியாயப்பிரமாணத்தின்படி உண்மை என்போனை வெளியே கொண்டு வந்த பிற்பாடு முதலாவது வாரால் அடித்தார்கள். அப்புறம் அவனை குட்டினார்கள், பின்பு கத்திகளால் அவன் சதையில் குத்தினார்கள். அப்பால் அவன்மேல் கல் எறிந்தார்கள், அதன்பின் தங்கள் ஈட்டிகளால் அவனை குத்தினார்கள். கடைசியாக கட்டைகளை அடுக்கி அதன்மேல் அவனை கட்டிவைத்து அக்கினியை கொளுத்தி அவனை சாம்பலாக்கினார்கள். இவ்வண்ணமாய் உண்மையின் சமாச்சாரம் முடிந்தது.

அப்புறம் நான் உண்மையைக் கொலைசெய்த ஜனக்கூட்டத்தின் பின்னே ஒரு ரதமும் இரண்டு குதிரைகளும் அவனுக்காக காத்துக்

கொண்டு நிற்கக்கண்டேன். சத்துருக்கள் அவனுக்குச் செய்ய வேண்டிய ஆக்கினை அனைத்தையும் செய்து முடித்தவுடனே அவன் அதின்மேல் ஏற்றிக்கொள்ளப் பட்டு உன்னத நகரத்தின் வாசலுக்கு நேர் வழியாக எக்காள சத்தத்தோடு மேகங்களுக்கு ஊடே கொண்டு போகப்பட்டான். கிறிஸ்தியானே மறுபடியும் சிலகாலம் மாயாபுரி சந்தையில் காவலில் அடைக்கப்பட்டிருந்தான். ஆனால் எல்லாவற்றையும் ஆண்டு நடத்துகிற தேவன் துஷ்டரின் நிஷ்டூரங்களையும் தமது கையின்கீழ் அடக்கிக் கொண்டு தமது கிரியையை நடத்திக்கொண்டிருந்தார். அந்தக்காலத் தில் கிறிஸ்தியான் தெய்வாதீனமாக எப்படியோ தப்பிப் பிழைத்துத் தன் வழியே நடந்து பிரயாணம் போனான். அவன் தன் வழியே போகப் போக ஆனந்த பரவசங் கொண்டு

1. உண்மை என்னும் வீரனே நீ
வெற்றிகொண்டாய் ஜெயம்பாடி
துதி கீதம் முழக்குவாய் - அல்லேலூ யா

2. பிதாமுகம் தரிசித்தாய்
தூ தருடன் கூடிக்கொண்டாய்
துதிகீதம் பாடுகிருய் - அல்லேலூ யா.

3. பாவிகள்தான் பாதாளத்தில்
புலம்பியே அழுகையில்
பரிசுத்தர் பாடுகிருர் - அல்லேலூ யா.

4. உன்னைக்கொன்று போட்டாலுமே
இன்னும் உயிர் உனக்குண்டுமே
துதிகீதம் முழக்குவாய் - அல்லேலூ யா.

என்று பாடிக்கொண்டே போனான்.

இப்பொழுது நான் என் சொப்பனத்திலே கிறிஸ்தியான் தனிமையாய் அல்ல திடநம்பிக்கை என்னும் ஒரு தோழனோடு சேர்ந்து பயணம் பண்ணுகிறதை கண்டேன். (திடநம்பிக்கை என்பது பழைய கிறிஸ்த வர்கள் பூரண நம்பிக்கை கொள்ளும்படியாக கிறிஸ்துமார்க்கத்தின் வழிகளில் நடந்து வருகிற புதுக்கிறிஸ்தவர்களை குறிக்கிறது.) மாயாபுரிச் சந்தையின் குடிகளில் ஒருவனுகிய திடநம்பிக்கை, கிறிஸ்தியானும் உண்மையும் மாயாபுரியில் மானபங்கப்பட்டபோது பேசின சாந்தத்தையும் காட்டின சகிப்பையும் கவனித்துக் கிறிஸ்தியானுடன் சேர்ந்து பயணம் செய்யும்படி தீர்மானித்து உடன்படிக்கை பண்ணிக்கொண்டவனுய் இருந்தான். இவ்விதமாக ஒருவன் சத்தியத்துக்கு சாட்சியாக மரித்தான். வேரொருவன் கிறிஸ்தியானுக்கு தோழனுகி மோட்ச பிரயாணம் செய்யும் படிக்கு அவனுடைய சாம்பலில் இருந்து எழுந்தருளி இருந்தான். தன்னையல்லாமல் இன்னும் அனந்தம் பேர் மாயச்சந்தையில் இருந்து அவர்களுக்கு பின்னலே வரும்படி ஆசையாய் இருக்கிறதாகவும் திடநம்பிக்கை கிறிஸ்தியானுக்கு சொன்னான்.

இமயமலைகளிலுள்ள பாகேஷ்வரில் நடந்த தேவ ஊழியங்கள்

கர்த்தர் இயேசுவுக்கே எல்லா மகிமை, கனம், துதி உண்டாவதாக. இமயமலைகளிலுள்ள அல்மோரா என்ற மலைப்பட்டணத்திலிருந்து 90 கி.மீ. தூரத்தில் பாகேஷ்வர் என்ற இடம் உள்ளது. கோமதி நதி, சரயு நதி என்ற இரண்டு நதிகள் இந்த பாகேஷ்வரில் சங்கமம் ஆகின்றது சுற்றிலும் இமயமலைத் தொடர்கள் சூழ்ந்து நிற்க மத்தியில் உள்ள பள்ளத்தாக்கில் பாகேஷ்வர் என்ற சிறிய பட்டணம் அழகாக அமைந்துள்ளது. ஒரு பழைய இந்து கோயிலும் நதிக்கரையில் அமைந்துள்ளது. கங்கை நதிக்கரையில் காசி பட்டணம் அமைந்திருப்பதைப்போன்று பாகேஷ்வர் பட்டணமும் ஆரம்பத்தில் குறிப்பிட்ட நதிகளின் கரையில் அமைந்துள்ளது.

காசியில் எப்படி பிணங்களை எரிக்கின்ருர்களோ அவ்வண்ணமாக இங்குள்ள நதிக்கரையின் சங்கம ஸ்தானத்தில் பிணங்கள் எரிபடுகின்றன பக்கத்து ஊர்கள், பட்டணங்களிலிருந்தெல்லாம் மனித உடல்கள் மஞ்சள் துணிகளில் சுற்றப்பட்டு பேருந்துகளின் கூரைகள், வேன்கள், ஜீப் போன்ற வாகனங்களில்வைத்து இங்கு கொண்டு வரப்படுகின்றன. இந்த பாகேஷ்வரில் எரிக்கப்பட்டு இங்குள்ள நதிகளில் அஸ்தி கரைக்கப் பட்டால் முக்தி அடையலாம் என்ற காரணம் கட்டாயம் இருக்கலாம். நாங்கள் அதைக்குறித்து எவரிடமும் கேட்டுக்கொள்ளவில்லை.

இந்த பாகேஷ்வர் என்ற இடத்துக்கு நாங்கள் வந்து ஊழியம் செய்யவேண்டுமென்பது தேவனுடைய அநாதி தீர்மானமாக இருந்தது. வேறு எவரும் இந்த இடத்தை குறிப்பிட்டு சொல்லி நாங்கள் இங்கு ஊழியத்துக்கு வரவில்லை. கர்த்தருடைய தயவுள்ள கரம் எங்களை இந்த வைராக்கியமான இந்துப்பட்டணத்துக்கு அழைத்துக்கொண்டு வந்தது.

தேவதாரு மரங்கள் தேவனுடைய அன்பையும், ஞானத்தையும் பறைசாற்றி நின்றன.

அல்மோராவிலிருந்து நாங்கள் பாகேஷ்வர் வரும் வழித்தடத்தில் மலைகள் எல்லாம் வானளாவ உயர்ந்து நின்ற தேவதாரு மரங்களால் நிறைந்து இருந்தன. அவைகளை பார்த்தபோது ஆண்டவருடைய எல்லையற்ற ஞானத்தை குறித்து அதிகமாக சிந்தித்தேன். நம் ஊர்களி லுள்ள மரங்களைப் போன்று பக்கவாட்டில் பெரிய கிளைகள் செல்லாதபடி ஒரே தடிமரமாக அந்த தேவதாரு மரங்கள் வானளாவி நின்றன.

மனிதனுக்கு பயன்படும் விதத்தில் ஞானமுள்ள கர்த்தர் இந்த தேவதாரு மரங்களை படைத்துள்ளார். ஓ, ஆண்டவர் மனிதனை எவ்வளவாக நேசித்து தனது படைப்புகளை எல்லாம் அவனுக்கு பயன் உள்ள விதத்தில் அமைத்துக்கொடுத்துள்ளார்! ஆனால், மனிதன் ஆண்டவருடைய அன்பையும், ஞானத்தையும் கொஞ்சம் கூட நினைத்துப் பார்ப்பதில்லை.

பாகேஷ்வரில் கர்த்தர் தந்த ஒரு பயனுள்ள கனி

பாகேஷ்வர் என்ற அந்த சிறிய பட்டணத்துக்கு அருகிலேயே சில வீடுகள் மாத்திரம் உள்ள ஒரு சின்ன குட்டி கிராமம் உள்ளது. அதின் பெயர் ஆரோலி என்பதாகும். அங்கு நாங்கள் மோகன்லால் என்ற ஒரு தவனமுள்ள ஆத்துமாவை சந்தித்தோம். அவர் ராணுவ சேவையிலிருந்து ஓய்வுபெற்றவராதலால் ராணுவத்தில் பணிசெய்த நமது சகோதரன் நார்ட்டன் அவர்கள் தேவனுடைய அன்பை அவரோடும் அவரது நண்பர்கள் இருவரோடும் விஸ்தாரமாக பகிர்ந்து கொண்டார்கள். பின்னர் நாங்கள் அவருக்கும் அவரது நன்பர்களுக்கும் தேவனுடைய சுவிசேஷ பிரதிகளை ஜெபத்துடன் வழங்கினோம்.

மோகன்லால் தேவனுடைய சுவிசேஷ பிரசுரங்கள் மேல் ஒரு தனி வாஞ்சை கொண்டிருப்பதை நாங்கள் கவனித்தோம். எங்கள் சந்திப்புக்குப் பின்னர் மோகன்லால் எங்களை அன்பொழுக உபசரித்து தேயிலை பானம் எல்லாம் கொடுத்தார். அவருக்கு மனைவியும் நான்கு பிள்ளைகளும் உண்டு. தனது குடும்பத்தை நடத்துவதற்காக ஒரு சிறிய கடையும் வீட்டிலேயே வைத்துள்ளார். மோகன்லால் தனது இந்து மார்க்கத்தில் அளவுகடந்த பக்தியுள்ளவர் என்பதை நாங்கள் கவனித்தோம். வீட்டுக்கு அருகிலேயே ஒரு கோயில் கட்டி தனது கடவுளை வணங்குவதை நாங்கள் பார்த்தோம். ஒரு இரும்புச் சட்டத்தில் சிறிய வெண்கல மணிகளை கட்டி தொங்கவைத்துள்ளார். வெளியே எங்கும் போகும் போதும் வெளியிலிருந்து உள்ளே வரும்போதும் அந்த மணிகளில் ஒன்றை அடித்து தனது கடவுளை தான் எப்பொழுதும் நினைத்துக் கொண்டே இருப்பதாக அந்த கடவுளுக்கு நினைப்பூட்டுவதை நாங்கள் கவனித்து ஆச்சரியம் அடைந்தோம்.


நாங்கள் பாகேஷ்வரில் தங்கியிருந்த சில தினங்களிலும் மோகன்லாலை அவ்வப்போது சந்தித்துக்கொண்டோம். அந்த மனிதரையும் அவரது குடும்பத்தினரையும் புகைப்படம் எடுத்து அந்தப் புகைப்படங்களை அவருக்கு அனுப்பி வைத்ததுடன் ஒரு இந்தி மொழி புதிய ஏற்பாடு மற்றும் சாதுசுந்தர்சிங் ஜீவிய சரித்திரம் போன்ற அருமையான பிரசுரங்களை பதிவு தபாலில் அவருக்கு அனுப்பி வைத்தோம். தான் அவைகளை பெற்றுக்கொண்டதற்கு அடையாளமாக அவர் எங்களுக்கு கடிதம் எழுதினார்.

இந்த நிலையில் திரும்பவுமாக இந்த ஆண்டு (1998) நாங்கள் அவரை பாகேஷ்வர் சென்று சந்தித்தோம். இப்படி நாங்கள் சந்திக்கவேண்டு மென்பது தேவனுடைய திருவுளச்சித்தமாக இருந்தது. பொதுவாக நாங்கள் ஒவ்வொரு வருடமும் புதிது புதிதான இடங்களுக்குத்தான் தேவ ஊழியத்தின் பாதையில் செல்லுவது எங்கள் வழக்கமாக இருந்தது. ஒரு இடத்தில் ஊழியம் செய்தால் திரும்பவுமாக அந்த இடத்துக்கு போவது என்பது வெகு அபூர்வமாகும். இந்த நிலையில் 1997 ஆம் ஆண்டு ஒரு கர்த்தருடைய பிள்ளை வடமாநில ஊழியங்களை குறித்து என்னோடு பேசிக் கொண்டிருந்தபோது ஒரு தடவை ஊழியம் செய்த இடத்துக்கு திரும்பவு மாகச் சென்று சந்திக்கப்பட்ட ஆத்துமாக்களின் வளர்ச்சியை அறிவது கர்த்தருக்கு மகிமையாக இருக்கும் என்று கூறவே நான் அதைக்குறித்து தேவசமூகத்தில் ஜெபித்து அடுத்து வந்த 1998 ஆம் ஆண்டில் நாங்கள் சென்ற இடங்களுக்கே திரும்பவும் சென்று நாங்கள் சந்தித்த அதே ஆத்துமாக்களை மீண்டும் சந்தித்தோம். இந்தச் சந்திப்பு ஒரு அற்புதமான முறையில் தந்ததை நாங்கள் காண முடிந்தது.

நாங்கள் பாகேஷ்வர் பட்டணத்துக்கு இரண்டாம் தடவையாக சென்ற வருடம் சென்றோம். திடீரென ஒரு நாள் மோகன்லாலை சந்திக்க அவரது ஊரான ஆரோலிக்குப் போனோம். ஓராண்டு கால இடை வெளிக்குப் பின்னர் எங்கள் இருவரையும் கண்டது அவருக்கு ஆனந்த-மாக இருந்தது. அதைவிட ஒரு பேரானந்தம் எங்களுக்கு என்னவெனில் நாங்கள் தபால் மூலமாக அவருக்கு அனுப்பிக்கொடுத்த ஹிந்தி புதிய ஏற்பாட்டை அவர் தனது கடையில் உள்ள பணப்பெட்டிக்கு அருகில் பத்திரமாக வைத்திருந்தார். அதை எத்தனை தடவைகள் மனிதர் வாசித்தாரோ எங்களுக்குத் தெரியாது. அந்தப் புத்தகம் பல தடவைகள் நன்றாக படித்து பயன்படுத்தியதை எங்களுக்கு சொல்லாமல் சொல்லிற்று ''நாங்கள் உங்களுக்கு அனுப்பிய புதிய ஏற்பாட்டை இப்படியாக வாசித்து பயன்படுத்தி இருக்கின்றீர்கள்!'' என்று நாங்கள் மகிழ்ச்சி பொங்க மோகன்லாலை கேட்டபோது ''நீங்கள் இதைத்தான் அனுப்பி னீர்களாக்கும். சாதுசுந்தர்சிங் புத்தகமும் கூட அனுப்பினீர்கள். அதை யும் தான் நான் ஆவலோடு படித்து வருகின்றேன்'' என்று சொன்ன வார்த்தைகள் எங்கள் இருதயத்தை களிப்படைந்து துள்ளப்பண்ணிற்று. இதற்காகத்தானே இத்தனை பாடுகள், பிரயாசங்கள் ஆண்டுதோறும் எடுத்து வருகின்றோம்.

இரண்டாம் தடவை நாங்கள் அவரை சென்று சந்தித்ததால் எங்கள் அன்பு இன்னும் வலுவடைந்தது. அத்துடன் மீண்டும் கர்த்தர் இயேசு-வைக்குறித்து அவருடன் பகிர்ந்துகொள்ள நல்ல வாய்ப்பு கிடைத்தது. தேவனுடைய வார்த்தைகளை நேசித்து வாசிக்கும் அவர் தேவனுடைய பிள்ளைகளாகிய எங்களையும் அதிகமாக நேசித்து உபசரித்தார்.

'' மகாத்துமாக்கள் இருவரும் கடந்த வருடம் என் கடைக்கு வந்து சென்ற பின்னர் கடவுள் என்னை ஆசீர்வதித்துள்ளார். இதோபாருங்கள், இந்த விலையுயர்ந்த குளிர்பதன பெட்டியையும் இப்பொழுது நான் வாங்கி வைத்துள்ளேன்'' என்று மகிழ்ச்சி பொங்க கூறினர்.



இந்த தடவை நாங்கள் மோகன்லாலையும் அவரது குடும்பத்தினரையும் சில புகைப்படங்கள் எடுத்தோம். தங்களுடைய கல்யாண ஆடையில் தங்களை படமெடுக்க மோகன்லால் விரும்பினதால் அப்படியே படம் எடுத்து அவைகளை தபாலில் அனுப்பி வைத்தோம். எப்படியாவது அவரை கிறிஸ்துவுக்குள்ளாக ஆதாயப்படுத்துவதற்காக இதை எல்லாம் செய்தோம். அந்தப் படங்களில் ஒன்றை நீங்கள் இந்த செய்தியில் காணலாம். மோகன்லால் மற்றும் அவரது மனைவி மான்சிதேவிக்கு அருகில் அவர்கள் தங்கள் கடவுளை விழிப்படையச் செய்யும் மணிகளின் கம்பத்தையும் நீங்கள் பார்க்கலாம்.

1998 ஆம் ஆண்டு கடைசிவாக்கில் தேவனுடைய வசனங்கள் அடங்கிய ஹிந்தி மொழி தங்கவசன காலண்டர் ஒன்றும் நாங்கள் மோகன்

லாலுக்கு அனுப்பிக்கொடுத்தோம். அதைப் பெற்று நன்றி தெரிவித்து உடனே எங்களுக்கு கடிதம் எழுதியிருந்தார். இப்பொழுது நாங்கள் அவருடைய மூத்த குமாரன் அனில் குமாரை அஞ்சல் வழி வேதாகம வகுப்புக்கு அறிமுகம் செய்து வைத்துள்ளோம். இந்த இதழ் உங்கள் கரத்தை வந்தடையும் முன்னர் ஒரு ஹிந்தி மொழி வேதாகமத்தை மோகன்லால் எங்களிடமிருந்து பெற்று வாசித்துக் கொண்டிருப்பார். கர்த்தருக்கு சித்தமானால் நாங்கள் இந்த ஆண்டு திரும்பவுமாக அவரை ஒரு உத்தம கிறிஸ்தவனாக காண எங்களுடன் சேர்ந்து நீங்களும் ஜெபித்து வாருங்கள்.

தீமையை பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணன்

மோகன்லால் வீட்டிற்கு நாங்கள் திரும்பவும் ஒரு நாள் சென்றிருந்தோம். அப்பொழுது அவர் வீட்டிற்கு எதிராக வலது கைப்பக்கத்தில் சற்று உயரமான மேட்டில் கூடாரம் அடித்து தங்கியிருந்த நாடோடி மக்களில் ஒரு சிறு பெண் அவரது வீட்டுக்கு வந்து வீட்டுக்கு முன்பாக இருந்த தண்ணீர் குழாயில் தனது ஜெரிகேனில் தண்ணீர் பிடித்தாள். அதைக்கண்ட மோகன்லால் அந்தப் பெண்ணை கடுமையாக சாடினார். அவர் அப்படி சத்தமிடுவதைக் கண்ட நான் அவரிடம் அன்பாக ''உங்கள் வீட்டுக்கு அருகாமையில்தான் பெரிய நதி ஓடுகின்றது. இந்தப் பெண் உங்கள் தண்ணீர் குழாயில் கொஞ்சம் தண்ணீர் பிடிப்பதால் உங்களுக்கு எந்த ஒரு பாதிப்பும் இல்லையே'' என்று சொன்னேன்.

அதற்கு அவர் இவ்வாறு பதில் அளித்தார். ''உங்கள் வார்த்தைகளை நான் முழுமனதார ஏற்றுக்கொள்ளுகிறேன். எனது குழாயில் தண்ணீர் எடுப்பதற்கு நான் எதிர்ப்பு ஒன்றும் தெரிவிக்கவில்லை. ஆயிரம் பேர் வந்து எனது குழாயில் தண்ணீர் எடுத்தாலும் நான் ஒன்றும் பேச மாட்டேன். ஆனால் இந்த பெண் தண்ணீர் எடுப்பதை நான் கொஞ்சமும் விரும்பவில்லை. காரணம், இந்த தண்ணீர் நல்ல காரியத்துக்கு பயன் படுத்தப்படவில்லை. இதைக்கொண்டு போய் ஏமாற்றுக் காரியங்களுக்கு பயன்படுத்துகின்றனர். இந்த தண்ணீரை எடுத்துச்சென்று அதில் கிலோ கணக்கில் சீனி போட்டு காய்ச்சி அதில் ஒருவித கலரை (நிறத்தை) சேர்த்து அத்துடன் தேனுக்கான ஒரு மணத்தைக் கொடுத்து அதில் ஓரிரு காய்ந்துபோன தேன்கூட்டு அடைகளையும் போட்டு கடைவீதிகளிலும், கிராமப்புறங்களிலும் இந்த சீனிப்பாகை சுத்தமான தேன் என்று கூறி இந்த நாடோடிகள் நல்ல விலைக்கு விற்று வியாபாரம் செய்கின்றனர். அறியாத அப்பாவி மக்கள் இந்த பொய்யர்களின் வார்த்தைகளை நம்பி ஏமாந்துவிடுகின்றனர். எனது கண்களுக்கு முன்பாக இந்த அநியாயம் நடப்பதை நான் காண்கிறேன். எனது வீட்டுத் தண்ணீர் நல்ல காரியங்களுக்கு மாத்திரம்தான் பயன்பட வேண்டும். ஏமாற்றுக்காரர்களுக்கு எனது தண்ணீர் பயன்படக்கூடாது'' என்று கூறினர்.

மோகன்லாலுடைய வார்த்தைகள் எனது உள்ளத்தில் ஒரு பெரிய சலசலப்பை உண்டாக்கிற்று. ஒரு மண்ணுன பாவியான மனிதன் தனது கண்களுக்கு முன்பாக நடக்கும் ஒரு அக்கிரமமான காரியத்தை சகித்துக் கொள்ள சற்றும் மனம் அற்று இருக்கும்போது தேவாதி தேவன், கர்த்தாதி கர்த்தா, பரிசுத்தமுள்ள ஆண்டவர், தனக்கு முன்பாக மனுஷன் செய்யும் பாவ அக்கிரமங்களை வெறுமனே பார்த்துக்கொண்டு எப்படி சும்மா இருக்கக்கூடும்? வேதாகமத்தில் நாம் அவரை தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணன் (ஆபகூக் 1 : 13) என்றல்லவா நாம் பார்க்கின்றோம்.

மனுஷன் செய்யும் அநியாய அக்கிரமங்களை தேவன் பொறுமையாக பார்த்துக் கொண்டே இருப்பார். ஆனால், அதற்கான தண்டனையை அவனுக்கு கொடாமல் அவர் விடமாட்டார். ''அநியாயம் செய்கிறவன் தான் செய்யும் அநியாயத்துக்கு ஏற்ற பலனை அடைவான், பட்சபாதமே இல்லை'' என்று வேதாகமத்தில் நாம் பார்க்கின்றோம். ரஷ்யாவின் புகழ்பெற்ற கிறிஸ்தவ எழுத்தாளர் டால்ஸ்ட்டாய் தனது கதை ஒன்றில் ''கடவுள் உண்மையைக் காண்கின்றார். ஆனால் நியாயம் வழங்குவதில் சற்று பொறுமையை கடைபிடிக்கின்றார்'' என்று எழுதுவார்.


பாகேஷ்வரில் மற்றொரு தவனபுள்ள ஆத்துமா

மோகன்லால் வசிக்கும் ஆரோலி என்ற கிராமத்துக்கு சற்று தொலைவில் உள்ள மற்றொரு சிறிய கிராமத்தில் சுந்தர் என்ற ஒரு வாலிபனையும் நாங்கள் சந்திக்க தேவன் கிருபை செய்தார். சுந்தர் நன்கு படித்து கல்கத்தா பட்டணத்தில் பணிபுரியும் வாலிபனுவான். அவனுக்கு 2 பிள்ளைகள் உள்ளனர். சுந்தர் ஒரு அன்புள்ள வாலிபன். தேவபிள்ளைகளாகிய எங்களை அன்பாக ஏற்றுக்கொண்டு நாங்கள் கொடுத்த தேவனுடைய பிரதிகளையும் ஆவலோடு வாங்கி வாசித்தான். அவனும், அவனது மனைவியும் எங்களுக்கு தேயிலை பானம் கொடுத்து அன்பாக உபசரித்தனர். சுந்தருக்கு சொந்தமான வீடும், வீட்டைச் சுற்றி செழுமையான மாந்தோப்பும் உள்ளது. ஓரளவு நல்ல வசதியான வீட்டில் தனது கிராமத்தில் வாழும் அவன் எங்களை தனது வீட்டில் வந்து தங்கும்படியாகவும் பாகேஷ்வரில் லாட்ஜில் தங்கவேண்டாமென்றும் கூறினான். ஓரிரு நாட்களில் தான் தனது வேலைக்காக மனைவி மக்களுடன் கல்கத்தா போகப்போவதாகவும் தனது வீடு கிராமத்தில் சும்மாதான் கிடக்கும் என்றும் எங்களிடம் சொன்னான். அவனது அசாதாரணமான அன்பு எங்களை வெகுவாக கவர்ந்தது.


சுந்தர் தனது கிராமத்தை குறித்து கூறும்போது திருட்டு என்பது தனது கிராமத்தில் கிடையாது என்றும், கிராமத்திலுள்ள எந்த ஒரு

வீடும் பூட்டப்படுவதில்லை எனவும் எங்களிடம் சொன்னான். ஒரு வீடு தனது கிராமத்தில் கட்டுவதானால் கிராமத்திலுள்ள எல்லா மக்களும் ஒன்று சேர்ந்து வந்து மலைகளிலிருந்து மரங்களை வெட்டிக்கொண்டு வந்து யாவரும் சேர்ந்தே வீட்டைக்கட்டுவார்கள் என்றும் கூறினான். அத்தனை ஒற்றுமையாக தனது கிராம மக்கள் இருப்பதாக சுந்தர் எங்களிடம் பெருமையாக சொன்னான். அத்துடன் கிராமத்தில் விபச்சார வேசித்தனத்தின் வார்த்தை கூட பேசப்படக்கூடாது என்றும் மக்கள் அத்தனை ஒழுக்கத்தோடு வாழ்கின்றனர் என்றும் கூறினான். எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவனது வார்த்தையில் எந்த ஒரு பொய்யும் இல்லை என்பதை நாங்கள் எளிதாக காண முடிந்தது.

சுந்தருக்கு ஒரு ஹிந்தி புதிய ஏற்பாடு மற்றும் பயன் உள்ள தேவனுடைய பிரசுரங்களை எல்லாம் அவனது கல்கத்தா முகவரிக்கு நாங்கள் அனுப்பி வைத்ததுடன் ஒரு ஹிந்தி மொழி தங்க வசன காலண்டரையும் அனுப்பி வைத்தோம். கடந்த ஆண்டு பாகேஷ்வர் சென்றிருந்த சமயம் திரும்பவும் சுந்தரையும் அவனது குடும்பத்தையும்



நாங்கள் சந்திக்க தேவன் கிருபை செய்தார். இந்த சந்திப்பும் கர்த்தரால் ஒழுங்கு செய்யப்பட்டது என்பதை நர்ங்கள் திட்டமாக அறிந்தோம். காரணம், அந்த சகோதரன் அந்தச்சமயத்தில் கல்கத்தாவிலிருந்து தனது ஊருக்கு வரவேமாட்டார்களாம். தனது உடன் பிறந்த சகோதரன் திடீரென இறந்துவிட்டபடியால் லீவு எடுத்து வந்ததாக



கூறினேன். எங்களை அவன் சந்தித்தது அவனுக்கு மிகுந்த சந்தோசத்தை அளித்தது. துக்கத்தோடிருந்த அவனுக்கு நாங்கள் ஆறுதல் கூறினோம். எங்கள் கைவசமிருந்த சுவிசேஷ பிரதிகளை எல்லாம் வகைக்கு ஒன்றாக அவனுக்கு கொடுத்தோம். அத்துடன் அவன் வீட்டு முற்றத்தில் கூடியிருந்த இந்து புரோகிதர்களுக்கும் பிரதிகளை ஜெபத்துடன் வழங்கினோம். அவனுடைய தம்பியின் மரண சடங்கில் கலந்துகொள்ள அந்த புரோகிதர்கள் அங்கு கூடியிருந்தனர். மரணமடைந்த தம்பியின் உடலை முந்தின நாள்தான் தகனித்து அஸ்தியை பாகேஷ்வரிலுள்ள சரயு நதியில் கரைத்ததாக சுந்தர் எங்களிடம் துயரத்தோடு சொன்னான்.

''க்டந்த ஆண்டு என்னையும் குடும்பத்தையும் எடுத்த புகைப்படம் எங்கே ?'' என்று சுந்தர் கேட்டான். அதை நாங்கள் எங்கள் கரத்தில் எடுத்துச்சென்றிருந்ததால் அவனிடம் கொடுத்தபோது மட்டற்ற சந்தோசம் அடைந்து எங்களை உண்மையுள்ள தேவமக்கள் என்று கண்டு கொண்டான். ஆங்கிலத்தில் சரளமாக பேசும் அவனுடன் நாங்களும் ஆங்கிலத்திலேயே பேசி தேவ அன்பை பகிர்ந்து கொண்டோம்.

மேற்கண்ட சுந்தர் என்ற வாலிபனை திரும்பவுமாக சந்திக்க கிருபை செய்த ஆண்டவர் அவனைக்குறித்து தமது உள்ளத்தில் ஒரு மேலான நோக்கம் நிச்சயமாக கொண்டிருக்க வேண்டும் என்று முழுமையாக விசுவாசிக்கின்றோம். கர்த்தர் இந்த வாலிபனையும் சந்தித்து தமது


பிள்ளையாக்க நீங்களும் அன்பாக ஜெபித்துக்கொள்ளுங்கள். சுந்தரையும் அவனது மனைவி, பிள்ளைகள் படத்தை நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம். சுந்தருடைய கிராமத்தில் நடைபெற்ற தேவ ஊழியத்தின் போது நமது சகோதரனிடமிருந்து தேவனுடைய பிரசுரம் ஒன்றை வாங்கி வாசிக்கும் ஒரு பெண் மகளின் படத்தையும் நீங்கள் இந்தச் செய்தியில் பார்க்கலாம்.

பாகேஷ்வரில் நாங்கள் மோகன்லாலுக்கும், சுந்தருக்கும் மாத்திரம் சுவிசேஷம் அறிவிக்கவில்லை. கடை வீதிகளில் உள்ள பலருக்கும் பாகேஷ்வருக்கு சற்று தொலைவிலுள்ள பேஜ்நாத், பட்கலி, கௌசானி போன்ற இடங்களுக்கெல்லாம் சென்று தேவனுடைய நற்செய்தியை நாங்கள் கொடுத்து வந்தோம். கர்த்தர் தயைசெய்தால் அந்த ஊழிய செய்திகளை படங்களுடன் உங்களுடைய ஜெபங்களுக்காக பின்னர் எழுதுவேன்.



நாங்கள் செலவுசெய்யும் ஒவ்வொரு காசிலும் ஒரு சுவிசேஷ பிரதியை கொடுக்க ஜாக்கிரதையாக இருப்போம். கடையில் ஒரு டீ குடித்தாலும், ஏதாவது பொருட்கள் வாங்கினாலும் பணம் கொடுக்கும் போது அத்துடன் சுவிசேஷமும் செல்லும். ஆட்டோவில் அல்லது டோங்காவில் ஏறின உடனேயே அந்த நபருக்கு கொடுக்கக்கூடிய சுவிசேஷ பிரதியை எடுத்து ரெடியாக கரங்களில் வைத்துக்கொள்ளுவோம். நாங்கள் தங்கும் லாட்ஜின் அல்லது தர்மசாலையின் உரிமையாளர், மானேஜர், பணி

ஆட்கள் அனைவருக்கும் ஆண்டவருடைய பிரசுரங்கள் கட்டாயம் போய் சேர்ந்துவிடுவதுடன், நாங்கள் தங்கியிருந்துவிட்டு காலிசெய்யும் அறையிலும், லாட்ஜின் இதர அறைகளிலும் இரட்சகரின் ஜீவனுள்ள வார்த்தைகளைவிட்டுவிட்டு செல்ல விழிப்பாக இருப்போம். எல்லாவற்றிற்கும் மேலாக சந்தித்த ஆத்துமாக்கள், சுவிசேஷ ஊழியம் செய்த இடங்களை நினைவுகூர்ந்து தொடர்ந்து தேவ பெலத்தால் ஜெபிப்போம். எல்லா துதியும் கனமும் நமது அருமை இரட்சகர் இயேசு ஒருவருக்கே உண்டாவதாக.



சகோதரன் நார்ட்டன் அவர்கள் மோகன்லாலுக்கும் அவனது நண்பர்கள் இருவருக்கும் தேவனுடைய சுவிசேஷம் அறிவிக்கும் படத்தையும் நீங்கள் இந்தச்செய்தியில் பார்ப்பதுடன் மற்றொரு படத்தில் மோகன்லால் இடது கைப்பக்கம் இரண்டாவது ஆளாக நம்முடைய சகோதரன் அருகில் தனது கரத்தில் நாங்கள் அளித்த சுவிசேஷ பிரதிகளுடன் நின்று கொண்டிருப்பதையும் நீங்கள் காணலாம்.

மரணநிழலின் பள்ளத்தாக்குப் பாதை

இமயமலைகளின் இந்தப்பகுதி ரஸ்தாக்கள் மிகவும் பயங்கரமானவைகளாகும். நாங்கள் பாகேஷ்வரிலிருந்து பித்தோராகார் என்ற இடத்துக்கு பேருந்தில் பயணமானோம். பேருந்து ஒரு குறிப்பிட்ட இடம் வரவும் பேருந்தின் டிரைவர் வாகனத்தை ஒரு இந்து கோயிலின்

முன்பாக ரஸ்தா ஓரமாக நிறுத்தினர். அந்தக்கோயிலின் முகப்பு முழுவதும் சிறிதும் பெரிதுமான ஏராளமான வெண்கல மனிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. கோயிலுக்குள் சென்று கடவுளை தரிசிக்க செல்லும் ஒவ்வொருவரும் அந்த திரளான மணிகளில் ஒன்றை அடித்து ஒலி எழுப்பி கடவுளை வணங்கிவிட்டு திரும்பவும் மணி அடித்தே வெளி வருகின்றனர். இந்தக் கோயிலில் டிரைவர் உட்பட பயணிகள் அனைவரும் எங்கள் இருவரைத் தவிர கடவுளை வழிபட்ட பின்னர் பேருந்து தனது பயணத்தை திரும்பவும் ஆரம்பித்தது. இந்த இடத்தி லிருந்து எங்கள் பேருந்து பயங்கரமான மரண நிழலின் பள்ளத்தாக்கு வழியாக செல்லுவதை நாங்கள் கவனித்தோம். பேருந்துக்கு மேலாக மலையானது பேருந்தின் கூரையை தொட்டுக்கொண்டு இருப்பதுபோல இருந்தது. மலையை செதுக்கி ரஸ்தாவை உருவாக்கி இருப்பதை நாங்கள் கவனித்தோம். மிகவும் குறுகலான பாதை. எங்கள் இடது கைபக்கம் பல்லாயிரக்கணக்கான அடிகள் செங்குத்தாக கெடு பாதாளம் தனது வாயை ஆவென்று அகலத் திறந்து கிடந்தது.

திடீரென்று எங்கள் பேருந்துக்கு எதிராக ஒரு வேன் வந்தது. அதின் கூரையில் மஞ்சள் துணி சுற்றி ஒரு பிணம் கட்டப்பட்டிருந்தது. இரண்டு வாகனங்களும் எப்படி ஒன்றுக்கொன்று இடம் கொடுத்து செல்லப்போகின்றது என்று நாங்கள் பயத்தோடும், நடுக்கத்தோடும் கவனித்தோம். சகோதரன் நார்ட்டன் அவர்கள் துக்கத்தோடு எனது முகத்தைப் பார்த்தார்கள். ''இந்த இடத்தையா ஊழியம் செய்ய தேர்ந்து கொண்டீர்கள்?'' என்று அவர்கள் தனது வாய்க்குள்ளாக முணங்கிக்கொண்டார்கள். அவர்களுக்கு நான் என்ன பதில் கூறமுடியும்?''. எந்த ஒரு பராக்கிரமசாலியும் திகிலடைந்து முகம் கருத்துப்போகக்கூடிய சாநிழலின் பள்ளத்தாக்கு பாதை அல்லவா அது ! அந்த பாகேஷ்வரில்தான் தேவன் நமக்கு மோகன்லால் என்ற கனியை வைத்திருந்தார். அந்த பாகேஷ்வருக்கு அழைத்துக்கொண்டு சென்றதும் அவரேதான்.

பொதுவாக இப்படி பேருந்து செல்லும் வழித்தடத்தில் ஒரு இந்துக் கோயில் வந்து அந்தக் கோயிலில் பேருந்தின் டிரைவரும், பயணிகளும் இறங்கி அவர்கள் கடவுளை கும்பிடுகிறார்கள் என்றால் அதின் அடுத்த கோணத்தில் அடுத்து ஒரு பயங்கரமான பாதை வழியாக பேருந்து செல்லப்போகின்றது என்பதை நாம் நமக்குள்ளாக இலகுவாக யூகித்துக் கொள்ளலாம். இதை நாங்கள் இமயத்தில் காண முடிந்தது.

1997 ஆம் ஆண்டு முதன் முறையாக நாங்கள் பாகேஷ்வர் பட்டணத்துக்கு வரும்போது பட்டணத்தை நெருங்க, நெருங்க மழை நன்கு பிடித்துக்கொண்டது. பேருந்து பாகேஷ்வரை வந்து சேர்ந்ததும்

பேருந்திலிருந்து நாங்கள் இறங்கி மழையில்தான் நடந்து சென்று கொண்டிருந்தோம். எங்கே தங்குவது? எந்த ஒரு இடம் தங்குவதற்கு பாதுகாப்பாகவும், குறைவான வாடகையிலும் கிடைக்கும் என்று எங்களுக்கு எதுவும் தெரியாது. ஆனால், பாதைகாட்டும் மாயேகோவா எங்களை பேருந்து நிலையத்துக்கு அருகிலேயே சரயு நதிக்கரையில், மாமரங்கள் சூழ்ந்த இயற்கை சூழலில் சுத்தமான, பாதுகாப்பான, குறைந்த வாடகையுள்ள ஒரு லாட்ஜை எங்களுக்கு காண்பித்தார்.

பறவைகளை நேசிப்பவனை எனக்கு அந்த மாமரங்கள் நிறைந்தாற் போல மைனாக்களை தேவன் தந்தார். மாலை நேரம் ஆக, ஆக பல இடங்களிலிருந்தும் மைனாக்கள் அந்த மாமரங்களுக்கு பறந்து வந்த வண்ணமாக இருக்கும். சூரியன் அஸ்தமித்து பூமியை இருள் முழுமை யாக கவ்வும் வரை மைனாக்களின் சத்தம் காதை அடைப்பதாக இருக்கும் ஒரு பெரிய சந்தையில் மக்கள் இடும் சத்தம்போல அது இருந்தது. அப்படி அவைகள் இட்ட சத்தத்தை நான் எனது வாழ்வில் எங்கும் கேட்டதில்லை. பொழுது விடிந்து சூரிய ஒளி பூமியில் விழுவதற்கு வெகு முன்னமேயே அந்த மைனாக்கள் சத்தமிடத் தொடங்கிவிடும். ஆம், தங்கள் சிருஷ்டிகரை பாடித்துதிக்க ஆரம்பித்து விடும். நானும் சகோதரன் நார்ட்டன் அவர்களும் அதிகாலை எழுந்து தேவனை துதிக்க வசதியாக அந்த மைனாக்களின் சத்தம் உதவி செய்தது. இந்தச் செய்தியை நான் எழுதும்போதும் அந்ததிரள் கூட்டமான மைனாக்களின் குரல்கள் எனது காதுகளில் கேட்கின்றது.

லாட்ஜில் எங்கள் அறைக்கு முன்பாக போடப்பட்டிருந்த மேஜை நாற்காலிகளில் நாங்கள் இருவரும் அமர்ந்து நதியையும், அழகான மாந்தோப்பையும் பார்த்தவண்ணமாக தேவனுடைய வசனங்களை தியானித்த மணி நேரங்களை அத்தனை எளிதாக மறக்கவியலாது. சுவிசேஷத்தை தூக்கிச் சுமக்கும் அற்பமான கழுதைகளுக்குத்தான் எத்தனை பாக்கிய சிலாக்கியம் பாருங்கள்! எல்லா துதியும் ஆண்டவர் இயேசுவுக்கே உண்டாவதாக.

ஆண்டவர் இயேசுவை காட்டிக்கொடுத்த யூதாஸ் காரியோத்தை பனித்துருவத்தில் சந்தித்த பரிசுத்த துறவி பிராண்ட்டன்

பரிசுத்த துறவி பிராண்ட்டன் அயர்லாந்து தேசத்திலுள்ள துறவி மடத்தில் கி. பி. 484 ஆம் ஆண்டு முதல் கி. பி. 577 ஆம் ஆண்டு வரை 93 வயதுமட்டும் வாழ்ந்தவர். தேவன் பூலோகத்தில் படைத்த பரதீசை தேடிக்கொண்டு அந்த பரிசுத்த துறவி பிராண்ட்டன் பல நீண்ட பயணங் களை மேற்கொண்டதாக கூறப்படுகிறது. இவ்விதமான பயணங்கள் ஒன்றில் அவர் வடக்கு தீவுகளில் ஒரு அதிசயமான நிகழ்ச்சியை சந்தித்தார்.

அது ஒரு குளிரான புயற்காற்று வீசிக்கொண்டிருந்த இரவாகும். பரிசுத்த துறவி பிராண்ட்டன் பனிக்கண்டமான ஆர்ட்டிக் பகுதிக்கு அப்பொழுது தனது பயணத்தை ஆரம்பித்திருந்தார். அந்த பனிக் கண்டத்திலே அவர் பயணம் செய்து, செய்து மனுஷ சஞ்சாரமே முற்றும் இல்லாத ஒரு இடத்தை வந்து எட்டினர். அவரது தலைக்கு மேலாக துருவகண்டத்தின் ஒளி பிரகாசித்துக்கொண்டு இருந்தது. அது ஒரு கிறிஸ்மஸ் இரவு காலம். பனிக்கண்டத்திலே 6 மாதம் பகலாகவும் அடுத்த 6 மாத காலம் இரவாகவும் இருக்கும். துறவி பிராண்ட்டன் தனக்கு முன்பாக ஒரு பெரிய பனிப்பாறை மெதுவாக மிதந்து நகர்ந்து வருவதை கவனித்தார்.

அந்தப் பனிப்பாறையை அவர் கூர்ந்து பார்த்தபோது அந்த பனிப் பாறையுடன் ஒரு மனித உருவமும் அத்துடன் வந்து கொண்டிருப்பதை அவரால் காண முடிந்தது. அந்த காட்சியானது அவருக்கு மிகுந்த அதிர்ச்சியையும், பயத்தையும் கொடுப்பதாக இருந்தது. அந்த மனிதன் யார்? ஆம். அவன்தான் அருமை இரட்சகர் இயேசுவை காட்டிக் கொடுத்த துரோகியான யூதாஸ் காரியோத்து. யூதாஸ் உடைய திருட்டுத்தனமான பார்வையும், கோபத்துடனும், வெறுப்புடனும் காணப்பட்ட அவனது கண்களும் பரிசுத்த துறவி பிராண்ட்டனுடைய நாடியை தளரச்செய்வதாக இருந்தது. அவருடைய நரம்புகள் தாளை கட்டுவிட்டன.

துறவி பிராண்ட்டனுடைய முகம் பயத்தால் வெளிரிப்போனது. அவர் அந்த இடத்திலிருந்து எங்கும் தப்பி ஓட இயலாத நிலையிலிருந்தபோது ஒரு மென்மையும் சாந்தமுமான குரல் தன்னுடன் பேசுவதை அவர்

கேட்டார். ''பூலோகத்திலுள்ள மாந்தர் யாவரும் நான் இரட்சகர் இயேசுவை காட்டிக்கொடுத்த துரோகச் செயலை நன்கு புரிந்து வைத் திருக்கின்றனர். நான் ஒரு சபிக்கப்பட்ட பெயரை என் வசம் தாங்கி நிற்கின்றேன். அந்தப் பெயரை மாந்தர் தங்கள் உதடுகளால் உச்சரிக் கவும் விரும்புவதில்லை. எனது பாவங்களுக்காக நான் அவியாத நித்திய நரக அக்கினி ஜூவாலைகளில் வெந்து துயரமடைய ஆக்கினை தீர்ப்புக் குட்படுத்தப்பட்டுள்ளேன். ஒரு கிறிஸ்மஸ் இரவு காலத்தில் நான் நரக அக்கினியின் ஜூவாலைகளில் வெந்துகொண்டிருந்தபோது ஒரு தேவ தூதன் வந்து எனது தோளைத்தட்டி நரகத்திலிருந்து வெளியே புறப்பட்டுச் சென்று எனது வெந்து துடிதுடித்து வேதனைப்படும் சரீரத்தை ஒரு மணி நேரம் குளிர்ச்சிப்படுத்திக் கொள்ளும்படியாக கூறினான். அந்த இரக்க செயலுக்கு நான் எப்படி பாத்திரவானேன் என்று தேவதூதனைப் பார்த்து நான் கேட்டபோது பூமியிலே நான் இருந்த சமயம் நான் தற்செயலாக செய்த ஒரு அன்பின் செயலை அந்த தேவதூதன் எனக்கு நினைவு படுத்தினான். அந்த செயலை நான் நினைவுபடுத்திப் பார்க்கின்றேன். ஜோப்பா என்ற கடற்கரை பட்டணத் தெருவிலே நான் ஒரு ஏழை தஷ்டரோகியை பார்த்தேன். அந்த குஷ்டரோகி வயது முதிர்ந்தவனும் வஸ்திரமில்லாமல் நிர்வாணியாக காய்ச்சலினால் நடுநடுங்கிக்கொண்டி நந்தான். அவனுடைய சரீரம் எரிக்கும் வெயிலில் கிடந்தது. ''எனக்கு உதவி செய்யுங்கள். இல்லையெனில் நான் செத்துப்போவேன்'' என்று அவன் முணுமுணுத்துக்கொண்டிருந்தான். உடனே, நான் போர்த்தி யிருந்த எனது மேல் வஸ்திரத்தை எடுத்து அந்த எளிய, நிர்ப்பந்தமான குஷ்டரோகியை மூடிப்போர்த்தி வைத்துவிட்டு எனது வழக்கமான பாவச் செயல்களை செய்யச் சென்றுவிட்டேன்.

நான் அந்தச் செயலை அந்த குஷ்டரோகிக்கு எனது அன்பு மற்றும் பரிதாபத்தால் செய்யாமலும், எனது சக மனிதனுடைய துயரத்தை களைவதற்காக நான் அந்த அன்பை செய்யாமலும் எப்படியோ என்னை மறந்து செய்தேன். முற்றும் முக்கியத்துவமில்லாத ஒரு சாமானியமான என்னுடைய ஒரு செயலுக்கு வாட்டி வதைக்கும் தீ நாவுகளிலிருந்து ஆண்டுக்கு ஒரு தடவை ஒரு மணி நேர இளைப்பாறுதல் எனக்கு கிடைக்குமானால் தங்கள் முழு மனதோடும், அன்போடும் எப்பொழுதும் பிறருக்கு நன்மையும், தொண்டும் செய்யும் மாந்தருக்கு தேவனுடைய பரலோக இரக்கமும், கிருபையும் எத்தனையாக பாய்ந்தோடிக்கொண்டே இருக்கும்!

ஒவ்வொரு ஆண்டு கிறிஸ்மஸ் இரவு காலமும் அக்கினி கடலிலிருந்து நான் எழுந்து வந்து இந்தப் பனிக்கண்டத்திலே எனது வெந்து கொண் டிருக்கும் சரீரத்துக்கும், ஆத்துமாவுக்கும் ஒரு மணி நேர இளைப்பாறு தலைப்பெற்று ஆனந்திக்கின்றேன்.

யூதாஸ் காரியோத்தின் இந்த துயரமான வார்த்தைகளை கேட்ட பரிசுத்த துறவி பிராண்ட்டன் கண்ணீர் வடித்தார். அவர் தனது தலையை தாழ்த்தி ஒரு ஜெபத்தை ஒரு விநாடி ஏறெடுத்துவிட்டு தன்னுடைய தலையை நிமிர்த்திப்பார்த்தபோது யூதாஸ் அங்கில்லை. அவன் நரக பாதாளத்துக்கு போய்விட்டான்.

Oh, Brandan, think what grace divine
What blessing must true goodness shower
If semblance of it faint like mine !
Hath such inestimable power !
That germ of kindness, in the womb
Of mercy caught, did not expire;
Outlives my guilt, outlives my doom
And friends me in the pit of fire.

1822 ஆம் ஆண்டு முதல் 1888 ஆம் ஆண்டு வரை வாழ்ந்த ஆங்கிலப் புலவர் மாத்யூ ஆர்னல்டு என்பவருடைய கற்பனை கதையாகவும், பாடலாகவும் மேற்கண்ட கதை இருப்பினும் நாம் நம் ஆண்டவருக்காக முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் செய்யும் செயல்கள் யாவும் திரண்ட ஆசீர்வாதத்தை நமக்கு ஒரு நாள் அள்ளிக்கொண்டு வரும் என்பதில் எந்த ஒரு சந்தேகமும் கிடையாது. ஒருக்கால் அந்த ஆசீர்வாதம் இந்த பூலோகத்தில் நமக்குகிட்டாது போனாலும் பரலோகத்தில் அதற்கான பலன் தப்பாது நமக்கு உண்டு.

எங்கும் இலவசமாக கிடைக்கும் தண்ணீரை தம்முடைய அடியவருக்கு தமது நாமத்தினிமித்தம் குடிக்கக்கொடுக்கும் செயலுக்கு கூட நிச்சயமான பலனை தேவன் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணி இருக்கின்றாரே! ''சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் '' (மத் 10:42)

IF ONLY I WOULD HAVE KNOWN

The Queen of England often visits her country castles. On one occasion when she was walking by herself, it started to rain. She rushed to the shelter of the nearest cottage. The lady who came to the door was really angry that someone would bother her at that time of the morning. She opened the door a few inches and barked "What you want?". The Queen did not introduce herself. She merely asked "May I borrow an umbrella?"

"Just a minute", grumbled the woman. She slammed the door, was gone for a moment, and returned bringing the oldest umbrella she could find, one with broken ribs and small holes. She pushed it through the door and said "Here" . The Queen thanked her and went on her way with the ragged umbrella.

The next morning, the Queen's escort, dressed in full uniform, pulled up in front of the cottage. One of the escorts knocked on the door and returned the umbrella to the woman saying 'Madam, the Queen of England thanks you". As he walked away he heard her mutter, "If only I would have known, I would have given her my best"

Some day we will all stand before the king of Heaven, and some will be heard to mutter, "If only I would have known, I would have given you my best". God loved us and so He gave us His very best. His Son. Can we give Him anything less than our best?

''தமக்கு காத்திருக்கிறவர்களுக்கும், தம்மைத் தேடுகிற ஆத்துமாவுக்கும் கர்த்தர் நல்லவர்.
கர்த்தருடைய இரட்சிப்புக்கு நம்பிக்கையோடு காத்திருப்பது நல்லது (புலம்பல் 3 : 25, 26)


''சிங்கம் கெர்ச்சிக்கிறது, யார் பயப்படாதிருப்பான்''?
(ஆமோஸ் 3:8)

கர்த்தருடைய ஊழியத்தின் பாதையில் 1997, 1998 ஆம் ஆண்டுகளில் ராஜஸ்தான் மாநிலம் சென்றிருந்தபோது அந்த இரு ஆண்டுகளிலும் அந்த மாநிலத்திலுள்ள பிக்கானீர் பட்டணம் சென்றிருந்தோம். இந்த பிக்கானீர் பட்டணம் முழுமையாக தார் பாலைவனப் பகுதிக்குள்ளாகவே இருக்கின்றது. பாலைவனப் பரப்புக்குள் இருப்பதால் பிக்கானீர் பட்டணத்திலும் அதைச்சுற்றியுள்ள கிராமங்களிலும் திரளான ஒட்டகங்களை நாம் காணலாம்.

இந்தப்பட்டணத்தில் சில தினங்கள் நாங்கள் தங்கியிருந்து தேவ ஊழியம் செய்தோம். நாங்கள் இந்தப்பட்டணத்தில் விஷ்ணு தர்மசாலை என்ற தர்மசாலையில் தங்கியிருந்தோம். நாங்கள் தங்கியிருந்த அந்த விஷ்ணு தர்மசாலையானது அந்தப்பட்டணத்திலுள்ள மிருகக்காட்சி சாலைக்கு வெகு அருகாமையில் இருந்தது. அதின் காரணமாக அந்த மிருகக்காட்சி சாலையிலுள்ள சிங்கங்களின் கெர்ச்சிப்பு எங்களுக்கு வெகு துலாம்பரமாகக் கேட்கும். இரவு நேரங்களிலும், விடிபகல் வேளைகளிலும் அதின் கெர்ச்சிப்பு தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருக்கும். ஊர் அடங்கிய நள்ளிரவு நேரங்களிலும் மயான அமைதி கொண்ட இராஜாமங்களிலும் அவைகளின் கெர்ச்சனைகள் எந்த ஒரு தைரியசாலியையும் அச்சம் கொள்ளவைக்கும்.

பொழுது விடிந்து வருகிற வேளைகளில் அந்த சிங்கங்கள் ஏன் அப்படி கூப்பிட்டுக்கொண்டே இருக்கின்றன என்பது எங்களுக்கு புரியாத ஒரு புதிராக இருந்து வந்தது. ஆனால், ஒரு நாள் அந்த புதிருக்கு விடை எங்களுக்கு கிடைத்தது. அந்த விடிபகல் நேரம்தான் அந்த சிங்கங்களுக்கான மாடுகள் இரைக்காக அந்த மிருகக்காட்சிசாலைக்குள்ளாகவே வெட்டப்படுவதை நாங்கள் கவனித்தோம். அந்த மாடுகள் வெட்டப்படும்போது சிந்தப்படும் இரத்த வாடையால் கவர்ச்சிக்கப்பட்டு சிங்கங்கள் அவ்விதமாக குரல் எழுப்புகின்றன. அந்த சிங்கங்களில் ஒன்றின் படத்தை நீங்கள் இந்தச்செய்தியில் காணலாம்.

பிக்கானீர் பட்டணத்து சிங்கங்கள் கெர்ச்சிக்கும் போதெல்லாம் எனது உள்ளத்துக்குள் எழும்பும் தேவ வசனம் ''சிங்கம் கெர்ச்சிக்கிறது யார் பயப்படாதிருப்பான்?'' (ஆமோஸ் 3 : 8) என்ற வசனம்தான். சிங்கத்தின் கெர்ச்சிப்புக்கு உலகத்தில் உள்ள மாந்தர் அனைவரும்



பயப்படவே செய்வார்கள் என்று தேவ வசனம் திட்டமும் தெளிவுமாக கூறுகின்றது. நானும் கூட விஷ்ணு தர்மசாலையில் இரவில் படுத்திருக் கும்போது மிருகக்காட்சி சாலை சிங்கங்கள் எதிர்பாராத விதமாக தங்கள் கூண்டுகளிலிருந்து தப்பிவிடும் பட்சத்தில் அதற்கு அருகாமையில் இருக்கும் நமது கதி என்னவாகும் என்று சிந்திப்பதுண்டு.

அந்த சிங்கங்களின் கர்ச்சனைகளை குறித்து நான் படுக்கையிலேயே சிந்தித்துக்கொண்டிருக்கும் வேளைகளில் அந்த காட்டு மிருகங்களைக் காட்டிலும் பயங்கரமான சப்தத்துடன் கெர்ச்சிக்கும் வேறு சில சிங்கங்களை குறித்து நான் தியானிக்கத் தொடங்கினேன். ஆனால், அந்த சிங்கங் களின் கர்ச்சனைகளுக்கு மண்ணை மாந்தன் பயப்படுவதாக தெரியவில்லை.

முதுமை (விருத்தாப்பியம்) என்கின்ற சிங்கம்
கெர்ச்சிக்கின்றது, யார் பயப்படாதிருப்பான் ?

மானிடரின் சரீரத்தை நமது தமிழ் சித்தர்கள் ''காற்றடைத்த பை'' (பலூன்) க்கு உவமித்துக் கூறியுள்ளனர். முழுமையாக வெற்றிடமே இல்லாமல் காற்றடைகப்பட்ட ஒரு பலூனது கதிர வனின் ஒளிபட்டு பிரகாசிக்கின்றது. மினுமினுவென்று அது மின்னு கின்றது. அந்த காற்றடைத்த பை காண்பதற்கு வெகு அழகாக

இருக்கின்றது. ஆனால், அந்த காற்றடைத்த பையின் காற்று கொஞ்சம் கொஞ்சமாக குறையக்குறைய அதின் அழகும், கவர்ச்சியும் மங்கி மறைந்துவிடுகின்றது.

மானிட சரீரமும் அதைப்போலவே குழந்தைப்பருவத்தில் அழகுடன் ஆரம்பித்து அதின் முழுமையான அழகு வாலிபப்பிராயத்தில் பூரணமான பொலிவுடன் பரிமளிக்கின்றது. கன்னிப்பருவத்தில் இருக்கும் ஒரு பெண் வெகு அழகாக இருக்கின்றாள். கணவனுக்கு வாழ்க்கைப்பட்டு ஒரு குழந்தைக்கு அவள் தாயாகும்போது அவளது அழகும், அலங்கார மும், கவர்ச்சியும் மாற்றம் பெறுகின்றது. ''கோடி ஒரு வெள்ளை, கன்னி ஒரு பிள்ளை'' என்று தமிழிலே ஒரு முதுமொழி உள்ளது. புதிய வஸ்திரம் ஒரு வெளுப்புடனும், கன்னியானவள் ஒரு பிள்ளைப்பேற்று டனும் அழகும் அலங்காரமும் முற்றுப்பெறும்.

நாட்கள் செல்லச் செல்ல காற்றடைந்த பையான மானிட சரீரம் தொய்வு கொடுத்து, கொடுத்து இறுதியில் அதைக் காணக்கூட மனம் விரும்பாத நிலைக்குச் சென்று விடுகின்றது. விருத்தாப்பியம் கொடுமை யானது. அது பாடுகளுக்கும், வேதனைகளுக்கும் உரியது. வாலிப பருவத்தில் மானிட சரீரம் என்ற யந்திரம் ஓடிய ஓசையற்ற அருமையான ஓட்டம் முதுமையில் பெலன் குன்றி சரீர உருப்புகள் எல்லாம் தேய்மானம் கண்டு அவைகள் அனைத்தும் சத்தம்போடத் தொடங்கிவிடுகின்றன. கிழப்பருவத்தின் துயரமான சித்திரத்தை நாம் எல்லாரும் கண்டு உணரத் தக்கவிதமாக ஞானியார் அழகாக வரைந்து வைத்திருப்பதை பிரசங்கி 12 ஆம் அதிகாரம் முதல் ஏழு வசனங்களில் நாம் காணலாம்.

விருத்தாப்பியத்தை சமுதாயம் வெறுத்து ஒதுக்கித் தள்ளுகின்றது. ''கிழவன் சொல்கிண்ணரத்துக்கு ஏறுமா?'' என்ற பழமொழிப்படி வயதானவர்களின் சொல்லை மக்கள் எற்று கொள்ளார்கள். அவர் களுடன் பேசக்கூட மக்கள் விரும்புவதில்லை. குடும்பத்திலே வயதானவர் களை வீட்டிலிருந்து அப்புறப்படுத்தி வீட்டுத்திண்ணைகளுக்கு ஓரம்கட்டி விடுகின்றனர். பேருந்துகளிலே நாம் பயணம் செய்யும்போது கிராமப்புற வீட்டுத்திண்ணைகளிலே ஒரு திண்ணையில் தாத்தாவும், அடுத்த திண்ணை யிலே பாட்டியுமாக கட்டிலில் படுத்திருப்பதையும் அவர்கள் கட்டிலுக்கு கீழாக அவர்கள் ஆகாரம் சாப்பிடும் தட்டும், தம்ப்ளரும், அவர்கள் ஊன்றி நடக்கும் தடிக்கம்பும் இருப்பதை நாம் காண்கின்றோமே! அவர்களுடன் பேசி மகிழ யாருமே வருவதில்லை. பொதுவாக விருத்தாப் பியத்தில் இருப்பவர்களுக்கு நோய்நொடிகள் வந்து கட்டில் கிடையாகி விட்டால் அவர்களது துயரங்களை சொல்லி மாளாது. தாங்களாகவே கட்டில் கிடையாக கிடந்து நேரத்திற்கு நேரம் ஆகாரம் கொடுக்க ஆள் இல்லாமல், குளிப்பு இல்லாமல், ஆறுதலான வார்த்தைகள் கூறி அரவணைக்க ஆள் இல்லாமல் நிர்ப்பந்தமாக மடிகின்றனர். இப்படிப் பட்ட விருத்தாப்பியர்கள் மரணத்தை ஆவலோடு எதிர்நோக்கி

தங்களுக்கு சாவு வராதா என்று ஏங்கிப் பெருமூச்சுவிட்டு கதறுகின்றனர். ''மரணத்துக்கு ஆசையாய் காத்திருந்து, புதையலைத் தேடுகிறதுபோல அதைத் தேடுகிறவர்கள்'' (யோபு 3 : 20) என்று யோபு பக்தன் அதைக் குறித்து பேசுவார்.

வாசிப்போனே, நீ யாராக இருந்தாலும் உனக்கு விருத்தாப்பியம் வரவே போகின்றது. அந்த கொடிய விருத்தாப்பியத்தை குறித்து நீ எப்போதாவது சிந்தித்திருக்கின்றாயா? உனது தலையில் அங்காங்கு தென்படும் நரைமயிர்களானது விரைந்து உனக்கு வரப்போகும் கிழப்பருவத்தை சுட்டிக்காண்பிப்பதை நீ புரிந்து கொண்டாயா? விருத்தாப்பியம் என்ற சிங்கம் உனது வாழ்க்கை என்ற கானகத்திலே இப்பொழுது கெர்ச்சித்துக் கொண்டிருகின்றது. நீ பயப்படாதிருப்பாயோ? கிழப்பருவத்தை மனமகிழ்வோடு சந்தித்து அதற்கப்பால் உள்ள பரம கானன் வாழ்வை சுதந்தரிக்க இப்பொழுதே மனந்திரும்பி உனது இரட்சகரை அண்டிக்கொள்.

மரணம் என்கின்ற சிங்கம் கெர்ச்சிக்கின்றது யார் பயப்படாதிருப்பான்?

''நேற்று இருந்தவன் இன்று இல்லை என்ற பெருமையைத்தான் இந்த உலகம் கொண்டிருக்கின்றது'' என்று திருவள்ளுவர் தமது பாடல்கள் ஒன்றில் கூறியுள்ளார். உண்மைதான், இந்த உலகம் பெருமை கொள்ள வேண்டுமானால் அதை வைத்துத்தான் பெருமை பண்ணிக்கொள்ளவேண்டும். நமக்கு தெரிந்தவரை நம்மோடு வாழ்ந்த வர்கள் எத்தனை எத்தனை பேர் இந்த உலகத்தைவிட்டு விடைபெற்றுச் சென்றுவிட்டனர். சற்று இடைவெளி மாதங்கள் விட்டுவிட்டு தேவாலயத் தில் சாவு மணி ஒலித்தவண்ணமாக இருக்கின்றது.

எவ்வளவு திடகாத்திரமாக தெருக்களிலே பேசி சிரித்து கைவீசி நடந்து சென்றவர்கள் இன்று இந்த உலகத்தில் இல்லை. கல்லறை தோட்டத்திலே அவர்களது கல்லறை புற்களால் மூடப்பட்டுக்கிடக் கின்றன. நூறுண்டு காலம் திடமாக வாழப்போவதாக எண்ணி திட்டம் போட்டவர்கள் எல்லாரும் எத்தனை சீக்கிரமாக கல்லறைத்தோட்டத்திலே தங்கள் படுக்கைகளைப் போட்டுக் கொண்டுவிட்டார்கள்! வயதான விருத்தாப்பியர்களுக்கு சீக்கிரமாக வரவிருக்கும் மரணத்தைக்குறித்து துக்கப்பட்ட வாலிபர்களின் பிரேதங்கள் கல்லறைத் தோட்டத்துக்குச் சுமந்து செல்லப்படுவதைக்கண்டு அந்த விருத்தாப்பியர்களே துயரப் படுகின்ற நிலையை மரணம் உருவாக்கிக்கொடுக்கின்றது. எனினும் மனிதன் தனக்கு நேரிடப் போகும் மரணத்தைக்குறித்து கிஞ்சித்தும் கவலையின்றி வாழ்கின்றான். உலகத்தில் தனக்குமாத்திரம் மரணத்தி

லிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருப்பவன் போலவும் தான் மட்டும் என்றும் சிரஞ்சீவியாக வாழப்போகிறவன் போலவும் நிர்விசாரமாக வாழ் கின்ருன்.

தேவனுடைய வார்த்தை இவ்விதமாக கூறுகின்றது ''யோர்தான் பிரவாகித்து வரும்போது நீ என்ன செய்வாய் ?'' (எரேமியா 12 : 5) மனிதனே, மரணமாகிய யோர்தான் உன்னை மூழ்க்கடிக்க பிரவாகித்து வரும்போது நீ என்ன செய்யக்கூடும் ? ஆ, மரணத்துக்குப் பின்னர் மனந்திரும்புதல் இல்லை. மரணத்திற்குப் பின்னர் பரலோகம் செல்லு வதற்கு ஆயத்தம் செய்ய இயலாது. மரணத்துடன் யாவும் நித்தியமாக முத்திரையிடப்பட்டுவிடும். மனித வாழ்வில் மரணம் என்ற திரை விழுவதுடன் அனைத்தும் இம்மை மறுமைக்காக முற்றுப்பெறுகின்றது.

இந்த மரணமாகிய சிங்கம் கெர்ச்சிப்பதை கேட்டு யார் பயப்படாமல் இருக்கக்கூடும்? வாசிப்போனே, மரணமாகிய சிங்கம் உன்னை பட்சிக்கும் படியாக உனக்கு முன்பாக வந்து நின்று தான் கண்டு பிடித்த நல்ல இரைக்காக ஆனந்த கெர்ச்சிப்பு குரல் எழுப்பு முன்னர் உன் தேவனை சந்திக்கும்படி ஆயத்தப்படு.

முடிவில்லா நித்தியம் என்ற சிங்கம் கெர்ச்சிக்கின்றது, யார் பயப்படாதிருப்பான் ?

''நித்தியம்'' என்ற வார்த்தையை மனிதன் தனது சிந்தனையில் வைத்து சிந்திக்கவிடாதவாறு சத்துருவாகிய பிசாசானவன் மாந்தரின் மனதை குருடாக்கி வைத்திருக்கின்ருன். அந்த நித்தியத்தை குறித்து அவன் ஆழ்ந்து சிந்தித்து தியானம் செய்வானுனல் அவன் தனது இரட்சகரை நிச்சயமாக அண்டிக்கொள்ளுவான். ''முடிவில்லா நித்தியம்'' அல்லது ''ஊழி ஊழி காலம்'' என்ற வார்த்தை நம்மை நடுநடுங்க வைப்பதாக உள்ளது. நித்தியத்தில் காலம் காட்டும் கடிகாரம் கிடையாது. காலம்காட்டும் கடிகாரம், நிமிடம், மணி, நாள், வாரம், மாதம், ஆண்டு போன்றவற்றை காண்பித்து காலத்தை கணக்கிடும். ஆனல் நித்தியத்தில் அவை எல்லாம் தேவையில்லை. நித்தியத்தில் சூரியனின் உதயமோ, அஸ்தமனமோ கிடையாது. நித்தியம் தொடங்கி விட்டால் அவ்வளவுதான். அதற்கு முடிவே கிடையாது. யுகாயுகங்களாக அது முடிவின்றி போய்க்கொண்டே இருக்கும்.

நித்தியம் எவ்வளவு நீளமானது ? வேத பண்டிதர்கள் பலவிதமான உதாரணங்களை கூறுகின்றனர். நித்தியத்தைக்குறித்து கூப்பர் (C. A. Cooper) என்ற கர்த்தருடைய பிள்ளை தன் தேவ செய்தி ஒன்றில் குறிப்பிட்டிருப்பதை இங்கு நான் எழுத விரும்புகின்றேன்.

வாழ்க்கையானது, தனது முடிவற்ற நீண்டகாலக் கோட்டில் மகா குறுகியதொரு நாளாக மாத்திரம் இருக்கின்றது. துரிதமாக வாழ்வின் சூரியன் அஸ்தமித்து நித்தியத்தின் அதிகாலை உதயமாகும். முடிவற்ற நித்தியம் எல்லா ஆத்துமாக்களிலும் இருக்கின்றது. அந்த ஆத்துமா இரட்சிப்பைப் பெற்றிருந்தாலும் பெற்றிராவிட்டாலும் நித்தியம் அதிலுண்டு. மரணம் அனைத்திற்கும் முற்றுப்புள்ளி கொடுக்க முடியாது. இகலோக மானிட வாழ்வுக்கு அது முடிவு உண்டாக்கலாம். ஆனால் அதற்கப்பாலுள்ள வாழ்வின் முடிவற்ற தொடர்ச்சியை அதினால் இடை மறிக்க இயலாது.

பிரேதப் பெட்டியினுள் வைக்கப்பட்டிருக்கும் மலரால் அலங்கரிக் கப்பட்ட உன் ஜீவனற்ற சரீரத்திற்கு முன்பாகக் குருவானவர் ஒரு நாள் நின்று கொண்டு ''மண்ணுக்கு மண்ணுகவும், சாம்பலுக்குச் சாம்பலாகவும், புழுதிக்குப் புழுதியாகவும் இந்த சரீரத்தை ஒப்புக் கொடுக்கிறேன்'' என்று கூறும்பொழுது ''உண்மையான உன்னை'' (Real you) குருவானவர் கூறவில்லை. அவர் சொன்னது எல்லாம் சாவாமையின் ஜீவனைப் பூலோகத்திலிருந்த நாட்களில் தன்னகத்தே பாதுகாத்து வைத்துக் கொண்டிருந்த களிமண்ணை சரீரத்தைத்தான் கூறினர்.

''நீ'' ஒருக்காலும் சாகப்போவதில்லை. கோடைகால இரவு காலங்களில் மாத்திரம் கண்சிமிட்டி ஒளி வீசி நடனம் பண்ணிப் பிறகு மறைந்து அழியும் வெறும் மின்மினிப் பூச்சி அல்ல நீ. வானலோகப் பிதாவின் வீட்டில் நித்திய காலமாக ஜொலித்து இலங்கப்போகும் மாட்சிமை நட்சத்திரம் நீ.

மனிதன் ஏதோ தெருவைச் சுத்தம்பண்ணும் தோட்டிக்காகவும், அடுப்படி வேலைக்கான ஒரு சமையற்காரனுக்காகவும், ஒரு பணிப் பெண்ணுக்காகவும் கர்த்தரால் படைக்கப்பட்டவர்கள் அல்ல. சர்வ வல்ல தேவனுகிய தம்மை மனிதன் கண்டு உணர்ந்து அனுபவித்து ஆனந்திக்கவே அவன் படைக்கப்பட்டிருக்கின்றன்.

மானிட வாழ்வின் நிகழ்ச்சிகளும், சம்பவங்களும், அதின் நீண்ட ஆயுசு நாட்கள் என்று நாம் ஜம்பம் பேசிக்கொள்ளும் காலங்கள் அனைத்தும் முடிவற்ற நீண்ட நித்தியத்தின் கண்ணோட்டத்தில் யாரோ ஒருவர் சொன்னதுபோல ''நாம் சிசுவாக இருந்தபோது நாம் ஊஞ்சல் ஆடிய நமது சிறு தொட்டில் பலகை நமது பளிங்குக் கல் கல்லறையில் ஏற்படுத்திய சின்னஞ்சிறிய சிராய்ப்புகளேயன்றிப் பிறிதொன்று மில்லை''

நித்தியம் எவ்வளவு நீளமானது என்று நான் உங்களுக்குச் சொல் லட்டுமா! வானிலுள்ள நட்சத்திரங்களை எல்லாம் எண்ணித் தொகை

யிட்டுக் கொள்ளுங்கள். எல்லா நட்சத்திரங்கள் என்று நான் கூறும் பொழுது பால்வெளி வீதியிலுள்ள கோடிக்கணக்கான நட்சத்திரக் கொத்துகளையும் சேர்த்துத்தான் நான் கூறுகின்றேன். அந்த எண் ணிக்கைக்கு அடங்காத பெருந்தொகையான நட்சத்திரங்கள் ஒருபுறம் இருக்கட்டும். ஒரு நட்சத்திரத்திற்கு 100 ஆண்டுகள் என்ற வீதத்தில் அனைத்து நட்சத்திரங்களையும் பெருக்கித் தொகை எடுத்துக்கொள்ளுங் கள். அடுத்தபடியாக உலகத்திலுள்ள மாபெரும் சமுத்திரங்கள், கடல் கள், ஆறுகள், ஏரிகள் அனைத்தின் தண்ணீரையும் துளிகளாக (Drops) மாற்றுங்கள். ஒரு துளி தண்ணீருக்கு ஆயிரம் வருஷங்கள் என்ற வீதத்தில் அனைத்துத் துளி தண்ணீர்களையும் பெருக்கி அதின் மாபெரும் எண்ணிக்கையையும் ஒரு பக்கம் வையுங்கள். இறுதியாக இவ்வுலகத்திலுள்ள எல்லாப் புல்வெளிகளையும் எடுத்துக்கொள்ளுங்கள். புல்வெளிகளின் தனித்தனிப் புற்கள் அனைத்தையும் எண்ணித் தொகையிடுவதுடன் ஒவ்வொரு புல்லுக்கும் எத்தனை இதழ்கள் (Blades) இருக்கின்றன என்றும் கணக்கிடவேண்டும். புல்லின் ஒரு இதழுக்குப் பத்து இலட்சம் வருஷங்கள் என்ற வீதத்தில் அனைத்துப் புல்லின் இதழ்களையும் பெருக்கி அதின் பிரமாண்டமான எண்ணிக் கையை ஒருபுறம் வையுங்கள். இப்பொழுது மேற்கண்ட மூன்று தொகைகளையும் ஒன்றுகக் கூட்டுங்கள். அந்தப் பிரமிக்கத்தக்கதான மகா நீண்ட எண்ணிக்கையின் ஆண்டுகள் எல்லாம் கழிந்துபோகும் போது நித்தியம் அப்பொழுதுதான் ஆரம்பித்து ஒரே ஒருநாள் ஆகி இருக்கும்.

வாசிப்போனே, நித்தியம் என்ற சிங்கத்தின் கெர்ச்சிப்பு இப்பொழு தாவது உனது காதுகளில் விழுகின்றதா ? முடிவில்லா நித்தியம் என்ற சிங்கத்தின் கெர்ச்சிப்பு உனது ஜீவகாலமெல்லாம் உனது காதுகளில் கேட்டுக்கொண்டே இருக்கட்டும். பயத்தோடும், நடுக்கத்தோடு உனது இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படு. அக்கினியும் கந்தகமு கலந்து எரிகின்ற தீக்கடலில் உனது நித்தியம் ஆரம்பித்துவிடாதவாறு உனக்கு கிடைத்த இந்த கிருபையின் நாட்களில் உனது இரட்சாபெரு மானின் பாதங்களைப் பற்றிப்பிடித்து அவைகளை முத்தம் செய். ஏனெனில், இன்னும் கொஞ்ச காலத்திலே அவருடைய கோபம் பற்றி எரியும். அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள்.

அந்தக் கீரிப் பிள்ளையின் மூலமாக கர்த்தர் எனக்கு கற்றுத்தந்த பாடம்

ஒரு கர்த்தருடைய பிள்ளை தனது வாழ்வில் பார்ப்பது, படிப்பது, கேட்பது எல்லாம் தன்னை ஆட்கொண்ட தனது ஆண்டவர் இயேசுவுக் காகத்தான் இருக்கும். கர்த்தருக்கே துதி உண்டாவதாக.

சில ஆண்டு காலங்களுக்கு முன்னர் சென்னையிலுள்ள வண்டலூர் மிருகக்காட்சி சாலையை நான் காணச் சென்றிருந்தேன். மிருகங்களையும், பறவைகளையும் நான் பார்த்து முடித்து அப்படியே புலிகள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு வந்தேன். அது ஒரு சாயங்கால நேரம். என்னுடன் வேறு எவரும் அந்தப் புலியைப்பார்க்க அந்த நேரம் வரவில்லை. நான் அதைப் பார்த்த போது அது அப்படியே படுத்திருந் தது. அது தனக்கு கொடுக்கப்பட்ட அந்த நாளின் இறைச்சியை சாப்பிட்டுவிட்டு ஒரு பகுதியை அப்படியே சாப்பிடாமல் தனக்கு முன்பாக சற்று தூரத்தில் வைத்திருந்தது. நான் அதைப்பார்த்துக் கொண்டிருக் கும்போதே ஒரு பெரிய கீரிப்பிள்ளை எங்கிருந்தோ புலிக்கூட்டுக்குள் ஓடிவந்து புலிக்கு முன்பாக கிடந்த இறைச்சியை தின்ன ஆரம்பித்தது. அதைக்கண்ட புலியானது கோபத்துடன் உறுமுவதைப் பார்த்தேன். புலி உறுமலைக்கேட்டதும் கீரிப்பிள்ளை விரைவாக வெளியே ஓடிவிட்டு சற்று நேரம் கடந்த பின்னர் திரும்பவும் வந்து அந்த இறைச்சியை உண்ண ஆரம்பித்தது. கீரி உண்பதைக் கண்ட புலி திரும்பவும் உறுமல் கொடுத்தது. உறுமல் சத்தம் கேட்டதும் கீரி மீண்டும் ஓட்டம் பிடித்தது. இப்படியாக அவைகள் ஒன்றுக்கொன்று கண்ணும் மூச்சி விளையாட்டு விளையாடிக்கொண்டிருந்தன.

அந்தக்காட்சியை நான் மறக்கவே இல்லை. வருடங்கள் சில ஓடிய பின்னர் ஒரு நாள் கர்த்தர் அந்தக்காட்சியைக் கொண்டு ஒரு காரியத்தை எனக்கு விளக்கினர். கர்த்தர் எனக்கு வெளிப்படுத்திய காரியம் இதுவேதான் :-

(மகனே, அந்த கீரிப்பிள்ளை யாருக்காக அந்த இறைச்சியை சாப்பிட்டு வருகின்றது ? அந்தப்புலியாருக்காகவேதான் வாழ்ந்து அதற்கு இரையாவதற்காகவேதான் அது புலியினுடைய ஆகாரத்தை தினமும் உண்டு வருகின்றது. எப்படியும் ஒரு நாள் அந்தப் புலி சடுதியாக கீரியின் மேல் பாய்ந்து அதை தனக்கு இரையாக்கிக்கொள்ளும்.

அதற்கு சந்தேகமே கிடையாது. அப்படித்தான் சத்துருவாகிய பிசாசும் தனக்கு முன்பாக மண்ணுசை, பெண்ணுசை, பொன்னுசை போன்ற மாய உலக ஆசைகளை போட்டு அதை அனுபவித்து ஆனந்திக்க வரும் மாந்தரை கொஞ்ச காலம் அப்படியே அனுபவிக்க விட்டுவிட்டு ஒரு நாளில் அவர்களை சடுதியாக பற்றிப்பிடித்து பீறிப்போட்டு தனக்கு இரையாக்கிக்கொள்ளுகின்றான். இந்த மண்ணுசை, பெண்ணுசை பொன்னுசைகளுக்கு பின்னணியத்தில் இருப்பவன் பிசாசு என்பது அநேகருக்கு இன்றுவரை தெரியாது. புதையலை தனக்கு முன்பாக வைத்து காத்துக்கொண்டிருக்கும் பூதம்போல சத்துரு இந்த மூன்றுசை களுக்கும் பின்னுக மறைந்திருந்து காத்திருக்கின்றான். இந்த மாய ஆசைகளை அனுபவிக்கும் பேதை மாந்தரை ஒவ்வொரு தடவையும் பார்த்து உறுமி, உறுமி இறுதியில் ஒரு நாள் அப்படியே மரணம் என்ற தனது கோரப் பற்களால் கடித்துக் கிழித்து அவர்களை நரக பாதாளத் துக்குள் தள்ளிப்போடுகின்றான். இரைபோடும் சாத்தானுக்கே இறுதியில் அறியா மாந்தர் இரையாகிவிடுகின்றனர்) என்றார்.

அன்று நம் ஆண்ட வரையும் தேவாலயத்து உப்பிரிக்கையின் மேல் ஏற்றி இந்த மூன்று ஆசைகளைத்தான் சத்துரு அவருக்கு காண்பித்து அவைகளை அனுபவித்து ஆனந்திக்க நயம் காட்டினான். ஆனால், தேவ மைந்தன் அவனது உபாய தந்திரம் அறிந்து அவனது வல்லடிக்கு தம்மை விலக்கிக் காத்துக்கொண்டார். நமது இரட்சகரைப்போல நாமும் இந்த உலகத்தின் மாயைகளுக்கு நமது கால்களை விலக்கி ''ஜீவனே, நித்திய ஜீவனே'' என்ற வார்த்தைகளுடன் தலைதெறிக்க ஓடிய மோட்ச பிரயாணி கிறிஸ்தியானைப்போல நமது பந்தயப் பொருளை பெற்றுக்கொள்ளத்தக்கதாக மாயைகளுக்கு நமது கண்களை விலக்கி (சங் 119 : 37, யோனா 2 : 8) விரைந்து ஓடுவோமாக,

---

''யாக்கோபின் சந்ததியாரே, இஸ்ரவேல் சந்ததியில் மீதியாகிய சகல ஜனங்களே, எனக்குச் செவிகொடுங்கள். தாயின் வயிற்றில் தோன் றினது முதல் உங்களை ஏந்தி, தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியானது முதல் உங்களைத் தாங்கினேன். உங்கள் முதிர்வயதுவரைக்கும் நான் அப்படிச் செய்துவந்தேன். இனிமட்டும் நான் உங்களைத் தாங்குவேன். நான் அப்படிச் செய்து வந்தேன். இனிமேலும் நான் ஏந்துவேன், நான் சுமப்பேன், தப்புவிப்பேன்'' (ஏசாயா 46 : 3, 4)

நாம் இயேசுவைப்போல வாழ்ந்து காட்டும் காலம் வந்துவிட்டது

1999 ஆம் ஆண்டு ஜனுவரி மாதம் 22 ஆம் தேதி வெள்ளிக்கிழமை நள்ளிரவு ஒரிசா மாநிலத்திலுள்ள கியோஞ்சர் மாவட்டத்திலுள்ள மனோகர்பூரில் ஆஸ்திரேலிய மிஷனரி கிரஹாம் ஸ்டெயினஸ் மற்றும் அவரது அருமைப்பாலகர்கள் பிலிப்பு (வயது 10) தீமோத்தேயு (வயது 7) இருவரையும் அவர்கள் தூங்கிக்கொண்டிருந்த காரில் வைத்தே பொல்லாதோர் அப்படியே பெட்ரோல் ஊற்றி தீ வைத்து எரித்து சாம்பலாக்கிய சம்பவத்தை முழு உலகமும் கேட்டு கண்ணீர் சிந்தியது. எத்தனையோ குடும்பங்கள் அந்த கொடூரமான மரணத்தை தங்கள் சொந்த வீட்டு மரணமாக எண்ணி அழுது அங்கலாய்த்தனர். ஆண்டவருடைய திட்டமான அழைப்பின் பேரில் இந்தியாவுக்கு மிஷனரியாக வந்து ஆரம்பத்தில் குறிப்பிட்ட கியோஞ்சர் மாவட்டத்தில் குஷ்டரோகிகள் மத்தியில் 1965 ஆம் ஆண்டிலிருந்து தொண்டு செய்து கொண்டு அதின் மத்தியில் சுவிஷேத்தையும் அறிவித்து வந்த அந்த பரிசுத்த வானுக்கும் அவாது கண்மணிப் பாலகர்களுக்கும் அந்த இரத்தசாட்சியின் மரணம் கிடைத்தது.

மேற்கண்ட கொடூர சம்பவத்தை குறித்து கிறிஸ்தவ தேவ ஊழியர் ஒருவர் ஒரு குறிப்பிட்ட தமிழ் மாவட்டத்தைச் சேர்ந்த இந்து இயக்கத் தலைவர் ஒருவரிடம் கூறி ''நீங்கள் இப்படிச் செய்தது சரிதானே ?'' என்று கேட்டபொழுது அந்த மனிதர் கோபம் கொண்டு ''உங்களுக்கு இதுவும் வேண்டும். இன்னமும் வேண்டும். கிறிஸ்தவர்களாகிய நீங்கள் செய்யும் அட்டூழியங்களுக்கு கணக்குண்டா? எல்லாவற்றையும் நாங்கள் எங்கள் கண்களால் பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றோம். கிறிஸ்தவ மார்க்கத் தலைவர்களுடைய விபச்சார வேசித்தன வாழ்வுகளை நக்கீரன் போன்ற பத்திரிக்கைகள் படம் பிடித்துக்காட்டி எழுதி வருகின்றன'' என்று பதில் கூறினராம்.

நாம் இந்த இந்து இயக்கத் தலைவருக்கு என்ன பதில் கூற இயலும்? மெய்தான், நமது கிறிஸ்தவ வாழ்வில் சாட்சி கிடையாது. சுவிசேஷ ஊழியம் செய்யும் இடங்களில் சுவிசேஷ கைப்பிரதிகளை மற்றவர்களுக்கு கொடுக்கும்போது அந்த மக்கள் ''எங்களுக்கு இவைகளை தரவேண்டாம். நாங்கள் உங்களைவிட நல்லவிதமாக வாழ்கின்றோம். குடித்து, வெறித்து அநியாயமும், அக்கிரமமும், அசுத்த வாழ்வும் நடத்தும் உங்கள் கிறிஸ்தவ மக்களுக்கே இவைகளைக் கொடுங்கள்'' என்று கூறுகின்றனர்.

சுவிசேஷ ஊழியம் செய்வது என்பது இனிவரும் நாட்களில் இந்தியாவில் மிகவும் கடினமான காரியமாகும். நமது பரிசுத்தமான வாழ்வின் மூலமாகத்தான் நாம் இனி நமது இரட்சகரை பிறருக்கு அறிவிக்க முடியும். கிறிஸ்துவுக்குள்ளாக நாம் வாழும் பரிசுத்தமான வாழ்வின் மூலமாக கிடைக்கும் நமது பரிசுத்தமான முகங்கள்தான் மற்ற புறமதஸ்தரை ஆண்டவரண்டை வழிநடத்தவேண்டும்.

அன்று ஆலோசனை சங்கத்தில் உட்கார்ந்திருந்த அனைவரும் ஸ்தேவானின் முகத்தை தேவ தூதன் முகம் போல இருக்கக்கண்டார்கள் (அப் 6 : 15) என்று வேதாகமத்திலே நாம் பார்க்கின்றோம். அப்படியே

நமது கிறிஸ்தவ பரிசுத்த வாழ்வை மக்கள் நமது முகங்களில் கண்டு கர்த்தரை மகிமைப்படுத்த வேண்டும். தேச தந்தை காந்தியடிகள் சொன்னது போல ஒவ்வொரு இந்திய கிறிஸ்தவனும் ஒரு சின்ன இயேசுவாக மாற்றம் பெறுவானுனல் இந்தியாவை இயேசுவுக்கு சொந்தமாக்குவது எளிதான காரியம்தான் என்ற வாக்கை நாம் ஒவ்வொருவரும் நமது வாழ்வின் இலக்காகக் கொண்டு வாழ கர்த்தர் நமக்கு கிருபை செய்வாராக.

✻✻✻

இமயமலை தேனீக்கள் கற்றுத்தந்த பாடம்

இமயமலைகளின் அடிவாரத்தில் காதகோடம் என்ற ஒரு இடம் உள்ளது. இரயில் பாதை இந்த இடத்துடன் முற்றுப்பெறுகின்றது. இங்கிருந்து 90 கி.மீ தொலைவில் சுமார் 5500 அடி உயரத்தில் அல்மோரா என்ற பட்டணம் உள்ளது மலையின்மேல் கட்டப்பட்டுள்ள இந்த புராதன பட்டணம் அழகாக அமைந்துள்ளது. பட்டணத்திலிருந்து கீழே பார்த்தால் அடுக்கடுக்கான இமயமலை தொடர்களும், பச்சைப்பசேலென்ற பள்ளத்தாக்குகளும், பரவிப்படர்ந்து கிடக்கும் இமயமலை கிராமங்களும் கண்கொள்ளா காட்சியாக இருக்கின்றது.

இந்த அழகிய இமயமலைப்பட்டணத்தில் எங்களது தேவ ஊழியத்தின் பாதையில் இதுவரை இரண்டு தடவைகள் நாங்கள் வந்து தங்கி தேவ ஊழியம் செய்துள்ளோம். கர்த்தருடைய பெரிதான கிருபையால் இந்தப்பட்டணத்தின் அடிவாரத்திலுள்ள இரண்டு கிராமங்களில் இரு குடும்பங்களுக்கு நாங்கள் சுவிசேஷம் அறிவித்து அந்த அன்பான மக்களை ஆண்டவர் இயேசுவண்டை வழிநடத்திக் கொண்டு இருக்கின்றோம். அங்குள்ள மால் என்ற கிராமத்தில் லீலாதர் குடும்பத்தையும், சாக்குராபண்ட் என்ற கிராமத்தில் முன்னி என்ற ஒரு பெண்ணின் குடும்பத்தையும் இரண்டு தடவைகள் சந்தித்துள்ளோம். இதில் லீலாதர் குடும்பம் சுவிசேஷத்துக்கு மிகவும் இணக்கம் காட்டி வருகின்றார்கள். அதைப்பற்றிய விபரம் கர்த்தர் கிருபைகூர்ந்தால் பின்னர் நான் உங்களுக்கு எழுதுவேன்.

இந்த அல்மோரா பட்டணத்தில் நாங்கள் கடந்த ஆண்டு எங்களது சுவிசேஷ ஊழியத்தை முடித்துவிட்டு அங்கிருந்து பித்தோராகார் என்ற இடத்துக்குப் புறப்பட்டோம். பேருந்து அதிகாலையிலேயே புறப்படுவதாக இருந்ததால் நாங்களும் அதிகாலையே எழுந்து தேவ சமூகத்தில் எங்கள் இருதயத்தை உடைத்து ஊற்றி ஜெபித்து பிரயாணத்துக்கு ஆயத்தமானோம். நாங்கள் தங்கியிருந்த லாட்ஜின் அறை மிகவும் சுத்தமற்றதாக இருந்ததால் நாங்கள் மிகவும் சிரமப்பட்டோம். முந்தின இரவு சரியான தூங்கப்பாறுதலும் எங்களுக்கு கிடைக்கவில்லை.

எங்கள் மூட்டை முடிச்சுகளுடன் பேருந்து நின்றுகொண்டிருந்த இடத்துக்கு வந்தோம். பேருந்து புறப்பட சற்று நேரம் இருந்ததால் எங்களுடைய பொருட்களை பேருந்தில் வைத்துவிட்டு வெளியே நின்று கொண்டிருந்தோம். அருகில் ஒரு ஹோட்டல் திறந்திருந்தது. அங்கு உள்ள பெரிய கண்ணாடிப் பெட்டியில் விதவிதமான இனிப்பு பலகாரங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன தீபாவளிப்பண்டிகை நெருங்கிக்கொண்டிருந்ததால் வியாபாரத்தை அதிகாலையிலேயே தொடங்கி விட்டார்கள். நம் ஊர்களில் காணப்படும் பால்கோவா மிட்டாயைப்போன்ற ஒரு மிட்டாயை தயாரித்து விற்பனை செய்வதை விசேஷமாக எங்கும் காணமுடிந்தது. ஆனால் அதின் நிறம் சற்று கருஞ்சிவப்பாக காணப்பட்டதுடன் குன்று மணியைக்காட்டிலும் சற்று சிறிய அளவில் வெண்மையான எண்ணற்ற இனிப்பு உருண்டைகளை பால்கோவாவில் ஒட்டவைத்துள்ளனர்.

கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்த இனிப்பு பதார்த்தங்களை உண்ண பெரிய மலைத் தேனீக்களும், குளவிகளும் உள்ளே பறப்பதை நான் அந்த காலைவேளையிலே கவனித்தேன். பெட்டி திறந்திருக்கும்பொழுது அவைகள் பலகாரங்களின் வாசனை நுகர்ந்து எப்படியோ உள்ளே சென்றிருக்கின்றன. நான் அந்த கண்ணாடி காட்சிப் பெட்டியை நன்கு கவனித்தபோது நிறைய மலைத் தேனீக்களும், குளவிகளும் ஏற்கெனவே பெட்டிக்குள் செத்துக்கிடப்பதை கண்டேன். சில மலை தேனீக்களும், குளவிகளும் பெட்டிக்குள் உள்ள இனிப்பு பலகாரங்களை வகைக்கு வகை ருசிபார்த்து உண்டு ஒரு பலகாரத்திலிருந்து மற்றொரு பலகாரத்துக்கு பறந்து சென்று உண்பதை கவனித்த வேளையில் எல்லா பலகாரங்களையும் ருசிபார்த்து உண்டு தங்கள் வயற்றை நிறைத்துக்

DEVA EKKALAM
REGISTERED NEWS PAPER
Regn No. M : 8850 / 1970

கொண்ட சில தேனீக்கள் வெளியே பறந்துவர இயலாமல் பறந்து, பறந்து கண்ணாடிப் பெட்டியில் மோதி விழுவதை நான் துக்கத்துடன் பார்த்தேன். மோதி விழுந்த அவைகள் திரும்பவும் எழுந்து பறந்து மீண்டும் கண்ணாடியில் பறந்து மோதி விழுவதை கண்டேன். கண்ணாடிப் பெட்டியின் மூடி அடைக்கப்பட்டுவிட்டதால் அவைகளால் பறந்து வெளிவரக் கூடாமல் போயிற்று. இப்படி பறந்து மோதி, மோதி அவைகள் இறுதியில் செத்து மடியும் என்பதை நான் எனக்குள்ளாக யூகித்தேன். கண்ணாடிப்பெட்டிக்கு உள்ளே இந்த துயரமான நாடகம் ஒரு புறம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் வெளியே இருந்து ஒரு சிறு கூட்டம் மலைத்தேனீக்களும் குளவிகளும் மிட்டாய்கள் வைக்கப்பட்டுள்ள கண்ணாடிப்பெட்டிக்குள் செல்லுவதற்கான தருணத்தை எதிர்பார்த்து பெட்டி திறக்கப்படும் வேளையை எதிர்நோக்கி பெட்டிக்கு மேலாக துடிதுடிப்புடன் பறந்து கொண்டிருப்பதை நான் ஆச்சரியத்தோடு கண்ணுக்கினேன்.

அந்த காட்சியை பார்த்துக்கொண்டிருந்த என் உள்ளத்தில் அந்தக் காலை வேளையில் இவ்விதமான ஒரு தியான சிந்தனை என் நினைவுக்கு வந்தது. கண்ணாடி காட்சி பெட்டிக்குள் வைக்கப்பட்டிருக்கும் விதவிதமான இனிப்பு பலகாரங்களைப் போலவே, இந்த உலகத்திலும் பட்டம், பதவி, அந்தஸ்து, வீடு, வாசல், ஆஸ்தி, ஐசுவரியம், அழகு, அலங்காரம், வீண்பெருமைகள், கணவன், மனைவி, மக்கள், உற்றார், உறவினர், நாவிதமான போஜன பதார்த்தங்கள், கொழுமையான உணவுகள், மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை போன்றவைகளை நமது ஆத்தும அழிம்பனும் சாத்தான் இந்த மாயாபுரி சந்தை கண்ணாடி காட்சி பெட்டியிலே பார்வைக்கு இன்பமும், புசிப்புக்கு நல்லதுமாக வரிசைப்படுத்தி பாங்குற அடுக்கி வைத்திருக்கின்றன.

மண்ணுலக பேதை மாந்தர் மேற்கண்ட இன்பங்களை எல்லாம் தங்கள் வாழ்நாட் காலமெல்லாம் அங்குமிங்குமாக ஓடியாடி மாயலோக இன்பங்களை மனங்கொண்டமட்டும் ருசித்து, புசித்து, அனுபவித்து ஆனந்திக்கின்றனர். எல்லாவற்றையும் அனுபவித்து ஆனந்தம் கொண்டாடி முடிந்தது. இப்பொழுது வாழ்வில் விருத்தாப்பியம் தலைகாட்ட ஆரம்பிக்கின்றது. சரீரபெலன் ஒடுங்கத் தொடங்குகினறது. ஒரு காலம் ஒட்டி உறவாடிய சொந்தபந்தங்களெல்லாம் மெள்ள, மெள்ள நழுவிச்செல்லத் தொடங்குகின்றனர். குலையை நடுங்கவைக்கும் கொடிய தனிமை மெதுவாக கால் அடி எடுத்து வைத்து முன்னேறி வருகின்றது. இப்பொழுது மனிதன் ஆண்டவரைத் தேட தனது முகத்தை பரத்துக்கு நேராக திருப்புகின்றன். தேவனோடு பரலோகிலே என்றும் சுகித்து வாழும் பாக்கிய வாழ்வையும், நித்திய ஆனந்த இளைப்பாறுதலையும் இந்த நேரம் அவன் அதிகமாக நினைவுகூருகின்றன். அதற்காக கடவுளே, கடவுளே என்று கதருகின்றன். ஆனால், அவனுக்கு நேராக திறந்திருந்த தேவனுடைய கிருபையின் வாசல் எப்பொழுதோ அடைபட்டுப்போனதை அவன் உணரவில்லை. இப்பொழுது அவனுக்கு மீந்திருப்பதெல்லாம் அல்மோரா தேனீக்களுக்கும், குளவிகளுக்கும் மீந்திருந்த மூடப்பட்ட கண்ணாடிப்பெட்டி மாத்திரமே. கிழப்பருவமான இப்போது சாவை வாஞ்சித்து புலம்புவது ஒன்றே அவனது பங்காக தீருகின்றது.

இதை வாசிக்கும் தேவ ஜனமே, ''தேவனும் என்னை கைவிட்டார்'' என்று புலம்பிய கீழ்ப்படியாத சவுலைப்போல நீயும் ஓலமிட்டு புலம்பும் கொடிய காலம் உன்னைச் சந்திக்கு முன்னர் நீ ஆனந்தமாக ருசித்து மகிழும் உலக நேசத்தையும், சாத்தான் அளிக்கும் அற்பநிமிட இன்பங்களையும் உதறித்தள்ளி இரட்சா பெருமானின் பாதங்களுக்கு தீவிரித்துப் பறந்து சென்று அவைகளை முத்தம் செய்து பற்றி எரியப்போகும் தேவ கோபத்துக்கு உன்னை விலக்கிக் காத்துக்கொள். இதுவே அணுக்கிரக காலம் இன்றே இரட்சண்ய நாள்.

Edited and Published by N. Samuel
MAILING ADDRESS :- N. Samuel, Editor, "Deva Ekkalam",
Post Box No. 6, Kotagiri - 643 217. Nilgiris.